கல்கி

ஸ்வீட்டா...ஸ்லைட்டா...ஸ்மார்ட்டா...



KALKI • 02.08.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்





சிறுநீர் கசிவு பிரச்னையா?

இன்னும் ஏன் தயக்கம்?

"நீங்கள் அணுக வேண்டிய சிறப்பு மருத்துவர்

UROGYNECOLOGIST

இருமினாலோ,
தும்மினாலோ

சிறுநீர் கசிவு
ஏற்படுகிறதா?

"சிலிங் சிகிச்சை"

"வலியில்லாமல், இரத்தக் கசிவில்லாமல் ஒரே நாளில் வீடு திரும்புங்கள்". அமெரிக்காவில் UROGYNECOLOGY FELLOWSHIP பட்டம் முடித்த மருத்துவர்கள் உள்ள இந்தியாவில் முதல் ISO 9001:2000 Certified சிறப்பு மையம்

இப்போது கோவையில்

பாலா மெடிக்கல் சென்டர்
அண்டு ஆஸ்பிட்டல்,
901, திருச்சி ரோடு,
இராமநாதபுரம்,
கோயம்புத்தூர் 641 045.
0422-2323456, 2323333

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சலிங் அல்லது ஆலோசனை பெறலாம்.
ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY & RESEARCH FOR INCONTINENCE (GAURI)

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591
E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in



இந்த இதழ் வாசகர்களின் சிரிப்புக்காக

நகைச்சுவை ஸ்பெஷல்!




சமீபத்தில் இயக்குநர்களிலிருந்து நடிகர் அவதாரம் எடுத்தவர்களில் ஜனரஞ்சகமான வெற்றியைப் பெற்றிருக்கிறார் இயக்குநர் கம் நடிகர் சுந்தர்.சி. அவர் நடித்த 'ஐந்தாம்படை' வெளியாகவிருக்கும் இந்நேரத்தில் அவருடன் ஒரு மினி... சினி.. பேட்டி.

வடிவேலுக்கு

எப்படி இருக்கு நடிகர் அவதாரம்?

''சந்தோஷமாவும் கொஞ்சம் காமெடியாவும்தான் இருக்கு. ஆரம்பத்துல என்னோட நோக்கம் நடிப்பு இல்லை. அது பின்னாடி வந்த ஆசை. ஆனால், இப்ப நடிப்பு மேலதான் அதிக ஆர்வமிருக்கு. முதல் குழந்தை இருந்தாலும், ரெண்டாவதா பிறந்த குழந்தை மேல அதிக ஆர்வம் காட்டுவோம்ல அதுபோல. இயக்கம் எனக்கு முதல் குழந்தை. நடிப்பு ரெண்டாவது குழந்தை.''



"என் முதல் படம் 'தலைநகரம்' சூப்பர் ஹிட் ஆனதுக்கு வடிவேலு அண்ணன் காமெடிதான் காரணம்!"

உங்க உதவியாளர் இயக்கத்திலேயே தொடர்ந்து நடிப்பது ஏன்?

''நான் ஒண்ணும் பிறவி நடிகன் கிடையாதுங்க. அதனால என்னை நல்லா புரிஞ்சுக்கிட்டவங்க, எனக்கு ஏற்ற மாதிரி கதை பண்றாங்க. அந்தக் கதையில நடிக்கும்போது நமக்கு ஒத்து வருது. சில நேரங்கள்ல நடிப்புல சொதப்பினாலும் அவங்க அதை அட்ஜெஸ்ட் பண்ணியிருக்கறாங்க. அந்த ஒரு சௌகரியத்துக்குத்தான். மற்றபடி கேரக்டர் ரோல் நமக்கு ஒத்து வராது.''

வடிவேலு கூட உங்க மோதல் இன்னும் தொடருதா?

''வடிவேலு அண்ணனுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கேன். நான் முதல்ல ஹீரோவா நடிச்ச தலைநகரம் படம் சூப்பர் ஹிட் ஆனதுக்குக் காரணமே அவரோட காமெடி தான். அவரோட, ஒவ்வொரு காமெடியையும் அப்படி ரசிச்சுப் பார்க்கறவன் நான். இப்ப புதுசா வந்த படங்கள்ல கூட பின்னி பெடலெடுக்கறார்.

இடையிலே எங்க ரெண்டு பேருக்கும் மனஸ்தாபம் இருந்தது உண்மைதான். அதனால ரெண்டு பேருமே காயப்பட்டோம். இடையில சில குள்ள நரிகள் புகுந்து காயத்தைப் பெரிசாக்கப் பார்த்துச்சு. வேண்டாம். நாங்க ரெண்டு பேருமே சிங்கங்க. சிங்கிளாவே பார்த்துக்குவோம்னு சொல்லிட்டேன். இதோ இப்போ குரு சிஷ்யன்ல சேர்ந்து கலக்குறோம்ல!''

இயக்கம் அவ்ளோதானா?

நன்றி!

''இருபத்தைஞ்சு படம் இயக்கியாச்சு. பல சூப்பர் ஹிட்டையும் பார்த்தாச்சு. சில ஃப்ளாப்களையும் பார்த்தாச்சு. இயக்கம்ங்கறது ரொம்ப இம்சை. தொல்லையைத் தோள்ல கட்டிக்கிட்டு அலையறது போல. அதனால இப்போதைக்கு இயக்கற ஐடியா இல்லை. படம் தயாரிக்கிற ஐடியா இருக்கு.''

ஐந்தாம்படையைப் பத்திச் சொல்லுங்க?

''ஐந்து அண்ணன் தம்பிகளுக்குள்ள நடக்கற பாசப் போராட்டம்தான். என்னடா மறுபடியும் அண்ணன் தம்பியான்னு யோசிக்கத் தோணும். ஆனால், சினிமாவைப் பார்த்த கோட்டா சீனிவாசராவ், 'இதுபோல ஃபேமிலி என்டர்டெய்னர்தான் இப்போ வேணும். படம் சூப்பர் ஹிட்டாகும்'னு சொன்னார். இப்போதைக்கு என்னோட பதிலும் அதுதான்!''

– மகிமைராஜன்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagal.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின்
உண்மைத் தன்மைக்கு
கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

● எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்

? கலர் டீ.வி. வழங்க 2,500 கோடி ரூபாய் செலவிடும் அரசு, தனது நிதியில் ஒரு சிறு பகுதியை, குறைந்த விலையில் பால் வினியோகிக்கப் பயன்படுத்தலாமே?- இதை விஜயகாந்த் சுட்டிக் காட்டியிருக்கிறாரே?

! இலவச டீ.வி.யைவிட மலிவு விலை பால் நல்லதுதான். ஆனால், மக்களிடையே பாலின் தேவை அதிகரிக்கும் அளவுக்கு உற்பத்தி இராது; அதிருப்தி உண்டாகும். நிற்க, எதுவுமே இலவசமோ மலிவு விலையோ கிடையாது. எல்லாமே ஏழைகளும் செலுத்தும் மறைமுக வரிப்பணத்திலிருந்து திரும்பக் கிடைப்பதுதான்.

● எஸ்.சக்தி, இராஜபாளையம்

? அமைச்சரவை ஒப்புதலுடன் சிலைகள் நிறுவப்படுவதால், அதைத் தடை செய்ய முடியாது என்று உ.பி. உயர்நீதிமன்றம், மாயாவதி சிலை விவகாரத்தில் தீர்ப்பு அளித்துள்ளதே?

! என்ன செய்ய, சட்டம் அப்படித்தானே இருக்கிறது! அதன் அடிப்படையில்தானே தீர்ப்பு வழங்க முடியும். இதற்கு மேலே ஒரு தீர்ப்பு உண்டு - அது மக்களின் தீர்ப்பு. அது அடுத்த தேர்தலில் தர்ம நியாயமாகச் செயல்பட்டால், மகேசன் தீர்ப்பாக விளங்கும்.

● சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்

? 'எல்லோருக்கும் அவமானமாக இருப்பதால், அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதை நிறுத்த வேண்டும்' என்று அவ்வூழியர் சங்கத் தலைவர் சூரியமூர்த்தி சொல்லியுள்ளாரே?

! டூ லேட் அறிவுரை! லஞ்சம் வாங்காட்டிதான் அவமானம்ங்கற அளவுக்கு நிலைமை முத்திப் போச்சு!



● அவஸ்தையில் அதிகாரிகள்!

செய்திகளில் இடம்பெறுகிறாரே அழகிரி?

● வே.முருகேசன், சென்னை - 88

? ''கிராமங்களில் தடையில்லா மின்சாரம் கொடுக்காவிட்டால், மக்கள் குழந்தை உற்பத்தியில் ஈடுபடுவார்கள்; மக்கள் தொகை கட்டுப்படாது பெருகும்'' என குலாம் நபி ஆசாத் பேசியுள்ளாரே?

! நியூயார்க் நகரில் தொடர்ந்து சில நாட்களுக்கு மின் தடங்கல் ஏற்பட, அடுத்த ஒன்பதாவது மாதம் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, சராசரிக்கு மிக அதிகமாக இருந்தது என்பது சமீபத்திய சரித்திரம். எனவே, ஆசாத் சொல்வதில் உண்மை உண்டு; நயம் இல்லை! நெகடிவ் அணுகுமுறை! நெகடிவ்வும் பாஸிடிவ்வும்

இணைந்தால்தான் மின்சாரம் என்பதை அவர் மறக்கலாமோ!?

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? நிகர் உதவிகளை அவ்வப்போது செய்து, அடிக்கடி நாளிதழ் செய்திகளில் இடம்பெறுகிறாரே அழகிரி?

! தகுதியற்றவர்களுக்கும் உதவச் சொல்லி அவர் செய்யும் சிபாரிசுகளால், அதிகாரிகள் படும் அவஸ்தையும் நாளிதழில் இடம்பெற்றுள்ளதே! நாடாளுமன்றத்தில் அவர் இருக்கவேண்டிய நேரத்தில் இல்லாமல் போவதும் நாளிதழ்களில் இடம்பெற்றுள்ளதே!

● சராஜ.முரளி, கள்ளக்குறிச்சி ❒

? ஆந்திராவில் தெலுங்கானா, மஹாராஷ்டிராவில் 'விதர்பா', உ.பி.யில் 'பூர்வாஞ்சல்', 'ஹரித்பிரதேசம்' ... என தனி மாநில கோரிக்கைகள் நாடு முழுவதும் பூதாகாரமாக எழுந்துள்ளனவே?

! எல்லாம் அரசியல் வாதிகளின் சுயநலத்தால் உருவாவதுதான். தனி மாநிலம் எனில், முதல்வர் முதல் கடைநிலை ஊழியர் வரை எத்தனை புதிய புதிய பதவிகள்! எத்தனை சலுகைகள்! பணம் பண்ண எத்தனை வாய்ப்புகள்! தேசிய ஒருமைப்பாடு என்பது நம் அரசியல்வாதிகளின் அஜெண்டாவிலிருந்தே நீக்கப்பட்டுவிட்டதற்கும் இதுதான் காரணம்!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? திருமண நிச்சயதார்த்தத்தின்போது, சானியா மிர்ஸா அணிந்திருந்த வண்ணமயமான உடையின் மதிப்பு இருபது லட்சமாமே?

! வண்ணமயம் மட்டுமல்ல, கிரிஸ்டல் கற்களால் அலங்கரிக்கப்பட்டு வனப்பு மயமாகவும் இருந்ததால்தான் அத்தனை விலை! சானியாவின் ஆட்டமும் நல்வாழ்வும் விலைமதிப்பற்றவை என்பதை, அவர் கரம் பற்றப் போகிறவர் ஞாபகம் வைத்துக்கொண்டால் சரி.

● பி.என்.ஜெய்சங்கர், திருவாரூர் ★

? 495 இராணுவ வீரர்கள் மூன்று ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்டதாக ஏ.கே. ஆண்டனி கூறுகிறாரே?

! புள்ளிவிவரம் தந்தால் போதாது. எதனால் என்று ஆராய்ந்து, குறைகள் களையப்பட வேண்டும். வீர மர



● விலைமதிப்பற்ற விளையாட்டு!



● சட்டபூர்வ அதியாயம்!

ணத்துக்குத் துணிந்து வருவோர், கோழைகளாக மாறி உயிர்விட அனுமதிக்கலாமோ!

● பி.இசக்கி பாண்டியன், சங்கர் நகர்

? தமிழ்நாட்டு நகைச்சுவை நடிகர்களுள் விவேக், பத்ம விருது வாங்கியுள்ளார். மற்ற நகைச்சுவை நடிகர்களுக்கு அது கிடைக்காதது பற்றி தராசுவின் கருத்து...?

! கலைஞர்களைக் கௌரவிக்கத்தான் விருதுகள். விருதினைக் கௌரவப்படுத்தக்கூடிய திறமைவாய்ந்த கலைஞர்களும் உண்டு. சில வேளைகளில், விருதுகள் அந்தப் பொன்னான வாய்ப்பைத் தவற விடுகின்றன!

● ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம் (கரூர் மா.வ.)

? அரசு மனது வைத்தால் அவசரச் சட்டம் பிறப்பித்து மணல், அரிசி கடத்தலைக் கட்டுப்படுத்த முடியும்தானே?

! அவசரச் சட்டம் எதுக்கு? இருக்கிற சட்டங்களைத் தயவுதாட்சண்யம் இன்றிப் பிரயோகித்தாலே போதுமே. கட்டுப்படுத்திவிடலாம். ஆனால், தயவு காட்ட பணம் பிரயோகமாகிறதே!

● இரா.கல்யாணசுந்தரம், மதுரை

? 'ஐந்து ஆண்டுகளில், குடிசைகளே இல்லாத இந்தியாவை உருவாக்குவோம்' என்று பட்ஜெட் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதே?

! தேர்தல் வாக்குறுதிகள் போல பட்ஜெட் வாக்குறுதிகளும் மலினமாகி விட்டன.

● ஆர்.நாகராஜன், சென்னை-117

? தொழில்-வர்த்தக நிறுவன நன்கொடைக்கு நூறு சதவிகிதம் வருமான வரிவிலக்கு என்ற அறிவிப்பை எதிர்க்கட்சிகள் (கம்யூனிஸ்டுகள்கூட) எதிர்க்கவில்லையே? இதன் மர்மம் என்ன..?

! இதில் என்ன மர்மம் ... தொழில் - வர்த்தக நிறுவனங்கள் ஆளுங்கட்சிக்குத் தருவதில் ஒரு பகுதியாவது எதிர்க்கட்சிகளுக்கும் தரத்தான் செய்கின்றன. எதிர்ப்பையும் தர்மசங்கடக் கேள்விகளையும் வேறு எப்படித் தவிர்ப்பதாம்?



● நெகடிவ் அணுகுமுறை ● விருது சிந்தனை ● போதாத புள்ளிவிவரம் ● கட்டிக்காட்டும் கணக்கு

● வெ.ராம்குமார், வேலூர்

? கலைஞரின் சிலேடை சிதறலை ரசித்ததுண்டா? ரசித்ததில் பிடித்தது?

! ம்... ஒரு முறை சேலம் கவியரங்கில்... "ஒட்டுமா பழ உறவு / என்று நீர் கேட்பீர் / ஒட்டு மாம்பழ உறவு / சேலத்தில் இயற்கை!"

❑ ரூ.150/- பரிசு பெறுபவர் : சரவ.முரளி, கள்ளக்குறிச்சி

★ ரூ.75/- பரிசு பெறுபவர் : பி.என்.ஜெய்சங்கர், திருவாரூர்





சிரிக்கறதும் சிரிக்காததும்

உங்க இஷ்டம்!

ஹனீஷ் தாத்தா

அவன் : ராத்திரி சாப்பிட என்ன மெனு?

அவள் : நீங்க சொல்லுங்க! உங்க இஷ்டம்!

அவன் : சென்னா பட்டூரா!

அவள் : வேணாம்! ஒரே ஆயிலா இருக்கும்!

அவன் : அப்போ கக்கா சப்பாத்தி, தயிர் பச்சடி!

அவள் : நேத்துதானே அதைச் சாப்பிட்டோம்!

அவன் : அப்போ நான் வெஜ் அயிட்டம் ஏதாவது.

அவள் : அய்யோ! எனக்கு வயிறு அப்செட் ஆயிடும்!

அவன் : அப்போ வேறே என்ன சாப்பிடலாம்?

அவள் : நீங்களே சொல்லுங்க! உங்க இஷ்டம்!

அவன் : சினிமாவுக்குப் போகலாமா?

அவள் :சினிமாவுக்குப் போய் ஏன் டயத்தை வேஸ்ட் பண்ணனும்?

அவன் : நீயே சொல்லு! வேறே என்ன செய்யலாம்?

அவள் :நீங்க சொல்லுங்க! உங்க இஷ்டம்!

அவன் : சரி! அப்போ வீட்டுக்கே போயிடலாமா?

அவள் :உங்க இஷ்டம்!

அவன் : சரி! ஏதாவது பஸ் பிடிச்சுப் போயிடலாம்!

அவள் :பஸ்ஸா! ஒரே கூட்டமா இருக்குங்க!

அவன் : அப்போ ஏதாவது ஆட்டோவிலே போயிடலாம்.

அவள் :'ஷார்ட் டிஸ்டன்ஸ்'னு எவனும் வரமாட்டாங்க!

அவன் : சரி! அப்போ நடந்தே போயிடலாமா?

அவள் : வெறும் வயிற்றோடவா, டிஃபனே சாப்பிடலையே!

அவன் : அப்போ என்ன பண்ணலாம்? நீயே சொல்லு!

அவள் :உங்க இஷ்டம்!

அவன் : சரி! அப்ப முதல்லே ஏதாவது சாப்பிடலாம்!

அவள் :உங்க இஷ்டம்!

அவன் : என்ன சாப்பிடலாம்?

அவள் :நீங்களே சொல்லுங்க! உங்க இஷ்டம்!



''நகைச்சுவை உணர்வு அதிகமா இருக்கறது ஆண்களுக்கா? பெண்களுக்கா?'' - இந்தக் கேள்வியை கோவை, சிங்காநல்லூர் ஜெயேந்திரா கல்லூரியில் கொளுத்திப் போட்டோம். காளைகளும், கன்னிகளும் கலகலப்புடன் மோதிக் கொண்டனர்.

''பெண்களுக்குத்தான் நகைச்சுவை உணர்வு அதிகம். எந்த இடத்திலும் சரி, நாங்க பேச ஆரம்பிச்சோம்னு வெச்சுக் கோங்க அதுல சுவை இருக்குதோ இல்லையோ? கேட்டு நகைக்கிறதுக்கு ஆம்பிளைங்க பட்டாளமே சுத்திட்டு இருப் பாங்களே...'' - ஆரம்பமே அடாவடியாக இருந்தது.

சிரிக்க வைக்கறது

''அம்மணிகளா! அந்தக் காலத்திலேயே ராஜாக் களோட சபைகள்ல இராஜாவை கோபம், டென்ஷன், கவலையில் இருந்து ரிலாக்ஸ் செய்த தெனாலிராமன் பீர்பால்... மாதிரியான விகட கவிகளும், விதூஷகர்களும், ஆம்பளைங்கதான். அப்பப்ப எல்லாத்துலயும் ஸ்டைல் மாறிட்டு வர்ற மாதிரி அதுக்கப்புறம் என்.எஸ்.கிருஷ் ணன், சந்திரபாபு, நாகேஷ், விவேக், வடிவேலுனு மொத்தமா எல்லோரையும் சிரிக்க வைக்க நாங்க''- தம்பிகள் தவுலடித்தனர்!

''புராண காலத்தில் இருந்தே எங்க சிரிப்புக்கு வானத்தை வில்லா வளைக்கவா, மலையைப் பாயாச் சுருட்டவா, நிலாவைப் புடிச்சுத் தரவான்னு தொடங்கி இன்னைக்கு





லேட்டஸ்ட்டா செல் ஃபோனுக்கு சிம்கார்டு போட்டுத் தரவான்னு தாஜா பண்ணிட்டேதானே இருக்கீங்க...

அது மட்டுமா... நீங்க சொல்ற எல்லா நகைச்சுவை நடிகர்களும்கூட மதுரம், சகுந்தலா, மனோரமா, மாதவி, கோவை சரளான்னு ஜோடி சேராம இருந்திருந்தா அங்கே நகைச்சுவை எடுபடவே படாது. ஆனால் ஆச்சி மேடத்தையும் சரி, கோவை

யாரு?

சரளாவையும் சரி தனியே காமெடி பண்ணச் சொல்லுங்க. தூள் கிளப்பிடுவாங்க''- அடுத்தடுத்த பவுன்சர்களைப் போட்டுத் தாக்கினர் அம்மணிகள்.

தம்பிங்க எல்லாம் வீறுகொண்டு எழுந்து நின்று, ''ஐயோ மெகா சீரியல்கள்ல வர்ற பொம்பளைங்க பெரிசு, சிறுசுன்னு வித்தியாசம் இல்லாமே காலையில் இருந்து இராத்திரி வரை அழுதே கொல்றாங்க.

நாங்க 'அசத்தப் போவது யாரு', 'கலக்கப் போவது யாரு'ன்னு மூத்து மூத்தா- இரண்டு, மூணு ஷோதான் பண்றோம். ஆனாலும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறோம்ல. இப்ப என்ன பண்ணுவீங்க?''

தாளம் போட்டனர்.

''அந்தக் காலத்தில் டி.ஆர்.இராஜகுமாரி, இடையில கே.ஆர்.விஜயா, இப்ப சினேகான்னு புன்னகை அரசி பேரைத் தட்டிக்கிட்டு இருக்கோம். ஆனால் உங்கள்ல யாருக்கு அந்தப் பட்டப் பெயர் இருக்கு சொல்லுங்க... பார்க்கலாம்?''



அப்படிப் போடு... போடு...

''கமல் ஸார்தான் புன்னகை மன்னன் ஆச்சே'' என்று பசங்க பரிதாபமாகச் சமாளிக்க, ''அதுவும் எங்களைப் பார்த்து விதவிதமாகச் சிரிக்கப் போய்த்தான் அவருக்குப் போனாப்போகுதுன்னு அந்தப் பட்டம் தெரியுமா!'' என்று தலையில் அடித்தனர் அம்மணிகள்.

இரண்டாம் வருடம் பி.எஸ்ஸி., ஐ.டி. லாவண்யா ஒரு கதையைச் சொல்லி பசங்க எல்லோரையும் கதற அடிச்சாங்க.

''ஒரு ஆள் மனநல மருத்துவரைப் பார்க்கப் போனானாம். அவனுக்கு பி.பி., மனஉளைச்சல், துன்பம் என நிறையப் பிரச்னைகள். டாக்டர், 'பக்கத்தில் ஒரு சர்க்கஸ் ஷோ நடந்துட்டு இருக்கு. அங்க போனால் பஃபூன் சேஷ்டைகளைப் பார்த்தா வாய்விட்டுச் சிரிப்பீங்க. உங்க நோய் உங்களை விட்டுப் போய்விடும்' என்றாராம். 'அய்யா சாமி அந்தப் பஃபூன் நான்தான்'னு சொன்னானாம், தன்னோட மனசையே கட்டுப்படுத்திக்கத் தெரியாம மற்றவர்களைச் சிரிக்க வைக்க முயல்றதுல என்ன பிரயோசனம்?

ஆனால் நாங்க அப்படியில்லை. சிரிக்கறது, நகைச்சுவையாகப் பேசறது, அழறது எதுன்னாலும் மனம்விட்டுப் பண்றதனால எங்களுக்கு ஆம்பிளைங்க மாதிரி ஹார்ட் அட்டாக், அல்சர் எல்லாம் வர்றதே குறைவுதான்னு'' மெகா போடு போட்டனர்.

அதோடு விடாமல், ''பெண்கள்கிட்ட சிரிப்பும், நகைச்சுவை உணர்வும், எதையும் இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் இருக்கிறதனால, கணவன், குழந்தைகள், சொந்தம், அக்கம் பக்கம், வேலை செய்யற இடம்னு சமாளிச்சு எல்லாத்தையும் பொறுப்பா பாத்துக்க முடியுது''ன்னு பெருமையின் உச்சத்துக்குப் போனார்கள்.

''ரொம்ப பீத்தாதீங்க... எவ்வளவு சம்பாதித்தாலும் அதுக்குப் பத்தலை இதுக்குப் பத்தலைன்னு புலம்பியே மனுசனை எப்பப் பார்த்தாலும் வெறுப்பேத்தற உங்களைச் சமாளிக்க கடவுள் எங்களுக்குக் கொடுத்த டானிக்தான் இந்தச் சிரிப்பும் நகைச்சுவையும்... - பசங்க கடுப்படித்தனர்.

'நகைச்சுவை ஸ்பெஷலுக்கு ஒரு காமெடி கலாட்டாவை எதிர்பார்த்துப் போனால் அடிதடி கலாட்டா ஆகிடும் போல இருக்கே' எனப் பயந்து, ''ரெண்டு சைடுலயும் ரொம்ப நகைச்சுவை உணர்வோடதான்யா பேசினாங்க. நம்ம புள்ளைங்க எல்லோருக்குமே நகைச்சுவை உணர்வு அதிகம்தான்யா... நாளை சந்திப்போமா...'' என்று சாலமன் பாப்பையா போல சமரசம் செய்து வைத்து அப்பீட்டானோம்.



பேட்டி, படங்கள் : ஆர்.பாலா



அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி 2009

முடிவுகள் அறிவிப்பு

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் இந்த ஆண்டும் எண்ணற்ற எழுத்தாளர்கள் கலந்துகொண்டு, தங்கள் கதைகளைப் பரிசீலனைக்கு அனுப்பியிருந்தனர். இறுதிச் சுற்றில் எழுத்தாளர் க.சீ.சிவக்குமார், கவிஞர் வெண்ணிலா... ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்று, 'கல்கி' ஆசிரியர் சீதா ரவியுடன் இணைந்து கீழ்க்காணும் சிறுகதைகளைப் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு ரூ.10,000/-

சின்னஞ்சிறு தீவு ஒண்டு - ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

இரண்டாம் பரிசு ரூ.7,500/-

கோலிகுண்டின் மரணம் - ந.கனகராஜன்

மூன்றாம் பரிசு ரூ.5,000/-

உலை - அபிமானி

முதல் பரிசுபெற்ற கதை இந்த இதழில்... பிரசுரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்த இதழில். பரிசுபெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! உற்சாகத்துடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி!

-ஆர்

படம்: ஸ்ரீஹரி



தேவதை மனைவி?

கிரேஸியைக் கேளுங்கள்

● ஆர்.அஜிதா, கம்பம்

அன்பு எப்போது காதலாகிறது...?

அன்பே சிவம்; அதன் சக்தியே காதல். விளக்க உரையாக ஒரு வெண்பா:

சும்மா இருந்த சிவத்தைச்
சிலிர்க்கவைக்கும்
அம்மாஞ் சக்தி அதற்குண்டாம் -
இம்மா
நிலத்திலதைக் காதலென்று நீட்டி
முழக்குவர்
முளைக்கையில் அன்பு
அருமொட்டு.

● அ.ஷண்முகசுந்தரம், பெங்களூர்

டெலிஃபோனில் யாராவது கூப்பிட்டால், 'Hell-O' என்று அபசகுனமாகச் சொல்வதற்குப் பதிலாக, சுபமாக எப்படி அழைக்கலாம்?

எதிர்முனையில் பேசும் தாங்கள் 'ஹெவனோ' என்று கேட்கலாம்.

● அ.கு.கிருஷ்ணன், புதுச்சேரி

கிரேஸி மலை ஏறியதுண்டா...?

எப்படி ஏறப் போகிறேனோ என்று, 'முது(மை)மலை'ப் பள்ளத்தாக்கில் நின்று மலைத்துக் கொண்டிருக்கிறேன்!

● என்.கோமதி, நெல்லை


ரூபாய் நோட்டில் தவறுதலாக காந்தித் தாத்தாவுக்குப் பதிலாக கிரேஸி தம்பியை அச்சடித்து விட்டால்?

கள்ள(ச் சிரிப்பு) நோட்டாகிவிடும். என் படம் அச்சடிக்கப்பட்ட ரூபாய் நோட்டை வைத்திருப்பவர்களுக்கு அரசாங்கம் அதிகமாக 'தமாஷா-வரி' போடும்.

● என்.சண்முகம், திருவண்ணாமலை

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

ஆக்கலாம். ப்ரேக் ஃபாஸ்ட்டுக்கு 'டைகர்' பிஸ்கெட்டும், லஞ்சுக்கு 'புலி'யோதரையும் போட்டு ஒரு காட்டுப் புலியை 'உப்புலி' என்று பெயரிட்டு வீட்டுத் திண்ணையில் வளர்த்தால், அதுக்குப் பிறக்கறது என்ன, அந்தப் புலியே 'மியாவ்' என்று கத்தும் அளவுக்கு நாளா வட்டத்தில் 'பஸி-Cat'ஆகிவிடும்.



• ராஜா
ரஹ்மான், கம்பம்
பயிற்சி, அனுபவம் என்ன வேறுபாடு?

காதல் - புரிந்து கொள்ளும் பயிற்சி; கல்யாணம் - புரிந்தும் புரியாத அனுபவம்!

• த.சத்தியநாராயணன், அயன்புரம்
நீங்கள் 'வால் பையனா?'

வீட்டுக்குத் 'தலைப் பையன்'!

• அ.அப்துல் காதர், மேற்கு தாம்பரம்
பாட்டியின் மடி, தாயின் மடி, மனைவியின் மடி ஒப்பிடுக...

பாட்டியின் மடி ஆசாரமான புலித்தோல்; தாயின் மடி அன்பான பசுத் தோல்; மனைவியின் மடி, புல்லரிக்க வைக்கும் பார்க் பெஞ்ச். பாட்டியின் மடி கதை சொல்லும்; தாயின் மடி கதை கேட்கும்; மனைவியின் மடி கதை விடும்.

• வைசாலி, திருநெல்வேலி
மனைவி மந்திரி என்றால், கணவன்...?

மந்திரிக்கப்படுபவன்!

• கைலாஷ், கண்டியன்கோவில்
நீங்கள் ஜப்பானில் பிறந்திருந்தால்?

முதுகில் 'மேட் இன் ஜப்பான்' முத்திரை குத்தியிருப்பார்கள்!

• மைத்ரேயி, சென்னை
வம்பை விலைகொடுத்து வாங்கும் வழக்கம் உண்டா?

குறைந்த விலைக்கு வந்தாலும் தள்ளுபடி செய்து வேறு யார் தலையிலாவது கட்டி விடுவேன்!

• லலிதா செல்லப்பா, சென்னை
சாத்தானாக இருக்கும் மனைவியை தேவதை ஆக்குவது எப்படி?

தேவதையாக இருந்தவளைச் சாத்தனாக மாற்றியது ஏன்? எது? எதற்கு?

கிரேஸி ட்ரீட் - 16-ம் பக்கம்





கல்கி



2009 ஆகஸ்ட் 2
விரோதி ஆடி 17
மலர் : 68
இதழ் : 1

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


வாழ்க 'சுறுசுறுப்பு'; வளர்க 'வெளிநடப்பு'!


தமிழக எம்.எல்.ஏக்கள் 105 பேருக்கு, ஹவுசிங் போர்டு மூலம் வீட்டு மனைகள் ஒதுக்கப்படும் என்று அறிவித்துவிட்டார் நிதியமைச்சர் அன்பழகன்! பாவம்! அத்தனை பேரும் தலைக்கு மேல் கூரை இல்லாமல் அவதிப்படும் வர்க்கமில்லையா? அதனால்தான் அரசு மனமிளகி மனை வினியோகம் செய்கிறது.

அடுத்தாற்போல் சென்னை எம்.கே.பி. நகர் சமுதாயக் கூடத்தில் இன்று வாழும் 189 குடும்பங்களை எடுத்துக் கொள்ளுங்கள். புறம்போக்கை ஆக்கிரமிக்க என்ன தைரியம் அவர்களுக்கு! ஏதோ அரசியல் செல்வாக்கு பெற்றவர்கள் போன்ற மமதையில் அவர்கள் செயல்பட, 189 குடும்பங்களையும் டேரா தூக்கி, ஒரே சமுதாயக் கூடத்தில் திணித்துவிட்டது தமிழ்நாடு ஹவுசிங் போர்டு. கொஞ்சம் நாட்களுக்குள் வேறு குடியிருப்பு ஒதுக்கித் தருவதாகச் சொல்லிவிட்டு, நான்கு வருஷங்களுக்கு மறந்தே போனால்தான் என்ன? அந்த நெரிசலில் ஆறு பேர் இறந்தால்தான் என்ன? 'ஏழை பங்காளன் அரசு' என்கிற பட்டப் பெயரை யார்தான் பிடுங்கிக்கொள்ள முடியும்!

வேறு எத்தனையோ வேலைகள் இருக்கின்றன அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும்! இலவச டீ.வி வினியோகத்தில் ஆரம்பித்து, இலாகா தவறாமல் நஷ்டத்தில் நடத்துவதுவரை 'கொள்ளை கொள்ளை'யாக வேலைகள்!

சி.ஏ.ஜி (தணிக்கை அதிகாரி)தான் வேலையற்றுப் போய் குறைகளைக் கண்டுபிடித்து அறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கிறார். கோயம்பேடு, மணலி, மறைமலைநகர் போன்ற பகுதிகளில் சி.எம்.டி.ஏவுக்குச் சொந்தமான நிலபுலன்களையும் கட்டடங்களையும் முறையாக





நிர்வகிக்காததால், அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம்! நஷ்டம் காட்டுவது எவ்வளவு கஷ்டமான வேலை! மின் வாரியத்தில் கட்டண நிர்ணயத் தவறுகளால் 256 கோடி ரூபாய் நஷ்டம்! ஏற்கெனவே நஷ்டத்தில் நடந்துவரும் ஒரு வாரியத்தின் நஷ்டத்தை இவ்வாறு பெருக்கும் அரிய சாதனையை நீங்கள் வேறெங்காவது கேள்விப்பட்டதுண்டா! இதில்போய் தணிக்கை அதிகாரி தப்பு கண்டுபிடிக்கலாமா?

இதையெல்லாம் சாதிப்பதால்தான் அதிகாரிகளுக்கு ஆறாவது சம்பளக் குழு பரிந்துரைப்படி ஊதிய உயர்வும் எம்.எல்.ஏக்களுக்குக் கடந்த மூன்று வருடங்களில் மட்டும் 34,000 ரூபாய் மாதச் சம்பள உயர்வும் கொடுத்திருக்கிறது அரசு!

இதனாலெல்லாம் தமிழக அரசுக்குச் செலவு அதிகமாகிறதே என்று அல்பத்தனமாக நாம் கவலைப்பட்டால் அதற்கு நிதியமைச்சரா பொறுப்பேற்க முடியும்! அவர்தான் கணக்கு போட்டுச் சொல்லிவிட்டாரே, தமிழக அரசின் மொத்தக் கடன் 74,546 கோடி ரூபாய் என்று! அதோடு, கடனுக்கு முக்கியக் காரணம் சமூக நலத்திட்டங்கள்தான் என்றும் சொல்லிவிட்டார்; தீர்ந்தது கடமை! உணவு அமைச்சர் எ.வ.வேலுவோ, பருப்பு விலை ஏறியதற்குக் காரணம் உற்பத்தி (விளைச்சல்) குறைவுதான் என்கிற பேருண்மையைக் கண்டறிந்து உலகறியச் செய்திருக்கிறார்! இன்னும் என்ன வேண்டும்? சாதத்தில் இந்த உண்மையைப் பிசைந்து எல்லா தமிழர்களும் வயிறு நிரம்பச் சாப்பிடாமல் சும்மா புகார் படித்தால் எப்படி?

என்ன என்ன...? 'காரணம் சொன்னால் போதுமா? செயல்பாடு வேண்டாமா?' என்றா கேட்கிறீர்கள்? கடைசி நாளின் கடைசி மூன்று மணி நேரத்தில் முப்பது மசோதாக்களை நிறைவேற்றிவிட்டு சட்டசபையை ஒத்திவைத்த சுறுசுறுப்பு நம் கொள்ளிக் கண்களுக்குத் தெரியாமல் போனால் அவர்கள் என்ன செய்வார்கள்!

என்னது? 'எதிர்க்கட்சிகளுக்கு மசோதாக்களை விவாதிக்கும் பொறுப்பு இருக்கிறது' என்றா நினைவூட்டுகிறீர்கள்? இடைத்தேர்தலையே பகிஷ்கரிக்கும் எதிர்க்கட்சிகளுக்கு, சட்டசபை விவாதமெல்லாம் எதுக்குங்க...? வெளிநடப்பு செய்யறாங்களே போதாதா! ●

கிரேஸி ட்ரீட்!

125வது வாரக் கொண்டாட்டம்



வாசகர்களுக்கு ஒரு
மெகா சர்ப்ரைஸ் ட்ரீட் கிரேஸியோடு!

கிரேஸியைக் கேளுங்கள் 125-வது வார கொண்டாட்டத்தில் பங்குபெறுங்கள்.

கீழே உள்ள கூப்பனில் கிரேஸிக்கான கேள்வியை எழுதி அனுப்புங்கள்.

கிரேஸி தேர்ந்தெடுக்கும் கேள்வியை எழுதிய வாசகர்களுக்கு அவருடன் சர்ப்ரைஸ் ட்ரீட் காத்திருக்கு.

ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்; ஆனா ஒரு கூப்பனில் ஒரு கேள்வி மட்டுமே இருக்கணும்.

ஜெராக்ஸ் நாட் அலௌவ்ட்; ஒரிஜினல் கூப்பனை மட்டுமே அனுப்புங்க.

9.8.09 கல்கி இதழிலும் கூப்பன் வெளியாகும்.

30.8.09 இதழில் கொண்டாட்டம் காத்திருக்கிறது.

கடைசி தேதி: 10.8.09. ஆசிரியர் தீர்ப்பே இறுதி

கிரேஸி ட்ரீட் - 2

கிரேஸியைக் கேளுங்கள் இங்கே : ....

....

பெயர் : ....

முகவரி: ....

....

....

தொலைபேசி எண் : ....

கல்கியில் விரும்பிப் படிப்பது: ....

....

கிரேஸி ரெடி... நீங்க ரெடியா..?

Excellent Opportunity

Available on "Lease" or for "Cash" of for "Exchange" (especially for flats/houses in Chennai)

Garden Land 12.40 acres (540,000 sft) with lot of trees on Kamandalu river bank between Vellore and Thiruvannamalai on the highway (near about Golden Temple, Elagiri Hills, Ami) available at Rs. 20 lac per acre (Rs.48' or @ $1 per SFT)

Proposals invited indicating acres required with amount offered "for anyone more or all of these:

- *Agri wet/Dry/Herbal/Horti/Corporate farming*
- *Cultural/Heritage/Tourism/Institutions*
- *Art/Educational/Management Institutions*
- *Residential/Real estate Development*
- *Vedic/Charitable/oldage/Traditional Institutions*

V. Ramakrishnan,
New 9/Flat No.3, First Floor
Norton, 3rd Street, Mandaveli,
Chennai - 600 028
E.mail:
v_ramakrishnan210@yahoo.com,
Cell: 9282129366 044 65679127
www:vellurheritage.com



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷித புண்யஸ்மரண ஸமிதி (Regd.)
"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"
29-30, East Iyen Street, KUMBAKONAM, Thanjavur Dt. Tamil Nadu -612 001. India.
E-mail : rajavedapatasala@dataone.in, vedagdps@sancharnet.in
Website : www.rajapatasala.in

☎ Off : (0435)
2425948
2401789
Patasala :
2401788
2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 466 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 215 மாணவர்களுக்கு 19 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் **ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம்** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை *ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்* திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் விலாசத்தில் தங்கள் பேர் (with STD Code)/செல்லுலர் எண்ணை குறிப்பிட்டு படி கேட்டுக்கொள்கிறோம். நன்கொடை திட்ட விபரங்கள்	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
ஒரு வேளை ஸமாராதனைக்கு [பகுதி தொகை]	Rs. 700/-	Rs. 8,000/-
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு [Please choose one specific day of a particular month in a year for Samaradhana]	Rs. 2,000/-	Rs. 25,000/-
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs.1,30,000/-

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D./Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

கிருஷ்ண யஜுர் வேத அத்யாபகர்கள் விண்ணப்பிக்கவும்.

அந்தரங்கம்,

பத்திரிகை உலகின் இப்போதைய பரபரப்பு News of the World. இந்த இதழின் நிருபர்கள் கிரிமினல் வழிமுறைகளைப் பயன்படுத்தி செய்திகள் திரட்டியதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. எங்கே ஆதாரங்களைக் காட்டு பார்ப்போம் என்று எதிர் வழக்கு போடும் துணிச்சல் நியூஸ் ஆஃப் தி வேர்ல்ட் நிர்வாகத்துக்கு இல்லை. குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை என்று அவர்களுக்குத் தெரியும். காதும் காதும் வைத்தது போல் வழக்குத் தொடுத்தவர்களை வரவழைத்துப் பேசிய நிர்வாகம் ஒரு மில்லியன் டாலர் வரை இழப்பீடாகக் கொடுத்திருக்கிறது.

உலக மீடியா சக்ரவர்த்தியாகக் கொண்டாடப்படும் ரூபர்ட் மர்டாக்கின் (ஸ்டார் டிவி இவருடையதுதான்) நியூஸ் க்ரூப் பத்திரிகைகளில் ஒன்று நியூஸ் ஆஃப் தி வேர்ல்ட். பிரதி ஞாயிறு பிரிட்டன் கடைகளில் கிடைக்கும். இன்றைய தேதியில், வாரத்துக்கு 77 லட்சம் பிரதிகளுடன் முதலிடத்தில் உள்ளது. சர்ச்சைகளிலும் தான். இங்கே பணியாற்றும் செய்தியாளர்கள் குறித்த குற்றச்சாட்டுகள் லாண்டரி பில் போல் நீள்கின்றன. பொய்ச் செய்திகள் தருகிறார்கள்; அந்தரங்கங்களை அம்பலப் படுத்துகிறார்கள்; அவதூறு செய்கிறார்கள்; கொச்சைப்படுத்துகிறார்கள்; இன்னபிற. அவ்வப்போது கோர்ட்டுக்குப் போவார்கள். இழப்பீடு தருவார்கள். தீர்ந்ததும் அடுத்த கவர் ஸ்டோரியைத் தேட ஆரம்பித்து விடுவார்கள்!

ரெடி...ஸ்டெடி...சிரி...

"திருமணமாகி ஐம்பது வருடங்கள் ஆகின்றன. எப்படிக் கொண்டாடுவது என்று தெரியவில்லை?"

"அப்படியா! உங்களது இருபத்தைந்தாவது திருமண தினத்தின் போது என்ன செய்தீர்கள்?"

"என் மனைவியோடு ஸ்விட்சர்லாந்து போயிருந்தேன்."

"சரி! இப்போதும் மனைவியை அழைத்துக் கொண்டு எங்காவது போய் வாருங்களேன்!"


"போகலாம்தான். ஆனால் அதற்கு முன்னால் ஸ்விட்சர்லாந்தில் விட்டு விட்டு வந்த மனைவியைத் திரும்ப அழைத்து வரவேண்டுமே என்று தான் யோசிக்கிறேன்."

- ஜி.லெக்ஷ்மிபதி



"மழை வர்றது 'கழுதைக்கு'த் தெரியும், தெரியுமா?"

"உனக்குத் தெரிஞ்சா சரி, எனக்குத் தெரியாது!" - வெ.சீதாராமன்



எது கவர் ஸ்டோரி? ஏதாவதொரு பிரபலத்தின் அந்தரங்க வாழ்க்கை. இளம்பெண்ணாக இருந்தால் இன்னும் மகிழ்ச்சி. செய்திகளில் ஆபாசம். சிந்தனையில் வக்கிரம். இதுதான் நியூஸ் ஆஃப் தி வேர்ல்டின் சக்ஸஸ் ஃபார்முலா! இந்தப் பத்திரிகையின் இணையதளத்தை ஆராய்ந்தால் பல பிரபலங்களின் அந்தரங்க வீடியோக்கள் காணக் கிடைக்கும். பெரும்பாலும் திருட்டுத்தனமாக எடுக்கப்பட்டவை என்பது சிறப்பம்சம்.

விற்பனைக்கு!

1843ல் இந்தப் பத்திரிகையைத் தொடங்கியபோது ரத்தம் சொட்டும் வன்முறைச் செய்திகளை மட்டும் பொறுக்கி எடுத்து படங்களுடன் போட்டார்கள். பிறகு கிரிமினல்களின் பேட்டிகள். இதைத் தொடர்ந்து பாலியல் விடுதிகள் பற்றிய நேரடி ரிப்போர்ட்டுகள் வெளிவர ஆரம்பித்தன. விற்பனை பிய்த்துக்கொண்டு போனது. வன்முறையை விட, வக்கிரமும் ஆபாசமும் அதிகம் விற்கும் என்பதைப் புரிந்துகொண்டது நியூஸ் ஆஃப் தி வேர்ல்ட். இதன் வெற்றியைப் பார்த்து திக்குமுக்காடிப் போன பத்திரிகை நிர்வாகம், சண்டே பீப்பிள், தி டெய்லி மெயில், டெய்லி எக்ஸ்பிரஸ், டெய்லி மிரர் என்று வரிசையாகப் பல இதழ்களைத் தொடங்கியது. அத்தனையும் கிசு கிசு பத்திரிகைகள். அத்தனையும் ஹிட்.



பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் தெளிவான விதிமுறைகள் அமைக்கப்பட்டிருந்தன. என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ தெரியாது. இன்றைய தேதியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் பிரபலங்கள் பற்றிய அந்தரங்கமான செய்திகளைச் சேகரித்து வெளிக்கொண்டு வர வேண்டும். அரசியல், சமூக மண்ணாங்கட்டி செய்திகள் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க வேண்டாம்.

உங்கள் செய்தி எந்த அளவுக்கு சுவாரஸ்யமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு வருமானமும் கிடைக்கும். அந்தரங்கப் படங்கள் எடுக்க முடிந்தால் அள்ளிக் கொண்டு வாருங்கள். வீடியோ கிடைத்தால் நீங்கள்தான் ராஜா. ஒருவேளை இந்த வாரத்துக்குச் செய்திகள் எதுவும் அகப்படவில்லை என்றால், ஏதாவதொரு வதந்தியை நீங்களாகவே கிளப்பிவிடலாம். அவருக்கும் இவருக்கும் காதல் என்று தைரியமாகக் கொளுத்திப் போடலாம். இது தான் அவர்களது

மருதன்

"இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப் போறாங்களே... முதல்ல எதுக்கு ஆர்டர் கொடுக்கணும் தலைவரே?"

"பிரியாணி மாஸ்டருக்குத்தான்!"

– ஓரியூர்.கே.சேகர்

ரெடி...ஸ்டெடி...சிரி...



அந்தக் காலத்தில்தான் முனிவர்கள் தவம் இருந்தார்கள் என்றால் இந்தக் காலத்திலும் நம்ம அண்ணாச்சி ஒருவர் இறைவனை நினைத்து தவமிருந்தார். நூறு நாட்கள் தவத்துக்குப் பின் அண்ணாச்சிக்குக் காட்சி அளித்தார் இறைவன். "பக்தா.. இந்தக் கலிகாலத்தில் இவ்வளவு பக்தியா...? உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றார்.

"எனக்கு வரமெல்லாம் வேண்டாம். உன் செல்ஃபோன் நம்பர்தான் வேண்டும்" என்றார் அண்ணாச்சி. "அதெல்லாம் தேவையில்லை. நீ நினைத்தவுடன் வருவேன்" என்ற இறைவனிடம், "உன்னைத் தொடர்பு கொண்டு நூறு நாள் கழிச்சு இல்ல பேச முடியுது" என்றார் அண்ணாச்சி. சரியென்று இறைவன் செல்ஃபோன் நம்பரைக் கொடுக்க, "தினசரி மிஸ்டுகால் கொடுப்பேன். நீதான் பேசணும்" என்றதும் இறைவனுக்கு வந்தது மயக்கம்!



- எம்.மிக்கேல்ராஜ்,
சாத்தூர்.

பத்திரிகை (அ)தர்மம்!

இதை பத்திரிகைத் தொழில் என்று சொல்வதை விட வக்கிர வதந்தி தாதாயிஸம் என்று சொல்வது பொருத்தம்!

இந்த முறை அவர்கள் கையாண்டது வேறு சில நூதனமான வழிமுறைகளை. பிரபலங்களின் செல்பேசி எண்களைக் கண்டறிந்து தொழில்முறை ஒற்றாடல் நிறுவனங்களைக் கொண்டு ஒட்டுக் கேட்கச் செய்தனர்! யார் யாருடன் பேசுகிறார்கள்? என்னென்ன விஷயங்கள்? அத்தனை அந்தரங்க உரையாடல்களையும் பதிவு செய்து கொண்டார்கள். அடுத்தகட்டமாக, பிரபலங்களின் வங்கிக் கணக்கு, வரிக் கணக்கு, செல்பேசி கட்டணக் கணக்கு என்று திரட்ட ஆரம்பித்தார்கள்.

'சரி, நடந்தது நடந்து விட்டது. ஒரு ரேட் சொல்லுங்கள். கொடுத்து விடுகிறோம்.'

பாதிக்கப்பட்டவர்கள் ஒருவர், இருவர் அல்ல; ஆயிரக்கணக்கானவர்கள். லண்டன் மேயர், காபினட் மினிஸ்டர், எம்.பி., நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் என்று பட்டியல் நீள்கிறது. 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்று அலுவலகம் புகுந்து சட்டையைப் பிடித்தால், உட்கார வைத்து குளிர்பானம் கொடுத்துவிட்டு அடித்தொண்டையில் பேசுவார்கள். 'சரி, நடந்தது நடந்து விட்டது. ஒரு ரேட் சொல்லுங்கள். கொடுத்து விடுகிறோம்.'

தி கார்டியன் முதற்கொண்டு சர்வதேச செய்தி ஊடகங்கள் பலவற்றிலும் இவர்கள் நடத்தும் மோசடிகள் அம்பலமாகி விட்டன. என்றாலும், தட்டி விட்டுக் கொண்டு தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். யாரிடமும், எதற்கும் பயமில்லை. சட்டம், நீதி எதற்கும் தலைவணங்கியதில்லை. வழக்கம் போல் இந்த முறையும் வழக்கு தொடுத்தவர்களைச் சரிக்கட்டி விட்டார்கள். மேற்கொண்டு செய்திகள் வெளிவராமலும் செய்துவிட முடியும். கவலை ஒன்றுதான். அடுத்த வாரத்துக்கு சுடச்சுட கவர் ஸ்டோரி கிடைக்குமா? ●

ஓம் ஸ்ரீ சாய்ராம்

LOVE ALL • SERVE ALL

ஸ்ரீ சாய் அரவிந்த் கம்யூனிட்டி ஹால்

All

Seasons

Functions

Meetings

Celebrations



Centrally located, Reasonable Hall Rent

One Venue

SRI SAI ARVIND COMMUNITY HALL

Air Conditioned Hall & Rooms

1, Bhagirathi Ammal Street, R.A. Puram, Chennai - 600 028.

☎ **2493 3057, 98417 25243**

மானுட சேவைக்கு பேதமில்லை

தங்கள் முதியோர்களைப் பராமரிக்கப் பணம் கொடுத்தாலும் தகுந்த முதியோர் இல்லம் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பவரா நீங்கள்?

உங்களுடைய கவலையை சுகமாக பகிர்ந்து கொள்ள காத்திருக்கின்றது.

சீப்ரீஸ் முதியோர் இல்லம்

- அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தனிநபர் தம்பதியர் - தனி & பொது அறை வசதிகளும் மாத, வருட, ஆயுள் கட்டண முறைகளில் சேர்த்துக்கொள்கிறோம்.
- சைவ உணவு, பத்திரிக்கை , தொலைகாட்சி, சுற்றுலா என பொழுதுபோக்கு வசதிகளும் தூய்மையோடு 24 மணிநேர மருத்துவ சேவை வாகன வசதி பணியாளர் சேவையோடு காத்துக்கொண்டு இருக்கிறோம்.
- இல்லத்தில் இருக்கும் முதியவர்களுக்கு குழந்தை மற்றும் உறவினர் இல்லை என்றால் அவரவர் மத முறைப்படி ஈமச்சடங்குகளை சீப்ரீஸ் இல்லமே செய்கிறது.

உங்கள் பிறந்த, திருமணநாள் மற்றும் விசேஷ விழாக்களை எங்களுடனும் பகிர்ந்து கொள்ளலாமே !

Sea Brreeze Senior Citizen Home

No.24, M.R.G. Nagar,
Okkiampet (Near P.T.C), Thoraiapakkam,
Chennai – 600 097.

Regd. No: 199 - 2001
80G. Income Tax - & 12AA
FCRA No: 075820300

web: www. fathimaa trust .org - Ph: 044 – 24581999 – Mobile: 9444021417

நடக்க முடியாதவரையும் பராமரிக்கிறோம்.

மகிழ்வித்து மகிழ்வோம்.

''அந்த நோயாளி நிலைமை ரொம்ப சீரியஸா இருக்கு, அவருக்கு யாரை யாவது பார்க்க விருப்பமான்னு கேளுங்க நர்ஸ்!''

''வேற நல்ல டாக்டரைப் பார்க்கணு மாம்.''

– தென்றல் சண்முகசுந்தரம், ஈரோடு.







''நீங்க பழிவாங்க நினைச்ச உங்க எதிரி அந்த ஆஸ்பத்திரி யில அட்மிட் ஆயிருக்கார்...''

''ரொம்ப நல்லதாப் போச்சு. இனி அவனை அந்த டாக்டரே பழிவாங்கிடுவார்.''

- எஸ்.முகம்மது யூசுப், திருநெல்வேலி

"நேற்றிரவு 'பைத்தியக்காரன்' வேஷம் எப்படி அமைச்சரே?"

"'ஏற்கெனவே அரண்மனையில் ஒண்ணு இப்ப ரோட்டில் ஒண்ணு'னு மக்கள் பேசிக் கொண்டார்கள் மன்னா!"

- எம்.வெங்கட், நம்பியூர்





ரோட்டுல ஒண்ணு!



"தாய்க்குப் பின் தாரம்ங்கிறது சரியாத்தான் இருக்கு!"

"எப்படிச் சொல்றே?"

"சின்ன வயசுல அம்மா அடிச்சாங்க. இப்ப மனைவி அடிக்கிறாளே!"

- அ.அப்துல் காதர், சென்னை- 45.

"சச்சு, எனக்கு வயதில் ஜூனியர். ஆனால், திரையுலகில் சீனியர்! நான் சச்சுவின் பரமரசிகை; ரோஜா மலரே ராஜகுமாரி பாட்டுல, சச்சு முகத்தைப் பார்க்கணுமே! நிஜமாகவே ரோஜாப்பூதான்!"

இப்படிப் பாராட்டியவர் ஆச்சி மனோரமா. சச்சு, சினிமாவில் நடிக்க ஆரம்பித்து 55 வருடங்கள் ஓடிவிட்டன. குட்டி ஸ்டாராக அறிமுகமாகி, குமாரி சச்சுவாக வலம்வந்து, காமெடியில் கலக்கி, அப்புறமாக குணச்சித்திர கதாபாத்திரங்களிலும் முத்திரை பதித்தவர். மேடை நாடகங்களில் அபாரமாக நடித்துப் பெயர் வாங்கிய அவர், அதன் பிறகு சின்னத்திரை தொடர்களையும் விட்டு வைக்கவில்லை. சச்சுவின் கலைச் சேவையை மெச்சி, ப்ரியா விஷன் விழா ஏற்பாடு செய்து அவரைப் பாராட்டி இருக்கிறது. சமீபத்தில் அவரைச் சந்தித்தபோது, அவரது ஃப்ளாஷ்பேக்குக்குள் நம்மைக் கைப்பிடித்து அழைத்துப் போனார்!

"என் மூத்த அக்கா நடிகை 'மாடி லட்சுமி'யுடன் என் பாட்டி ஷூட்டிங்குக்குப் போகும் போது சின்னப் பெண்ணான என்னையும் அழைத்துப் போவார். அப்படி கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தபோது, வீணை பாலசந்தர், பானுமதி நடித்த 'ராணி' படத்தில் ஜூனியர் பானுமதியாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அப்போது எனக்கு வயது மூன்றரை.

இந்திய அரசாங்கத்துக்காக, டைரக்டர் சுப்ரமணியம் ஒரு குழந்தைகள் படம் எடுத்தார். அதில் அன்றைய பாரதப் பிரதமர் நேருஜியை, சில குழந்தைகள் சந்தித்துப் பேட்டி காணும் காட்சி. நேருவை அருகில் பார்த்த பிரமிப்பில், நான் கேட்க





"நேருஜியைச் சிரித்து சமாளித்தேன்!"

வேண்டிய கேள்வியை மறந்து போய்விட்டேன். என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த பத்மா சுப்ரமணியம் என்னை இடித்து... 'கேள்வி கேள்' என்கிறார். எனக்கு மறந்துபோன கேள்வி ஞாபகத்துக்கு வரவே இல்லை. நான் எப்படியோ சிரித்துச் சமாளித்து விட்டேன்.

நகைச்சுவை நடிகர் தங்கவேலு வீட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த சமயம், இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவைச் சந்தித்தேன். ''உனக்குக் குடும்பப்பாங்கான முகவெட்டு இருக்கிறது. நாளைக்கு ஏவி.எம். ஸ்டுடியோவுக்கு வந்து எங்களைப் பார்'' என்று சொன்னார்கள். மறுநாள் ஏவி.எம். ஸ்டுடியோவில் ஸ்க்ரீன் டெஸ்ட் எடுத்தார்கள். என் பாட்டி இரண்டு வருட ஒப்பந்தத்தில் கையெழுத்திட, நான் 'அன்னை' படத்தில் நடித்தேன். இரண்டு வருட ஒப்பந்தம் முடிந்த பிறகும், திரையுலகில் பலர் நான் ஒப்பந்தத்தில் இருந்ததாக நினைத்து, என்னை நடிக்க அழைக்கவில்லை.

டைரக்டர் ஸ்ரீதர் 'காதலிக்க நேரமில்லை' படத்தில் எனக்கு நாகேஷுக்கு ஜோடியாக காமெடி ரோல் கொடுத்தபோது, என் மீது காமெடி முத்திரை குத்தப்பட்டு விடுமோ எனத் தயங்கி நடிக்க மறுத்தேன். ஆனால், ஸ்ரீதர் தரப்பிலிருந்து தொடர்ந்து வற்புறுத்தினார்கள். அப்போது காதலிக்க நேரமில்லை படத்தைப் புதுமையாக ஈஸ்ட்மென் கலரில் எடுத்தார்கள். ''உன் அழகுக்கு கலரில் மிக அற்புதமாக இருக்கும்'' என்று பலரும் சொல்ல, என் சம்மதத்தைத் தெரிவித்தேன். காதலிக்க நேரமில்லை எனக்கு பெரும் புகழைப் பெற்றுக் கொடுத்தது என்றாலும், எதிர்பார்த்தபடியே என் மீது காமெடி முத்திரை விழுந்துவிட்டது'' என்று சிரிக்கிறார் சச்சு.

- மானஸா



* குழந்தை நட்சத்திரமாக...

''நம்ம தலைவர் வீடியோ பஸ்ல போனாக்கூட பழசை மறக்க மாட்டாரு!''
''எதை வைச்சு சொல்றே...?''
''படம் சரியாத் தெரியலைன்னா... விசில் அடிப்பாரு!''

- மதுரை முருகேசன்

அருண் சரண்யா

15

வீணைக்கு ஆடினான்!

'**நா**ங்க வந்தாச்சு' என்ற குரல் கேட்டது. திரும்பினோம். ஜருகண்டியின் குரல். கூடவே ராமநாதனும் நின்றுகொண்டிருந்தார்.

கல்கியில் ஆறு வாரம் வெளிவந்த 'குருக்ஷேத்திரம்' பயணத்தொடரைப் படித்தவர்கள் இந்த இருவரையும் மறந்திருக்க மாட்டார்கள். எந்தப் புண்ணியத் தலத்துக்குச் சென்றாலும், அதைப் பற்றிய பல விவரங்களை முன்னதாகவே அறிந்து கொள்வது ராமநாதனின் பழக்கம். ஜருகண்டியோ அதுபோன்ற எந்த முயற்சியையும் எடுத்துக் கொண்டதில்லை. அடுத்தடுத்து அவனுக்குச் சந்தேகங்கள் தோன்றும்தான். ஆனால், அதையெல்லாம் தீர்க்கத்தான் ராமநாதன் இருக்கிறாரே! ''கல்கியில் பார்த்தோம்... நீ எப்படி எங்களை விட்டுட்டு பண்டரிபுரம் போகலாம்!'' என்று கால் மணி நேரம் சண்டை பிடித்தவர்கள், நம் பக்த விஜய ரூட்டில் பக்கவாத்தியமாகச் சேர்ந்து கொண்டு விட்டார்கள்! ''போலோ பண்டரிநாத் மஹாராஜ்கீ...'' என்றார் ராமநாதன். ''**ஜெய்!**'' என்று ஓங்கி புண்டரீகம் போட்டான் ஜருகண்டி!

''**பு**ரந்தரதாசர் பற்றி ஆரம்பிச்சீங்க இல்லையா? அவர் ஒரு மகான்...'' என்று அடி எடுத்துக் கொடுத்தார் ராமநாதன்.

''அடுத்து கோபால்புரிக்குப் போகலாம்னு சொன்னீங்களே, அது அவர் சம்பந்தப்பட்ட இடமா?'' - இது ஜருகண்டி.

மறுப்பதுபோல் தலையசைத்த ராமநாதன், ''இல்லை. அது ஜனாபாயின் பக்தியை உணர்த்திய இடம். அவங்க இயற்றிய அபங்கங்களும் இனிமையானவைதான்'' என்றார் பரவசத்துடன்.

''சரி, புரந்தரதாசர் பாடிய ஒரு பிரபல அபங்கத்தைச் சொல்லுங்க பார்ப்போம்'' என்றான் ஜருகண்டி.

ஏதோ பதிலைத் தயாராக வைத்துக் கொண்டு எங்களைச் சோதிப்பது போல் கேட்ட அவன் தோரணை, எங்கள் எல்லோருக்குமே சிரிப்பை வரவழைத்துவிட்டது.

''புரந்தரதாசர் அபங்





கம் பாடவில்லை. அவர் பாடியது மராத்தியில் இல்லை. பெரும்பாலும் கன்னடத்திலும், கொஞ்சம் சமஸ்கிருதத்திலும்தான். தம் பாடல்களை புரந்த விட்டலன் என்கிற முத்திரையுடன்தான் இயற்றினார்'' என்ற ராமநாதன், அவரது பிரபல கீர்த்தனையான, ''ஜக தோத்தாரண அடிசிதளெ யசோதா...'' என்று பாடினார். பிறகு ''இந்தப் பாண்டுரங்கத் தலத்தில் அவருக்கு ஏற்பட்ட அனுபவம் மிக வித்தியாசமானது'' என்றார்.

அவசரக்குடுக்கை ஜருகண்டி, ''புரந்தர தாசருக்கு அந்தப்பெயர் எதற்கு? தெரிஞ்சுக்க ஆசை'' என்றான்.

''சொன்னால் போச்சு'' என்று தொடங்கினார் ராமநாதன்.



திருப்பதியில் தங்கி வேங்கடவனைப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார் ஸ்ரீனிவாச நாயக். இது புரந்தரதாசரின் இயற்பெயர்.

அந்த ஊரில் புரந்தரி என்ற ஒரு தாசி இருந்தாள். புனிதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு, இறைவன் பெரும் அதிர்ஷ்டத்தை அளித்திருந்தார். ஒவ்வோர் இரவும் வீணையுடன் அவள் ஆலயத்தை அடைவாள். உடனே கதவு தானாகத் திறக்கும். அவள் வீணை வாசிக்க, இறைவன் நடனமாடுவார். பின்னர் இறைவன் வீணை வாசிக்க புரந்தரி நடனமாடுவாள்.

தினமும் இரவு வேளையில் புரந்தரி கால்களில் சலங்கையும், கையில் வீணையுமாக எங்கோ கிளம்பிச் செல்வதைக் கண்ட ஸ்ரீனிவாச நாயக், ''நடனத்துக்குரிய அலங்காரங்களுடன் வீணையை எடுத்துக்கொண்டு எங்கே செல்கிறீர்கள்?'' என்று கேட்டார். அவரிடம் உண்மையைக் கூறினாள் புரந்தரி.

சிலிர்த்துப்போன ஸ்ரீனிவாச நாயக், ''இன்றிரவு என்னையும் நீங்கள் அழைத்துச் செல்லவேண்டும்'' என்றார். ஒப்புக் கொண்டார் புரந்தரி.

அன்றிரவு இருவரும் ஆலயத்தை அடைந்தனர். கதவு தானாகத் திறந்து

அபங்க அமுதம்

எல்லி ஹரிகதா ப்ரஸங்கவோ அல்லி
கங்கா யமுனே கோதாவரி
ஸரஸ்வதீ ஸிந்து எல்ல தீர்தவு எணயாகி
பந்து நில்லுவவு
வல்லப ஸ்ரீபுரந்தர விட்டலனு
மெச்சுவனு ...
ஜய ஹரி புரந்தர விட்டலன பலவய்ய
ஸஜ்ஜனரிகே

\- புரந்தரதாசர்

எங்கே ஹரிகதை நடக்கிறதோ, அங்கே கங்கை, யமுனை, கோதாவரி, ஸரஸ்வதி, ஸிந்து முதலிய எல்லா நதிகளும் ஒன்றாக வந்து நிற்கின்றன. விட்டலன் ஆனந்த மடைகிறான். ஜய ஹரி புரந்தர விட்டலன் என்று சொல்வதே மக்களுக்குப் பெரும்பலம் அளிக்கிறது.

கொண்டது.

ஒரு தூணின் பின் மறைந்து நின்று கொண்டார் ஸ்ரீனிவாச நாயக். சற்று நேரத்தில் புரந்தரி பாடியபடி வீணை இசைக்க, இறைவன் அங்கு வந்து அதற்கேற்ப ஆடலானான்.

ஸ்ரீ னி வா ச நாயக், சங்கீதத்தில் கரை கண்டவர். எனவே, கைகளால் தாளமிட்டபடி அந்த இசையை அனுபவித்துக்கொண்டு இறைவனின் ஆடலையும் கண்ணாரப் பருகி நின்றார்.

அவருக்கு அருள் செய்ய முடிவெடுத்தார் இறைவன். அடுத்த நொடியிலிருந்து புரந்தரியின் வீணையிலிருந்து கிளம்பிய இன்னிசை ஸ்ரீனிவாச நாயக்கின் காதுகளில் மட்டும் மிகவும் அபஸ்வரமாக விழுந்தது.



"கவலைப்படாதே. இசை உன் உயிரில் கலந்திருக்கிறது. நீ மறைந்த பிறகும் அது உயிர்வாழும்"

தன்னை மறந்து தூணின் மறைவிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீனிவாச நாயக், "புரந்தரி, என்ன இது? தப்பும்தவறுமாக வீணையை இசைக்கிறீர்களே!" என்று கடிந்துகொண்டார். பின்னர் திருமாலின் புறம் பார்வையைத் திருப்பினார். 'அடடா, பலருக்கும் கிடைக்காத அற்புத வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கும் இந்நேரத்தில், இசையைப் பற்றிய ஆராய்ச்சி அவசியமா?' என்ற ஞானோதயம் எழுந்தது. இறைவனின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

"கவலைப்படாதே. இசை உன் உயிரில் கலந்திருக்கிறது. நீ மறைந்த பிறகும் உன் இசை உயிர்வாழும். புரந்தரியையே உன் குருவாகக் கொள். இசை மூலமாகவே எனக்கு மேலும் நெருக்கமாவாய்" என்று கூறி மறைந்தார் திருமால்.

இந்த அற்புத அனுபவத்துக்குக் காரணமாக விளங்கிய புரந்தரியை நமஸ்கரித்தார் ஸ்ரீனிவாச நாயக். அன்றிலிருந்து அவரையே தம் குருவாக ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீனிவாச நாயக் அன்றிலிருந்து புரந்தரதாசராக மாறினார். தம்முடைய ஒரு நூலுக்கு 'புரந்தரி' என்று பெயரிட்டார்.

இசையில் யாராவது தவறு செய்தால், புரந்தரதாசருக்குப் பிடிக்காது. அதனாலேயே அவரும் ஒரு பெருந்தவறு செய்ய நேர்ந்தது.



வண்ணப்படம் : **வேதா**

படம் : **ஸ்ரீஹரி**

தேடல்

சகா

பார்த்தவர்களில் பலர்
தட்டி விட்டதாலும்
எத்திவிட்டதாலும்
காரைப் பெயர்ந்த
சுவரில்
மோதிப் புரண்டது

சாணம் மெழுகிய
தரையில்
சிதறிக் காய்ந்திருந்த
சோற்றுப் பருக்கை
பாறாங்கல்லாய்
மண்டை உடைத்தது

உயிர் போகும்
வலி கொடுத்து
உதிர்ந்தே போய்விட்டன

மொழிகளும் நாவுகளும்
இல்லாத மனிதர்கள்
விலாசம் தொலைத்தது போல
வீட்டு அறையையே
விடிய விடிய
சுற்றித் தேடி
வீதிக்கே
வந்து விட்டது

விடிகாலை
வாசல் தெளிக்க
வெளிவந்த
அம்மாவின் காலடியில்
மிதிபடும் வரை
அந்த எறும்பால்
கண்டுபிடிக்கவே
முடியவில்லை
உதிர்ந்துபோன தன்
உணர்வுக்
கொம்புகளை



சிலர் சிரிப்பைக் கடந்து போயிருப்பாங்க. பலர் மீது சிரிப்பு கடந்து போயிருக்கும். அப்படிப்பட்ட டகால்டி எக்ஸ்பீரியன்ஸைச் சிரிக்கச் சிரிக்கச் சொன்னார்கள் கீழே உள்ளவர்கள்.

இடம் : திருச்சி இப்ராஹிம் பார்க்.



"ஹெச்.எம் அவுட்!"



தாளிச்ச பாயசம்... ஸ்வீட் பொரியல்...

கு.வைரச்சந்திரன்:

அப்ப நான் ப்ளஸ் டு ஸ்டூடண்ட். காய்ச்சல்னு ரெண்டு நாள், ஸ்கூலுக்குப் போகலை. உடம்பு நல்லானதும், வீட்ல லீவு லெட்டர் எழுதி அப்பாகிட்டே கையெழுத்து வாங்கிட்டு ஸ்கூலுக்குப் போயிருந்தேன். அன்னைக்கு எனக்கு முதல் பாடமே, வகுப்பாசிரியர் எடுக்கிறது. என்னோட லீவு லெட்டரைத் தந்தேன். அவரு படிச்சுப் பார்த்துட்டு, இதுல ஹெட் மாஸ்டர்ட்ட கையெழுத்து வாங்கிட்டு வான்னு அனுப்பிச்சிட்டார். நான் ஹெச்.எம். ரூமுக்கு வந்தேன். வெளியே பியூன் கூட இல்லை. உள்ளே எட்டிப் பார்த்தேன். ஹெச்.எம். இல்லை. அறைவாசல்ல ஹெச்.எம் பெயர்ப் பலகை இருந்தது. படிச்சுப் பார்த்துட்டு என்னோட வகுப்புக்கு வந்தேன். லீவ் லெட்டரை வகுப்பாசிரியர்கிட்ட தந்தேன். அதுல ஹெச்.எம். கையெழுத்து இல்லேங்கவும் ஏற இறங்கப் பார்த்திட்டு, 'ஹெச்.எம்மைப் பார்த்தியாடா?'னு கேட்டாரு. நான் உடனே 'நம்ப ஹெச்.எம். அவுட் சார்!'னு சத்தமா சொன்னேன். பசங்க எல்லாம் எழுந்து நின்னு கைதட்டிச் சிரிச்சானுக. என்னோட வகுப்பாசிரியரும் சிரிக்க ஆரம்பிச்சுட்டாரு.

"செவ்'வாய்' தோஷம் உள்ள பொண்ணைக் கட்ட வேண்டாம்னு ஜோஸியர் சொன்னதை அவர் தப்பாப் புரிஞ்சுக்கிட்டார்..."

"எப்படி...?"

"லிப்ஸ்டிக் போட்ட பொண்ணுகூட வேண்டாம்னு சொல்றாரே...?"





"பாயசத்துக்குள் கடுகு!"



ஆனா, எனக்கு மட்டும் சிரிப்பு வரலை.

நான் ஹெச்.எம். ரூமுக்குப் போனப்ப, ஹெச்.எம். மத்த வகுப்புகளுக்கு வெளியே ரவுண்ட்ஸ் போயிருக்காரு. அதனால அவரோட அறைக்கு வெளியே பெயர்ப் பலகையில இன்/அவுட் என்கிறதுல, 'இன்' மறைக்கப்பட்டிருந்துச்சு. அதைப் படிச்சுட்டு அப்படியே வகுப்புல வந்து சொல்லிட்டேன். அதனால கிளம்பிய சிரிப்பு அடங்க ரொம்ப நேரம் ஆனது.

தனலெட்சுமி, விமான நிலைய அலுவலர்:

தாளிச்ச பாயசமும் ஸ்வீட் பொரியலும் நீங்க சாப்பிட்டு இருக்கீங்களா? எங்களுக்குக் கல்யாணம் ஆன புதுசு. என் சினேகிதி தன்னோட வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிட்டிருந்தா. அன்னைக்குன்னு அவளுக்கு உடம்பு முடியலை. அதனால கிச்சனுக்கு வெளியே ஒக்காந்து ஒவ்வொண்ணா சொல்லியிருக்கா. 'கவனமா' கேட்டு அவ வீட்டுக்காரர் சமைச்சு வெச்சுட்டாரு.

நாங்க சாப்பிட உட்கார்ந்தோம். டேபிள்ல எல்லாம் வரிசையா வெச்சிருந்தாங்க. இலையில கூட்டுப் பொரியல் வெச்சாங்க. பழக்கதோஷத்துல பொரியலை எடுத்து வாயில் போட்ட என் கணவரோட முகம் சுருங்கிப் போச்சு. நானும் டேஸ்ட் பண்ணிப் பார்த்தேன். பொரியல் ஒரே இனிப்பு! சந்தேகம் வரவும், பாயச வாளியை எட்டிப் பார்த்தேன். எண்ணெய் திரண்டு அது மேல கடுகு மிதக்குது. வேற ஒண்ணும் இல்ல. பொரியலைத் தாளிக்கறதுக்குப் பதிலா, பாயசத்தைத் தாளிச்சுட்டார். சர்க்கரையைப் பொரியல்ல கொட்டிட்டார். அவ்வளவுதான்.

சேதுமாதவன் :

எங்க ஆஃபீஸ்ல நடந்த சம்பவம் இது. மதிய உணவு வேளை. எல்லோரும் ஆஃபீஸ்ல டைனிங் ரூம்ல உட்கார்ந்து

"என்னது எதிரி மன்னன் போருக்குப் பயிற்சியே எடுக்காமல் வந்திருக்கிறானா...?"
"நம் மன்னருடன் நடக்கும் போரையே பயிற்சியாகத்தான் நினைக்கிறானாம்..."

– பிரியதர்ஷன், சேலம்.

சாப்பிடுவோம். கிளார்க் ஒருத்தருக்கு ஆஃபீஸ் பக்கத்துலயே வீடு. அவரு மட்டும் வீட்ல போயி சாப்பிட்டுட்டு வந்திடுவாரு. அரைமணி நேரம்தான் லஞ்ச் டயம். குறிப்பிட்ட நாளன்னிக்கு மதிய உணவுக்கு அப்புறம் அவங்கவங்க ஸீட்ல உட்கார்ந்து வேலை செய்ய ஆரம்பிச்சுட்டோம். அரை மணி நேரம் ஓடிப்போனது. வீட்டுக்குச் சாப்பிடப் போன கிளார்க் வரலை. அவரோட கௌண்ட்டர்ல வரிசையா ஆளுங்க நின்னுக்கிட்டிருக்காங்க. அந்த வரிசையில் திடீர்னு ஒரே சலசலப்பு. 'யோவ்... வரிசையில வந்து நில்லுய்யா!'னு கூச்சல். 'யோவ்... என்னைய உள்ளே விடுங்க . நான் உள்ளே போனாத்தான் நீங்க சீக்கிரமா வீட்டுக்குப் போக முடியும்'னு! பதில் கூச்சல் வேறு.

நாங்க நாலைஞ்சு பேரு வெளியே வந்து பார்த்தோம். சம்பந்தப்பட்ட எங்க ஆஃபீஸ் கிளார்க்கை, வரிசையில நின்னுட்டிருந்த நாலைஞ்சு பேரு சுத்தி நின்னு வழிமறிச்சிட்டிருந்தாங்க. நாங்க நெருங்கிப் போய் அவங்களை விலக்கி, எங்களோட கிளார்க்கை மீட்டோம். அப்புறம்தான் நாங்க கிளார்க்கைப் பார்த்தோம்.



"யோவ். வரிசையில நில்லுய்யா!"

வீட்டுக்குச் சாப்பிடப் போயிருந்த கிளார்க், ட்ரஸ் மாத்திக்க மறந்து போய் கட்டியிருந்த லுங்கியோட ஆஃபீஸுக்கு வந்துட்டார்.

பார்த்தசாரதி:

அப்ப நான் சின்னப்பையன். தீபாவளிக்குப் பொட்டு வெடிதான் வீட்ல வாங்கித் தருவாங்க. சட்டைப் பையில அள்ளிப் போட்டுக்கிட்டு, சிமிட்டித் தரையில பொட்டு வெடி வெச்சு சின்ன கல்லால நசுக்கி வெடிச்சுட்டிருப்பேன். தீபாவளிக்கு மறுநாள், முறுக்கை ஒடைச்சி சட்டைப் பையில போட்டுட்டு விளையாடக் கிளம்பினேன். விளையாட்டுக்கு இடையே முறுக்குத் தின்னலாம்னு. பசங்களோட விளையாடிட்டே முறுக்குத் துண்டுகளை எடுத்துத் தின்னுக்கிட்டு இருந்தேன். கொஞ்ச நேரத்துல என்னோட வாய்ல வெடிச் சத்தம். பொட்டு வெடி! என்னோட சட்டைப்பையில முந்தின நாள் போட்டு வெச்சிருந்த பொட்டு வெடியில ஒண்ணு ரெண்டு, முறுக்குத் துண்டுல போயி ஒட்டிக்கிச்சு. அந்த முறுக்குத் துண்டை நான் கடிக்கப் போயி என்னோட மவுத் பஞ்சர் ஆயிடுச்சு.

"மவுத்துல வெடி வெச்சவன்!"



- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

"என்னய்யா கதையில கருவே இல்லை?"

"முதல் அத்தியாயத்திலேயே கதாநாயகிக்கு அபார்ஷன் ஆயிடுச்சே! பின்ன எப்படி கரு இருக்கும்?"

- டி. முருகேசன், திருவாரூர்.


அரும் பஞ்சம்!
''மன்னா. நாட்டில் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது.''
''அப்படியா. 'ரிப்பன்' கட்டிக்கொண்டு ஒழுங்காக ஆடச் சொல்லும்.''
68வது ஆண்டு மலர்

மெஜஸ்ட்டிக் விட்டி என்று பெரிதாய் ஆங்கிலத்தில் எழுதியிருந்த வண்ணமயமான நாலு மாடிக் கட்டடத்துக்குள்ளே பிரவேசித்தாள் வேணி.


தாயின் கையைப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்த ராசாவுக்கு, அவனுக்கு முன்னால் நடந்துகொண்டிருந்த சிறுவன் மேல் கவனமிருந்தது.

பிழை. கவனம் அந்தச் சிறுவன் மேலல்ல, அவன் கையிலிருந்த பொப்கான் பொட்டலத்தின் மேல். அந்தப் பொட்டலத்திலிருந்த ரெண்டு பொப்கான் முத்துக்கள் கீழே சிந்தி, சுத்தமான அந்தத் தரையில் கிடந்து கண்களை உறுத்தின.

கீழே கிடந்த பொப்கானைத் திரும்பிப்

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.10,000 முதல் பரிசு பெறும் கதை



பார்த்தபடியே அம்மாவோடு நடந்தான்.

ஆசை அடக்க முடியாமற் போன போது, பிரேக் பிடித்து நின்று அம்மாவை ஏறிட்டுப் பார்த்தான்.

''ஒண்டுக்கு வருகுது அம்மா.''

''இங்கை எங்கையடா ஒண்டுக்குப் போவாய்? பேசாமல் நட..''

''அங்கை முன்னாலை இடம் இருக்குது அம்மா. நான் பார்த்தனான். நீங்கள் இருங்கோ நான் ஓடிப் போயிட்டு வந்துடுறன்.''

''நான் இங்கையே நிக்கிறன் மகன், கெதியாய்ப் போயிட்டு வா.''

அம்மாவிடமிருந்து விடுதலை பெற்று வேகமாய் வந்த ராசா, அவற்றைப் பொறுக்கக் குனிந்த அதே விநாடியில், பொப்காண் பெருக்கித் தள்ளப்பட்டுக் குப்பையாய்ப் போனது. தலைநிமிர்த்திப் பார்த்தான் ராசா.

துப்புரவுப் பெண் அவனுக்குப் புரியாத சிங்களத்தில் ஏதோ சொன்னபடி அவன் கையைப் பிடித்து வழி நடத்திப் போனாள், கொஞ்சம் விலகியிருந்த பொப்காண் கவுன்ட்டருக்கு.



அவள் வாங்கித் தந்த பொப்காண் பொட்டலத்தை ஆசையோடு பெற்றுக்கொண்டு, ரெண்டு எட்டு எடுத்து வைத்தபோது அம்மா அங்கே வந்துவிட்டாள்.



''என்ன மகன், ஒண்டுக்குப் போக இவ்வளவு நேரமே? இதென்ன கையிலை, யார் வாங்கித் தந்தாங்கள், ம்? யாரிட்டையும் கை நீட்டி வாங்குகிறது நல்ல பழக்கமே?''

''அம்மா, இந்த ஆன்ட்டிதான் வாங்கித் தந்தவ. ரொம்ப நல்ல ஆன்ட்டி அம்மா.''

''அய்போவன்'' என்று அவளை நோக்கிக் கை கூப்பினாள் வேணி.

இவளுக்குத் தெரிந்த ஒரே சிங்கள வார்த்தை. தன்னுடைய சந்தேகத்தை அவளிடம் கேட்டுத் தெளிவு பெற முயற்சிக்கலாம் என்று தமிழிலேயே கேட்டாள்.

''அம்மா, இந்தக் கட்டடத்திலைதான் பாஸ்ப்போட் ஓஃபீஸ் இருக்குது எண்டு சொன்னாங்கள். எங்கை இருக்குது எண்டு சொல்லேலுமே?''

இவளுடைய தமிழ் அவளுக்குப் புரியவில்லை. ஓஃபீஸ், பாஸ்ப்போட் என்கிற வார்த்தைகளைப் புரிந்துகொண்டு அவள் சொன்ன சிங்களத்திலிருந்து, அந்த அலுவலகம் இந்தக் கட்டடத்தில் இல்லை என்று வேணியால் புரிந்துகொள்ள முடிந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிக்கிடுகிற போது சொன்னார்கள், சிங்களம் தெரியா

சின்னஞ் சிறு தீவு ஒண்டு!

விட்டால் பரவாயில்லை, கொழும்பு நகரத்தில் தமிழைக் கொண்டே சமாளித்து விடலாம் என்று. ஆனால், காலையில் ரத்மலான விமான நிலையத்தில் வந்து இறங்கியது முதல், விமான நிலையத்தில், பஸ்ஸில், சாலையில், மெஜஸ்ட்டிக் ஸிட்டியில் என்று இந்த நிமிடம் வரை வேணி எதிர்கொண்ட அனைவருமே தமிழ் அறவே தெரியாத சிங்களவர்களாகவே அமைந்து போனார்கள்.

நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது.

தமிழர் ஒருவரை உடனடியாகச் சந்தித்தே ஆக வேண்டும். அப்போதுதான் பிரச்னையில்லாமல் வேலை கெதியாய் முடியும்.


அந்தக் கட்டடத்திலிருந்து வெளிக்கிட்டதும் வெளியே நின்றிருந்த ஆட்டோவைச் சமீபித்தாள்.

ஆட்டோ சாரதியிடம் துணிந்து தமிழில் பேச்சுக் கொடுத்தாள்.



தமிழக சட்டமன்றத்தில், அப்போது எதிர்க் கட்சி வரிசையில் இருந்த டாக்டர் எச்.வி.ஹண்டே, எந்த ஒரு பிரச்னையாக இருந்தாலும் கோபாவேசம் கொப்பளிக்கப் பேசுவார். இதைக் குறிப்பிட்டு தமிழக முதல்வர் கலைஞர் ஒருசமயம், சட்டமன்றத்தில் பேசும்போது, ஹண்டேவைப் பார்த்து, "இவர் உட்கார்ந்திருந்தால்தான் ஹண்டே; எழுந்து நின்று பேசினால் சண்டே" என்று நகைச்சுவையாகச் சொல்ல, சட்டமன்றமே கலகலப்பானது.

-வே.ந.கதிர்வேல்



''அண்ணே, நீங்கள் தமிழ்க் கதைப்பீங்களே?''

''ஓம் தங்கச்சி, தமிழ்க் கதைப்பன்'' என்று வந்த பதிலைக் கேட்டதும் பெரிய நிம்மதி ஏற்பட்டது.

''எங்கை போக வேணும் தங்கச்சி?''

''அண்ணே, யாழ்ப்பாணத்திலையிருந்து வாறம். பொடியனுக்குப் பாஸ்ப்போட் எடுக்க வேணும். பாஸ்ப்போட் ஓஃபீஸ் இந்தக் கட்டடத்திலைதான் இருக்குது எண்டு சொன்னாங்கள். அதுதான் ரத்மலானையிலிருந்து நேரா இங்காலை வந்தம்.''

''இந்தக் கட்டடத்துக்குப் பக்கத்திலைதான் முந்தி இருந்தது. இங்கையிருந்து மாத்திட்டினம். இப்ப பொரள்ளையிலை இருக்குது தங்கச்சி.''

''இங்கையிருந்து கனதூரமே?''

''அப்படியொண்டும் தூரமில்லையம்மா. போவம், ஏறுங்கோ.''

வேணியும் ராசாவும் ஆட்டோவில் ஏறிக் கொண்டார்கள்.

ஒரு வழியாய் ஒரு தமிழரின் வாகனம் தங்களுக்கு அமைந்து போனது வேணிக்கு வலு சந்தோஷமாய் இருந்தது.

ஆனாலும் ஒரு சந்தேகம் இருந்தது. கேட்டாள்.

''பொரள்ளைக்குப் போக சல்லி ரொம்ப எடுப்பீங்களே அண்ணை?''

அவர் சிரித்தார். ''சல்லியே வேண்டாம் தங்கச்சி.''

''பகிடி பண்ணாதையுங்கோ அண்ணை.''

''பகிடியெல்லாம் இல்லை தங்கச்சி. வேலை முந்தி முடியட்டும். சல்லியைப் பத்தி அப்புறம் கதைப்பம்.''

''சிங்களம் கதைக்கத் தெரிஞ்ச தமிழ்க்கார ஆட்டோ கிடைச்சது முருகன் செயல் அண்ணை. அண்ணை, நீங்கள்தான் கொழும்பிலை எனக்குப் பெரிய உதவி ஒண்டு செய்ய வேணும் அண்ணை.''

''என்ன உதவி எண்டாலும் செய்யிறன் தங்கச்சி.''

''அண்ணை, எனக்கு பாஸ்ப்போட் இருக்குது. பொரள்ளையிலை போய்ப் பொடியனுக்கு பாஸ்ப்போட் எடுக்க வேணும். எடுத்திட்டு அப்படியே கட்டு நாயக்க போய் ஃப்ளைற் ரிக்கற் எடுத்து மெட்ராஸ்க்கு ப்ளேன் ஏற வேணும். நீங்கள்தான் கடைசி வரைக்கும் உதவி செஞ்சு எங்களை ப்ளேன் ஏத்திவிட வேணும்.''



ஆட்டோக்காரருக்கு மீண்டும் சிரிப்பு.

''உலகம் தெரியாத பிள்ளையாய் இருக்கிறீரே தங்கச்சி. பாஸ்ப்போட் எடுக்கிறது கடையிலை சாமான் வாங்குறது போலை இல்லை. இண்டைக்கி விண்ணப்பம் வைச்சா, பாஸ்ப்போட் கைக்கு வர ரெண்டு கிழமை ஆகும் தங்கச்சி. அதுக்குப் பின்னாலை உங்களுக்கும் ராசாவுக்கும் இண்டியன் விஸா எடுக்க வேணும்.''

''இந்தியாவுக்கு விஸா தேவையில்லையெண்டு சொன்னனாங்கள்?''

''இந்தியாவிலையிருந்து சிறிலங்காவுக்கு வர விஸா தேவையில்லை. ஆனால், சிறிலங்காவிலையிருந்து இந்தியாவுக்குப் போக விஸா எடுக்கத்தான் வேணும். அது பரவாயில்லை. ஒருநாள் வேலைதான். எப்படியெண்டாலும் நீங்கள் ரெண்டு கிழமை கொழும்பிலை நிக்கத்தான் வேணும்.''

ரெண்டு வாரம் கொழும்பில் தங்க நேரும் என்கிற விஷயம் வேணியைக் கலவரப்படுத்திவிட்டது.

சொந்த பந்தங்கள் இல்லாத, மொழியும் தெரியாத இந்த நகரத்தில் எங்கே தங்குவது எப்படித் தங்குவது?

பொரள்ளைக்கு வந்து சேர்ந்த பிறகு கூட ஆட்டோவிலிருந்து இறங்கத் தோன்றவில்லை வேணிக்கு.

''பாஸ்ப்போட் ஒஃபீஸ் வந்திட்டுது தங்கச்சி.''

''வேண்டாம் அண்ணை. நாங்கள் யாழ்ப்பாணத்துக்கே திரும்பிப் போறம்.''

''அப்ப ராசாவுக்குப் பாஸ்ப்போட்?''

''பாஸ்ப்போட் எடுக்க வேண்டாம் அண்ணை. கொழும்பிலை ரெண்டு கிழமை நிக்க ஏலாது. இந்த ஊரிலை யாரையும் தெரியாது அண்ணை.''

''அண்ணை அண்ணையெண்டு வாய் நிறையக் கூப்பிடுறீர். இந்த அண்ணை வீட்டிலை இந்தத் தங்கச்சி எத்தனை நாள் வேணுமெண்டாலும் தங்கலாம்.''

ஆட்டோவிலிருந்து இறங்கி வேணி, அவருடைய கைகளைப் பற்றிக்கொண்டாள். ''ரொம்ப நன்றி அண்ணை. மெட்ராஸுக்குப் போக முடியாமல் போயிருமோ, ராசாவின்ரை அப்பாவைப் பார்க்க

ரெடி...ஸ்டெடி...சிரி..



ஒரு பியூட்டி பார்லரின் வாசலில்...

''எங்கள் பியூட்டி பார்லரில் இருந்து வெளியே வரும் பெண்ணைப் பார்த்து விசிலடிக்காதீர்! அது உங்கள் பாட்டியாகக்கூட இருக்கலாம்!''

- தென்றல் கோ.சண்முகசுந்தரம்

''தலைவருக்கு பதவி வெறி முத்திப் போச்சுங்கறீயே ஏன்...?''
''பேரையாச்சும் 'முதலமைச்சர்'னு மாத்திக்கட்டுமானு கேட்கறார்.'' - பிரியதர்ஷன்

முடியாமலேயே போயிருமோ எண்டு பயந்து போனன் அண்ணை.''

பாஸ்ப்போட் ஒஃபிஸில் விண்ணப்பம் கொடுத்துவிட்டு ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்தபோது ராசாவின் அப்பாவைக் குறித்துப் பேச்சு வந்தது. அவர் சென்னைக்குப் போய் மூண்டு வருஷங்கள் ஆகிவிட்டதையும், ராசாவினுடைய படிப்பையும் எதிர்காலத்தையும் உத்தேசித்தும், கணவனோடு ஒரு நிம்மதியான வாழ்க்கை வாழ்கிற சந்தோஷமான எதிர்பார்ப்புகளோடும் சென்னை செல்லவிருப்பதை வேணி ஆட்டோக்காரரோடு பகிர்ந்து கொண்டாள்.

ஆட்டோக்காரரின் வீட்டையடைந்தபோது அங்கே ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது.

இந்த ஒரு ஆளைத் தவிர வீட்டில் யாருமே இல்லை. அதைப் பற்றி வேணி கேட்டதற்கு அவர் சொன்னார். போன வருஷம் கொழும்பில நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலொன்றில் அந்தப் பாதையாய்ப் போய்க் கொண்டிருந்த தம்முடைய மனைவி பலியாகிப் போன துயரத்தை.

''தமிழனுக்கு எங்கை போனாலும் நிம்மதியான வாழ்க்கை இல்லைதான் போலக் கிடக்குது'' என்று வேணி வருத்தப்பட்டதற்கு, ''மனித வாழ்க்கையே நிரந்தரமில்லாததுதானே தங்கச்சி!'' என்றொரு தத்துவம் பதிலாய் வந்தது.

இல்லத்தரசி இல்லாததால் ஒழுங்கீனமாய்க் கிடந்த வீட்டை வேணி ஒழுங்குபடுத்தினாள். அடுக்களைக்குள் எட்டிப் பார்த்தபோது அடுப்பெரிந்ததற்கான அறிகுறியே தென்படவில்லை.

''அண்ணே, நான் இங்கே இருக்கேக்குள்ளை தினமும் குசினியில் அடுப்பு எரியும். தினமும் மூண்டு வேளை சமையல் நடக்கும். அரிசி, பருப்பு, எண்ணெய் எல்லாம் வாங்கி வாருங்கோ'' என்று வேணி ஆணையிட, சமையலறைச் சாதனங்கள் வந்து சேர்ந்தன. குசினியில் அடுப்பு மூட்டப்பட்டது.



''இதென்ன அண்ணை வீட்டிலை புத்தர் படம் மாட்டி வைச்சிருக்கிறீங்கள்!''

''பக்கத்திலை முருகன் படமும் இருக்குது. கண்ணிலை படேல்லையே?''

''ஆனால், புத்தர் படத்தைவிட முருகன் படம் சின்னதாயிருக்குது அண்ணை.''

''முருகன் மனசுக்குள்ளை பெரிசா இருக்கிறவர் தானே தங்கச்சி!''

இதுபோன்ற சரளமான உரையாடல்கள் தினசரி நடந்துகொண்டிருந்தன.

ஊரைச் சுற்றிக் காண்பிக்கிறேன் என்று ஆட்டோக்காரர் கூப்பிடுகிறபோதெல்லாம் வேணி வேண்டவே வேண்டாமென்று மறுத்துவிட்டாள்.

''கொழும்பிலை நூறு யாருக்கு ஒரு பரிசோதனை நிலையம் வச்சிருக்கனமே அண்ணை. இந்தச் சிங்களப் பொலிஸ்காரனையும் ஆமிக்காரனையும்

கண்டாலே எனக்கு ஆகுதில்லை.''

வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடைந்தாலும்கூட ரெண்டு வாரம் வேகவேகமாய் ஓடிப் போனது.

ராசாவுக்குப் பாஸ்ப்போட் எடுக்கிற நாளில் ஆட்டோவில் போய்ப் பாஸ்ப்போட் எடுத்தாகிவிட்டது.

அடுத்தநாளே இண்டியன் விஸா வழங்குகிற ஏஜென்ஸியில் போய், க்யூவில் நின்று விஸாவும் எடுக்க முடிந்தது.

தொடர்ந்து மெட்ராஸுக்கு விமான ரிக்கற்.

ஆட்டோக்கார அண்ணை இல்லாவிட்டால் இது எதுவுமே சாத்தியப்பட்டிருக்காது.

அடுத்தநாள் காலை... கணவனை மூன்று வருஷங்களுக்குப் பிறகு பார்க்கப் போகிற குதூகலம் ஒருபுறம் இருந்தாலும்,

இந்த அருமையான ஆட்டோக்கார அண்ணனை இனி எப்போது பார்க்கப் போகிறோம்

இந்த அருமையான ஆட்டோக்கார அண்ணனை இனி எப்போது பார்க்கப் போகிறோம் என்கிற சோகமும் வேணியின் மனசுக்குள் கனத்துக் கிடந்தது.

இந்த ரெண்டு வாரத்து உறவில் ராசாவும் மாமா மாமா என்று அவரோடு ஒட்டிக் கொண்டான்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அரை கிலோமீட்டர் தொலைவிலேயே வாகனங்களிலிருந்து இறங்கி, பாதுகாப்பு சோதனைக்குப் பிறகு, விமான நிலைய பஸ்ஸில்தான் ஏர்ப்போட்டுக்குப் போக வேண்டுமென்று விதி இருக்கிறது.

ஆட்டோவிலிருந்து இறங்கிக் கொண்டதும் வேணிக்கு அழுகை வரப் பார்த்தது.

''சந்தோஷமாய்ப் போய்ட்டு வாரும் தங்கச்சி!'' என்று ஆட்டோக்கார அண்ணை புன்னகைக்க முயன்றார்.

ஆட்டோக்கார மாமாவை ராசா இறுகக் கட்டிக்கொண்டான்.

பாசப் பிணைப்பிலிருந்து அவனை விடுவித்துப் பரியா விடை கொடுத்தபோது,

''ரெண்டு கிழமை சேர்ந்து இருந்தம், எங்களுக்கு எவ்வளவோ உதவி செஞ்சனீங்கள், உங்கட பேரை நானும் கேக்கலை, நீங்களும் சொல்லேல்லை அண்ணை'' என்றாள் வேணி.

''பேர் எதுக்கு தங்கச்சி. உமக்கு நான் அண்ணை. என்ரை ராசாவுக்கு நான் மாமா. இது போதுந்தானே!''

''இருந்தாலும் அண்ணை, ராசாவின்ரை அப்பா கேட்டால் சொல்ல வேணுந்தானே அண்ணை?''

''பேரைக் கட்டாயம் சொல்லத்தான் வேணுமே?''

''சொல்லுங்கோ அண்ணை.''

''என்ரை பேர்...''

''ம், சொல்லுங்கோவன்.''

''நாணயக்கார.''

''அண்ணை, இது சிங்களப் பேர் மாதிரி...? அப்ப நீங்கள் சிங்களவரே அண்ணை?''

''சிங்களவனெண்டா என்ன, தமிழனெண்டா என்ன தங்கச்சி? நான் மனுஷன்.''

அந்த மனுஷனைப் பார்த்து வேணி கண்ணீரோடு கரங்கூப்பி விடைபெற்றுக் கொண்டாள்.

''அய்போவன் அண்ணை.''

''தலைவா! உனக்காக தீக்குளிப்பேன்!''
''முதல்ல வீட்டுக்குப் போய் தண்ணி ஊத்திக்குளி... மூச்சே முட்டுது'' - ச. ராஜசேகர்

உடையழகு...நடைபழகு...



இன்றைய யூத்க்ரவுடை மிகவும் கவர்ந்த வார்த்தை... ஃபங்கி (Funky). ஃபங்கியா ட்ரஸ் பண்ணிக் கலக்க வேண்டும் என்பதே குறிக்கோள். ஃபங்கி என்றால் என்ன? போல்டாக ட்ரஸ் இருக்க வேண்டும். வித்தியாசமான மேக்-அப், ஹேர் ஸ்டைல், ட்ரஸ் கலர், டாட்டூஸ்... இப்படியிருந்தால் ஃபங்கி என்று பொருள். அறுபதுகளில் அமெரிக்காவில் ஃபங்கி என்று ஒரு பாப் க்ரூப் இருந்ததாம்.

கூட்டத்தில் பளிச்சென்று கவனத்தைக் கவர்வது ஃபங்கி லுக்! ஒரு பெண் கண் வழிய மையை அப்பிக் கொண்டு, (ராரா சரஸுக்கு ரா ரா ஜோதிகாவைப் போல்) மூக்கில் வளையம், புருவத்தில் கம்பி, தோள்பட்டை முதுகில் டாட்டூஸ், இரண்டு மூன்று ஹேர் கலர்ஸ், கை நகங்களில் கறுப்பு நெயில் பாலீஷ்... என இருந்தால் அதுவே ஃபங்கி! இப்படித்தான் ட்ரஸ் பண்ண வேண்டும் என ரூல் எதுவும் கிடையாது. ஒரு பெண் வேறு யாரையும் ஃபாலோ பண்ணாமல் 'என் லுக் தனி லுக்' என ட்ரஸ் பண்ணினால், அது அவளுடைய தனித் தன்மையைக் குறிக்கிறது. பர்ஸனாலிட்டியை அழகாக வெளிக்கொணருவதே ஃபங்கி லுக்!



ஃபன் அண்ட் ஃபங்கி ட்ரஸ் எப்படிப் பண்ணுவது?

★ தலைமுடி ஷோல்டர் வரை அல்லது ஷார்ட் ஹேர் ஸ்டைல் ஃபங்கி லுக். பர்ப்பிள், ஆரஞ்ச், க்ரீன், ப்ளூ... என ஹேர் கலர் செய்ய வேண்டும். இவை டெம்பரரி கலர்ஸ் என்பதால் வேறு கலருக்கு ஈஸியாக மாறலாம்.

★ உங்களுடைய ஜீன்ஸ் பாண்டில் ஒட்டவைக்க அல்லது குத்திக் கொள்ள பெரிய்ய சைனில்





ஃபங்கி லுக்!

பாட்ச் வொர்க், பின்கள், பட்டன்கள் வாங்கலாம்.

★ டிஃப்ரண்டான கீ செயின்கள் வாங்கி உங்கள் பான்ட் பாக்கெட்டில், ஹாண்ட்பேக் கைப்பிடியில் ஸ்டைலாக மாட்டலாம்.

★ கண் இமைகளுக்கு மேல் திக்காக ஐலைன் போடவும். கிழே இலேசாக இடவும். பிங்க் லிப் க்ளாஸ் போட்டால், அடடா நந்திதாதாஸுக்கு குட்டி சிஸ்டர் நீங்கதான்.

★ ஸ்டேஷனரி கடைக்குப் போய் கலர் கலர் மார்க்கர் பேனா வாங்கவும். உங்களுடைய ஜீன்ஸ் பான்ட், பேக் மற்றும் பர்ஸ் போன்றவற்றில் உங்கள் தோழி வட்டாரத்தைக் கூப்பிட்டு இஷ்டத்துக்கு வரைய அல்லது எழுதச் சொல்லுங்கள்.

★ கலர்கலர் ரப்பர் ப்ரேஸ்லெட்டுகளை வாங்கி அப்படியே அத்தனையையும் கைகளில் அடுக்கிக் கொள்ளவும். கூல் லுக்!

★ ஃபேஸ் க்ளிட்டர் வாங்கி கண்களின் கார்னரில் தடவவும். உங்களுடைய சிக்னேச்சர் மேக்-அப் இது தான்! கலக்குங்க.

★ காதுகளில் பெரிய பெரிய வளையம், ரப்பர், மெட்டல், ப்ளாஸ்டிக் என வெரைட்டியாகப் போடவும்.

★ பட்டையான ஹெட் பாண்ட்ஸ் தற்சமயம் ஃபாஷன்.

★ உங்களுடைய நகங்கள் தான் ஸ்டைல் ஸ்டேட்மென்ட்! கன்மெட்டல் சில்வர், டார்க் ப்ளூ, ஆரஞ்ச், ப்ரைட் க்ரீன்... என அசத்தலாக நகங்களில் பாலீஷ் பூசவும். ஃபீல் ஃப்ரீ...

★ ஸ்ட்ரெய்ட் கட் ஸ்கர்ட் போடவும். ப்ளாக், சில்வர், ப்ரைட் ரெட் மற்றும் ஆழ்ந்த ப்ளூவில் ஸ்கர்ட் போட்டால் ஃபங்கி கர்ள் நீங்கதான்.

★ ஸ்கர்ட், ஜீன்ஸ் மேல் போடப்படும் டாப்பில் கவனம் தேவை. கார்ட்டூன், பாட்டர்ன் மற்றும் வித்தியாசமாக எழுதப்படும் டீ-ஷர்ட்ஸ் போடலாம்.

★ சீக்வன்ஸ் இப்போது கரென்ட் டிரெண்ட். டாப்ஸ், பேக் மற்றும் ஸ்லிப்பர் வரை சீக்வன்ஸ் இருக்க வேண்டும்.

★ ஹாண்ட் பேக் லார்ஜ் சைஸ் இருந்தால் ஃபங்கி ஸ்டைல்!

– லதா சேகர்





''நான் YMCAயில படிக்கும்போது என் ஃப்ரெண்டோட தாத்தா இறந்துட்டார். ஃப்ரெண்ட்செல்லாம் சேர்ந்து அவனிடம் துக்கம் விசாரிக்கப் போனோம். தாத்தாவின் தலை மாட்டில் உட்கார்ந்து அழுதுக்கிட்டிருந்த அவன், என்னைப் பார்த்ததும் பக்கத்துல வந்து, 'நீ கொஞ்ச நேரம் மறைவா இரு. உன்னைப் பார்த்தாலே எனக்குச் சிரிப்பு வருது. நான் சிரிச்சா என்னைத் தப்பா நினைப்பாங்க'ன்னான். சாவு வீட்டுல கூட சிரிக்கற மாதிரி என் மூஞ்சி இருக்குன்னா, நான் மத்தவங்களைச் சிரிக்க வைத்தான் லாயக்குன்னு அன்னைக்கு முடிவு பண்ணினேன். துக்க வீட்ல கிடைச்ச இன்ஸ்பிரேஷன்தான் நான் இந்த லைக்குப் பிரபலமானதுக்குக் காரணம்'' என்கிறார் சிட்டிபாபு.

திரைப்படங்கள், பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், எனக் கலக்கி வரும் இந்த 'அரிகிரி', சில 'கிரி கிரி' அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

அரிகிரி மூளை காலி

ஒரு தடவை நானும், பாஸ்கியும் அரிகிரி அசெம்ப்ளியில் தென்கச்சி சுவாமிநாதனைக் கலாய்ச்சுட்டிருந்தோம். அவர் ஒரு கதை சொன்னார். ''ஒரு ஊர்ல இரண்டு பேர் உடம்பு சரியில்லைன்னு ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகியிருந்தாங்க. அவங்களை டெஸ்ட் பண்ணின டாக்டர் 'உங்க இரண்டு பேருக்கும் ஆபரேஷன் பண்ணனும்'னு சொல்லி இரண்டு பேரோட மூளைகளையும் எடுத்து ஃப்ரிட்ஜ்ல வெச்சுட்டார். விடிஞ்சா ஆபரேஷன். அந்த

அரி கிரி



''மன்னா எதிரிக்கு வீரமே இல்லை என்று எப்படி கூறுகிறீர்?''
''கேவலம் தப்பித்து ஓடும் என்னை விடாமல் துரத்துகிறானே!'' - எஸ்.அபிராமி ஸ்ரீ

மூளை காலி!

இரண்டு பேரும் ஹாஸ்பிட்டல்லயிருந்து தப்பிச்சுப் போய்ட்டாங்க. எங்க தேடியும் கிடைக்கல. இரண்டு மூளைங்க மட்டும் அப்படியே ஃப்ரிட்ஜ்ல இருக்கு. ஆறு மாசம் கழிச்சு டாக்டர் அந்த இரண்டு பேரையும் மார்க்கெட்ல மீட் பண்ணார். இப்ப என்ன பண்றீங்கன்னு கேட்டார். நாங்க ரெண்டு பேரும் இப்ப அரிகிரி அசெம்ப்ளி பண்றோம்ன்னு பதில் சொன்னாங்க'' என்று கதையை முடித்தார் தென்கச்சி. எல்லாரையும் நாம கலாய்ச்சா மனுஷன் நம்மளைக் கலாய்ச்சுட்டாரேன்னு நொந்துட்டோம்.

சரவணன்... சரவணன்... சரவணன்!

ஒரு தடவை 'காமெடி டைம்' நிகழ்ச்சியில ஃபோன் பண்ணினேன். ''சார் நான்தான் கனகா. ஹவுஸ் வொய்ப். என் ஹஸ்பெண்ட் பேரு சரவணன். டெய்லரா இருக்கார். இருங்க என்னோட முதல் தங்கையைக் கூப்பிடுறேன்'' என்றார். லைனில் வந்த தங்கை, ''சார் நான் கனகாவின் தங்கை. ஹவுஸ் வொய்ப். வீட்டுக்காரர் பேரு சரவணன். டெய்லரா இருக்கார்'' என்றார். அவரும் அடுத்த தங்கையை அழைத்தார். மூன்றாவதாக வந்தவர், ''நானும் ஹவுஸ் வொய்ப். என்னோட ஹஸ்பெண்ட் பேரு சரவணன். டெய்லரா இருக்கார்'' என்று அதே பதிலைத் தந்தார்.

'என்னடா இது... பேஜாராப் போச்சு'னு நினைத்துக் கொண்டே, ''எப்படிங்க மூணு பேரின் ஹஸ்பெண்ட் பேரும், தொழிலும் ஒண்ணா இருக்கு?''னு கேட்டேன்.

''நாங்க மூணு பேருமே ஒருத்தரைத் தான் கல்யாணம் பண்ணியிருக்கோம்''னாங்க. ''அந்தப் புண்ணியவானை பேசச் சொல்லுங்க''ன்னேன். சரவணன் பேசினார்.

''சார் அக்கா, தங்கைகளைக் கட்டிக்கிட்டா எந்தச் சண்டையும் வராது. அண்டர் ஸ்டாண்டிங் சூப்பரா இருக்கும்'' என்றார்.

''இதோட நிறுத்துவீங்களா, தொடருமா?''னு கேட்டேன். ''இவங்களுக்கு நான்காவது ஒரு தங்கச்சி இருக்கு. ஆனா, அது ரொம்ப சின்னப் பொண்ணு'' என்றார். ''போதும்டா சாமி''னு போனை கட் செய்தேன்.



எல்லாம் சரி, அதென்ன 'சிட்டிபாபு'?

''ஊர்ப் பக்கமிருந்து கலைத் துறைக்கு வர்றவங்க ரொம்ப பேர் தங்களோட பேருக்கு முன்னாடி ஊர் பேரைப் போட்டுப்பாங்க. நான் பக்கா சென்னை வாசி. காமெடி நடிகர் சந்திரபாபு என்னோட ஃபேவரிட். அதனால 'சிட்டி'யை முன்னாடியும் பாபுவைப் பின்னாடியும் போட்டு சிட்டி பாபு ஆனேன்'' என்கிறார்.

- ராகவ்குமார்

''குஸ்தி வாத்தியாரை பத்து பேர் சேர்ந்து அடிச்சிட்டாங்க...''
''ஐய்யோ அவருக்கு என்னாச்சு!'' ''நாஸ்தியாயிட்டார்.'' **- பிரியதர்ஷன்**

''ஊரிலே இருக்கறது சொந்த வீடா?''

''ஆமாம்''

''அந்த வீட்டை வந்த விலைக்கு வித்துப்புடு. குடும்பத்தோட மெட்ராஸுக்குக் குடித்தனம் போயிடு. கொஞ்ச காலம் அங்கேதான் நீ இருக்கணும்.''

சங்கராபுரம்



திக்கென்றது மனம்.

'இருக்கறது அந்த ஓட்டு வீடுதான். அதுவும் நாகப்பட்டிணம் பக்கத்துல இருக்கற சோழவித்யா புரம் என்கிற கிரா மத்தில். அது என்ன விலைக்குப் போகும்? சுதந்திரம் வந்து ரெண்டு வருஷம்தான் ஆறது. மிஞ்சி மிஞ்சிப் போனா

ஆயிரத்தைந்நூறு ரூபா வரும். மூணு பெண் குழந்தைகள் வேற. மெட்ராஸ்ல நமக்கு யாரைத் தெரியும்? எங்கே போய் நிக்கறது?'

புத்திக்குள் ஏராளமாய் கேள்விகள் ஓடின. அதைப் படித்துவிட்ட மாதிரியே பார்த்தது அந்த கருணைத் தெய்வம்.

குறுஞ்சிரிப்பும், தீட்சண்யமான விழிகளும், நெற்றியில் பனீரிட்ட விபூதியும், குங்குமமும், துவராடையுமாக காட்சியளித்த தவக் கொழுந்தை, ஞானாக்னியாகத் துலங்கியபோதும் லௌகிக துயரங்களை அறிந்து ஆற்றுவிக்கும் அருளமுதை, ஸ்ரீ சந்திரசேக ரேந்திர சரஸ்வதி என்கிற பெயர்கொண்டு எனை ஆட்கொண்ட காஞ்சி மாமுனியை விழுந்து வணங்கினேன். மடை திறந்த மாதிரி கண்களில் புனல் பிறந்தது. காரணம் புரியாமல் கேவலோடு பெருகி வெளிப்படுகிற அழுகை.



அம்மாவின் குரலைவிட இனிமையாக, உரிமையாக, ஆதரவாக ஒலிக்கிறது பெரியவாளின் குரல்!

டால்மியாபுரம் கணேசன்



''ஒன்னும் பயப்படாதே. போ... மடைப்பள்ளிக்குப் போய், உனக்குத் தேவையானதை எடுத்துண்டு வா.''

அழுகை அடங்கியதே தெரியவில்லை; எழுந்தேன்.

மனம் அடங்கிய நிலையிலும், புத்தி அடங்காமல் கேட்டது:

''அதுக்கப்புறம்?''

''அப்புறமா? அப்ப பாத்துக்கலாமே. நீ ஜெயில்லே கத்துண்ட நளபாகம் ஒனக்குக் கை கொடுக்கும். நன்னாயிருப்பே... ஒன்னும் பயப்படாதே. மடைப்பள்ளிக்குப் போய் ஒனக்குத் தேவையானதை எடுத்துண்டு வா.''

என்ன சொல்கிறார் என்று புரியவில்லை. ஏதோ ஒரு உந்துதலுடன் சமையல் கட்டுக்குப் போனேன். இரண்டு ஜாரிணி, பெரிய கைப்பிடியுள்ள ஒரு அல்வாகிளறும் குரும்பி, ஒரு வெண்கல அன்னவெட்டிக் கரண்டியுடன்

வந்து ஸ்வாமிகளின் முன் வைத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி னேன்.

கொண்டு வந்த சாமான்களைப் பார்த்து ஒரு புன்முறுவல்! அதன் மேல் சோபன அக்ஷதை, குங்குமப்பிரசாதம், அம்பாளுக்கு அர்ச்சனை செய்த புஷ்பம் ஒரு கை எடுத்துப் போட்டு விட்டுச் சொன்னார்: "தைரியமா புறப்பட்டுப் போ. அன்னதாதா சுகி பவா!"

"அது தர்மம் பண்றவாளுக்குன்னா? நான் பண்ணப்போறது சமையல் தொழில்."

பெரியவா சிரித்துக் கொண்டே சொன்னார். "ஒனக்கு மஹாபாரதக் கர்ணன் கதை தெரியுமா? அவன் சாதாரணத் தேரோட்டியா இருந்தபோது, ஒரு வழிப்போக்கன் அவங்கிட்டே வந்து, 'ஐயா, ரொம்ப தாகமா இருக்கு. நீர் நிலை எங்கே இருக்கு?'ன்னு கேட்டான். அதுக்கு கர்ணன், தடாகம் இருக்கும் இடத்தைச் சுட்டி கையைக் காட்டினான்.

'நானிருக்க பயமேன்' என்று தைரியம் கொடுத்தன அவரது பார்வையும் அந்த அபயஹஸ்தமும்

பிற்காலத்தில் அங்க தேசத்து மன்னனாகி, துரியோதனனுக்காக சண்டை போட்டு, போர்க்களத்தில் உயிருக்குப் போராடிண்டிருந்தான். அவனுக்கு மரண தாகம் எடுத்தது. தண்ணீர் கொடுக்க யாரும் பக்கத்தில் இல்லை. அவனாலே பேசவும் முடியலே. எதேச்சையா தன்னோட ஆள் காட்டி விரலை வாயிலே வெச்சபோது கங்கை கை வழியா பிரவாகித்தது. ஏன் தெரியுமா? அன்னிக்குத் தண்ணீர் இருக்கு மிடத்தைச் சுட்டிக் காட்டினான் பாரு... அதனோட பலன்."

'இந்தக் கதையை எதுக்குச் சொல்றார்? தர்மம் பண்ற அளவுக்கு நமக்கு யோக்கியதையும் இல்லை; ராஜா ஆகவும் ராஜ்யம் இல்ல' நிலைகொள்ளாமல் ஓடிய புத்தியை நிறுத்தியது பெரியவாளின் குரல்!

"சரி, குடும்பத்தை அழைச்சுண்டு போறதுக்கு முன்னாலே, மெட்ராஸிலே இருக்கும் மடத்து ஆபீஸுக்குப் போ."

மீண்டும் ஒருமுறை பெரியவாளை நமஸ்கரித்தேன். கருணைத் தெய்வத்தின் அபயகரம் மீண்டும் உயர்ந்தது. நானிருக்க பயமேன்' என்று தைரியம் கொடுத்தன, அவரது பார்வையும், அந்த அபயஹஸ்தமும்.

ஜாரிணி கரண்டிகளை ஒரு கோணிச் சாக்கில் சுருட்டிக் கொண்டு, மெட்ராஸுக்குப் பயணம். மாம்பலம் சிவா விஷ்ணு கோயில் அருகில் ஸ்ரீமடத்தின் காரியாலயம்.

உள்ளே நுழைந்ததும் மானேஜர் சொன்னார்:

அருள்வாக்கு

ஞானிக்கு ஆத்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறெதுவுமே தெரிவதில்லை. ஒரே பரமாத்மாதான் இத்தனையாகவும் தெரிகிறது என்று கண்டுகொண்டவன் அவன். வெளியிலே தெரிகிற தோற்றத்தை மாயை என்று தள்ளிவிட்டு, எல்லாவற்றுக்கும் உள்ளேயிருக்கிற பரமாத்ம ஸ்வரூபத்தை மட்டுமே அனுபவிக்கிறவன் அவன். வெளிப் பார்வைக்குத் தெரிகிற உலகம் மாயை என்று ஆகிவிட்டதால், இந்த மாயா

''யார் கிருஷ்ணமூர்த்தியா, வாங்கோ! பெரியவாகிட்டேருந்து நீங்க வரப்போற தகவல் வந்தது. திருவல்லிக்கேணியில் ஒரு வீடு பார்த்து வச்சுருக்கேன். வாசல்லே திண்ணை இருக்கு. பெரிய வீடு. மாதம் ரூ.15/- தான் வாடகை. வீட்டுச் சொந்தக்காரா அட்வான்ஸ் ஒண்ணும் வேண்டாம்னுட்டா! வாங்கோ, வீட்டைப் போய்ப் பார்க்கலாம்'' என்றபடி என்னுடன் கிளம்பிவிட்டார்.

வீடு லக்ஷ்மிகரமாயிருந்தது. மனசுக்குப் பிடிச்சிருந்தது. உடனே ஒரு மாத வாடகையைத் தானே கொடுத்து சாவியை வாங்கிக் கொடுத்துட்டார் மேனேஜர். ''எப்ப குடிவரப் போறேள்?''

''இன்னும் பத்து நாள்லே ஊர்லே எல்லாத்தையும் முடிச்சுண்டு வந்துடறேன்.''

''போய்ட்டு வாங்கோ! என்ன உதவி வேணும்னாலும் தயங்காம கேளுங்கோ! பெரியவா உத்தரவு.''

மானேஜரின் பேச்சில் குளிர்ச்சியும், அன்பும் தெறித்தன.

என்ன மனுஷர் இவர்! வார்த்தைக்கு வார்த்தை பெரியவா மீதான அபிமானமும், பக்தியும் என்னை நெகிழ வைத்தன.

அன்று மாலையே ரயிலைப் பிடித்து நாகப்பட்டினம் வந்து கிராமத்தை அடைந்தேன். என் வருகைக்காகவே காத்திருந்த மனைவி சாரதத்திடம் விவரம் சொன்னேன்.

''பெரியவா ஆக்ஞைன்னா! எல்லாம் நல்லபடி நடக்கும். எந்த யோசனையும் பண்ணாமே புறப்படற வழியைப் பாருங்கோ!''

பளிச்சென்று வந்தது அவள் பதில்!

நினைவுகளில் மூழ்கித் தோய்ந்து பேசிக்கொண்டே வந்த பெரியவர் திடீரென்று சாய்ந்தார். பூரணியும், அரவிந்தனும் திடுக்கிட்டுப் போனார்கள்.

(தொடரும்)

லோகத்தில் ஞானிக்குக் காரியம் எதுவுமே இல்லை. பார்க்கிறவன், பார்க்கப்படுகிற வஸ்து, பார்வை எல்லாமே ஒன்றாக அடங்கிப் போனவனுக்குக் காரியம் எப்படி இருக்க முடியும்? அவன் பிரம்மமாகவே இருக்கிறான் என்று உபநிஷத்து சொல்கிறது.

பிரம்மத்துக்குக் காரியம் இல்லை. ஆனால், இந்த மாய உலகத்தில் அகப்பட்டுக் கொண்டு காரியங்களைச் செய்து வருகிறவர்கள் ஈசுவரன் என்று ஒருவனைப் பூஜை செய்து தங்கள் காரியங்களை நடத்தித் தரவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். நல்ல காரியங்களுக்காக நல்ல மனஸோடு பிரார்த்தித்தால் ஈசுவரனும் அவற்றை நடத்தித் தருகிறார். இதிலிருந்து ஈசுவரன் காரியமே இல்லாமல் இருப்பவரல்ல என்று தெரிகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



கலக்க வருதுப்பா

கல்கி

கெட் ரெடி!
கெட் ரெடி!
கெட் ரெடி!

உங்க மாவட்டங்கள்ல
'சூப்பர்' எதுங்க? 'வேஸ்ட்' எதுங்க?

- நீங்க ஜாலியா ரவுண்டடிக்கிற டூரிஸ்ட் ஸ்பாட் எது?
- பார்த்ததும் பரவசமா கும்பிடு போடற கோயில் எங்கெல்லாம் இருக்கு?
- அசத்தலா போட்டுகிட்டு அதிரடி பண்ண சேலை, ஜீன்ஸ் சுத்துவட்டாரத்துல எங்கேயாச்சும் கிடைக்குமா?
- கல்லூரிக் கண்மணிகளின் சாதனை எதுவும் தெரியுமா..?
- உங்க மாவட்டங்களோட தலைபோற பிரச்னை எதுங்க? எப்படித் தீர்க்கலாம்?
- மிஸ்டர்/மிஸ் மாவட்டம் யாருங்க! என்ன காரணமுங்க?
- கலக்கலா கதை எழுதுவீங்களா? அசத்தலா கவிதை வருமா?
- லொள்ளு பண்ற 'ஜோக்ஸ்' கைவசம் இருக்கா?

-'ஆமா'ன்னா உடனே 'கல்கி'க்குத் தட்டி விடுங்க!



நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்க திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களுக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- திருவண்ணாமாலை, வேலூர் வட்டாரத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார, சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 20.8.09

கலக்க வருதுப்பா கல்கி
திருவண்ணாமலை, வேலூர்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



ஜெகதீஷ் ஒரு க்ரு கோஸ் மாத்திரையை விழுங்கியபோது, அவனுடைய ஆஃபீஸ் அறைக் கதவுக்கு வெளியே, ''ஸார்'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

பெயிண்டர் லாரன்ஸ் நின்றிருந்தான்.

''என்ன லாரன்ஸ்? இன்னும் எத்தனை ரூம்ல பெயிண்ட் அடிக்கணும்...?''

''ரெண்டு ரூம் ஸார்.''

''இதோ பார் லாரன்ஸ். ஆஃபீஸ் பூஜைக்கு இன்னும் ரெண்டு நாள்தான் இருக்கு. அதுக்குள்ளே வேலையை முடிச்சுடுவியா...?''

''முடிச்சுடுவேன் ஸார். ஆனா ஒரு சின்ன பிரச்னை. நீங்க வாங்கிக் கொடுத்த பெயிண்ட் க்வாலிடி சரியில்லை. மூணு நாளைக்கு முன்னாடி அடிச்ச ஃபர்ஸ்ட் கோட் பெயிண்டே இன்னமும் காயலை.''

''அந்த பெயிண்ட் டீலர்கிட்டே நானே பேசிக்கிறேன். நீ இதைக் காரணம் காட்டி வேலையை முடிக்காமே இருந்துடாதே.''

பெயிண்டர் லாரன்ஸ் கிளம்பிப் போனதும் ஜெகதீஷ் தன் வாட்சைப் பார்த்தான். ராத்திரி மணி பத்து.

''ஏதாவது ஒரு நல்ல ஹோட்டலுக்குப் போய் டின்னர் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போய்விட வேண்டியதுதான்!'' ஜெகதீஷ் யோசனையோடு மேஜையின் மேல் இருந்த கார் சாவியைத் தேடி எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்த போது, ஆஃபீஸின் வாசற்படிகளில் அந்த இளம்பெண் ஏறிக் கொண்டிருந்தாள். சிந்தடிக் இழைகள் மின்னும் ஊதா நிற சுடிதாருக்குள் ஒரு சிற்பமாய்த் தெரிந்தாள். பெரிய கண்களில் நிறைய காந்தம்.

''நீங்க மிஸ்டர் ஜெகதீஷ்?''

''எஸ்...''

''ஐ'யம் ஸ்வேதா. நான் 'சத்ய ஜோதி' பத்திரிகை ரிப்போர்ட்டர். பெண்களுக்கான காஸ்மெடிக்ஸ் பொருட்கள் தயாரிக்





ஸ்...ஸ்...ஸ்வேதா...

ராஜேஷ்குமார்

கிற கம்பெனிதானே உங்களோடது?''

''ஆமா...''

''அதைப் பத்தின ஒரு பேட்டி வேணும் ஸார்.''

''அதுக்கெல்லாம் எனக்கு நேரம் கிடையாது.''

''ப்ளீஸ் ஸார்... பத்தே பத்து நிமிஷம் போதும் ஸார். எண்ணி நாலே கேள்விதான்.''

ஜெகதீஷ் எரிச்சலோடு தலையசைத்தான்.

''உள்ளே வா...! நீ சொன்னபடி உனக்குப் பத்து நிமிஷம்தான் டயம். நாலு கேள்விதான் கேட்கணும்...''

''தேங்க்யூ ஸார்...''

உள்ளே போனார்கள்.

''ம்... கேளு...''

''முதல் கேள்வி. உங்களுக்கு மனசாட்சி இருக்கா...?''

''நீ இப்ப என்ன கேட்டே?'' ஜெகதீஷ் கோபமாய்க் குரலை உயர்த்த அவள் கையமர்த்தினாள்.

''நான் கேட்ட முதல் கேள்விக்கு உங்களால பதில் சொல்ல முடியாதுன்னு எனக்குத் தெரியும். அதனால ரெண்டாவது கேள்வியைக் கேட்கிறேன். நீங்க மனுஷனா?''

ஜெகதீஷ் வெகுண்டான். ''ஏய்... நீ பேட்டி எடுக்க வந்தியா? இல்ல பிரச்னை பண்ண வந்தியா...?''

''நீ சொன்ன அந்த ரெண்டுமே இல்லை. உன்கிட்டே ஒரு பிஸினஸ் பேச வந்தேன்...''

''பிஸினஸா...?''

''ஆமா... நான் பிரஸ் ரிப்போர்ட்டர் கிடையாது. ஒரு அரசியல் கட்சியில் கொஞ்ச நாள் மகளிரணித் தலைவியாய் இருந்தேன். அந்தக் கட்சி கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பா மாறின மாதிரி காணாமல் போகவே சமூக சேவையில்

இறங்கிட்டேன். போன சனிக்கிழமை ராத்திரி பதினொரு மணிக்கு நீ குடிச்சுட்டு, காரை ஓட்டிக்கிட்டுப் போய், போட் கிளப் ரோட்ல நடந்து போய்க்கிட்டிருந்த ஒரு பெரியவர் மேல மோதிட்டு, நிற்காமே போயிட்டே. அந்தப் பெரியவர் ஸ்பாட்லயே இறந்து போயிட்டார். ஞாபகம் வருதா...?''

ஜெகதீஷ் வியர்த்தான்.

''என்ன ஞாபகம் இருக்கா?''

''அது.. நா... நான் இல்லை!''

''அப்படியா...? அப்படீன்னா அந்த ஆக்ஸிடெண்ட் நடந்தபோது அதை செல்ஃபோன் கேமராவில் ஃபோட்டோ எடுத்திருக்கேன். அந்த ஃபோட்டோவில் இருக்கிறது நீதான். இதைக் கொண்டு போய் போலீஸில் குடுத்துடறேன். போலீஸ் வந்து உன்னை விசாரிக்கும்போது அந்த ஆக்ஸிடெண்ட்டைப் பண்ணினது நானில்லைன்னு சொல்லிடு. வரட்டுமா?'' சொல்லிக் கொண்டே ஸ்வேதா நகர முயன்ற விநாடி -

ஜெகதீஷ் பதற்றமாய்ப் பக்கத்தில் வந்தான்.

''நில்லு... உனக்கு இப்ப என்ன வேணும்..?''

''பணம், மனி, டப்பு, ரூப்யா...''

''எவ்வளவு?''

''இப்போதைக்கு அட்வான்ஸாய் அஞ்சு லட்சம் குடு. மீதி அமௌண்ட் பின்னாடி. அப்புறம் இந்த செல்ஃபோன் உனக்கு...!''

''செட்டில் பண்ணணும் அவ்வளவுதானே..? இன்னிக்கே ஃபுல்லா செட்டில் பண்ணிடறேன்...'' - சொல்லிக் கொண்டே பக்கத்தில் வந்த ஜெகதீஷ், ஸ்வேதா எதிர்பார்க்காத ஒரு விநாடியில் அவளுடைய கழுத்தை எட்டிப் பிடித்து சுவரை நோக்கித் தள்ளிக்கொண்டு போய் 'நெக்'கென்று இடித்தான்.

ஸ்வேதா அலறக்கூட அவகாசம் தராமல் பின் மண்டையில் ரத்தம் வழியச் சரிந்து, இறந்து போனாள்.

ஜெகதீஷ் நெற்றி வியர்வையை வழித்து ஸ்வேதாவின் மேல் சுண்டிவிட்டு குரூரமாய்ப் புன்னகைத்தான்.



சாதுர்யா சக்ஸஸ் - 3

சாதுர்யா பேசறேன்...

தலை கிடைக்காத பெண்ணின் உடல் பாகங்களைப் பார்க்க மார்ச்சுவரிக்குப் போயிருந்தேன். இடது கையின் ஆட்காட்டி விரலில் வோட்டு போட்டதற்கான அடையாள மை இருந்தது. போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கு முன் விரல்களில் ரத்தக் கறை இருந்ததால அஸிஸ்டெண்ட் கமிஷனர், டாக்டர்கள் பார்வைக்கு அது தட்டுப்படாமல் போயிருக்கு. அதைப் பார்த்ததும் சமீபத்தில் எங்கே தேர்தல் நடந்ததுன்னு விசாரிச்சேன். கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் இடைத்தேர்தல் நடந்ததைத் தெரிஞ்சுக்கிட்டேன். அந்தச் செய்தி வெளியான செய்தித் தாளோடும் விரல்களை ஃபோட்டோ எடுத்துக்கிட்டும் கமிஷனரைச் சந்திச்சேன். அந்தப் பெண்

''ஃபுல் செட்டில்மென்ட் பண்ணிட்டேன். இப்ப உனக்குச் சந்தோஷம் தானே...?''

மறுநாள் மாலை ஏழு மணி.

தன் வீட்டு மாடியறையில் உட்கார்ந்து அன்றைய மாலை பேப்பரில் வெளியாகியிருந்த, ஸ்வேதா பற்றிய செய்தியை உதட்டில் உறைந்து போயிருந்த சிரிப்போடு படித்துக்கொண்டிருந்தான் ஜெகதீஷ்.

''அய்யா...!''

ஜெகதீஷ் பேப்பரிலிருந்து நிமிர்ந்தான்.

கதவுக்கு வெளியே வேலைக்காரன் நின்றிருந்தான்.

''ஐயா! ஒரு பொண்ணு வந்திருக்கு. உங்களைப் பார்க்கணுமாம்... என்ன விஷயம்னு கேட்டேன். உங்ககிட்டதான் சொல்லணுமாம்.''

தொண்டாமுத்தூரைச் சேர்ந்தவள்னு உறுதியா சொன்னேன். கமிஷனர் என்னை உடனே தொண்டாமுத்தூருக்கு அனுப்பினார். அங்கே வோட்டு போட்டவங்க லிஸ்ட்டை எடுத்ததும், இறந்த பெண்ணைக் கண்டுபிடிச்சதும், கொலையாளியைப் பிடிச்சதும் பிறகு நடந்த கதை. நான் கொடுத்த க்ளூவை வெச்சு 'வோட்டு போட்ட மை அடையாளம்'னு சரியா எழுதின வாசகர்களுக்கு வழக்கம் போல பரிசு. அவங்களோட பெயர், விவரம் வட்டமேஜை பக்கத்தில்!

'யாராயிருக்கும்?' - யோசனையோடு இறங்கி வந்தான் ஜெகதீஷ்.

ஹாலில் சோபாவில் உட்கார்ந்திருந்த சாதுர்யா, ஜெகதீஷைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

''ஸாரி... ஃபார்... த... டிஸ்டர்பன்ஸ்''

''இட்ஸ் ஓகே! நீங்க?''

''ஐ'யம் சாதுர்யா. போலீஸ் க்ரூ ப்ராஞ்ச்.''




ரெடி...ஸ்டெடி...சிரி...

உலகப் புகழ்பெற்ற கவிஞர் மில்டன் சொன்னது :

''எனக்குத் திருமணமாகி, புது மனைவி, வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததும், நான் எழுதிய நூல், 'இழந்த சொர்க்கம்'. பிறகு பல ஆண்டுகள் கழித்து என் மனைவி இறந்தவுடன் நான் எழுதிய நூல், 'திரும்பப் பெற்ற சொர்க்கம்'.'' - இதைத்தான் 'கவிக் குசும்பு' என்பதோ...?

- கே.கஸ்தூரி, வேலூர்.



போலீஸ் என்ற வார்த்தையைக் கேட்டதுமே ஜெகதீஷின் அடிவயிற்றில், அட்ரினலின் சுரந்து நெற்றி வியர்த்து வாய் உலர்ந்தது.

''சொல்லுங்க... என்ன விஷயம்?''

''உங்களுக்கு ஸ்வேதாவைத் தெரியுமா?'' சாதுர்யா இப்படிக் கேட்டதும் ஜெகதீஷ் கலவரமானான். ''யாரது...?''

''இந்தப் பேர்ல யாரையும் உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியாதே...!''

சாதுர்யா ப்ரவுன் கவரிலிருந்து அந்த ஃபோட்டோவை உருவி நீட்டினாள்.

''இந்த ஃபோட்டோவில் இருக்கிற பெண்தான் ஸ்வேதா. இவளை யாரோ கொலை செய்து வண்டலூருக்குப் பக்கத்

தில் இருக்கிற ஒரு காட்டுப் பகுதியில், பாடியை விசிட்டுப் போயிருக்காங்க.''

''சரி...!''

''நேற்று ராத்திரி பத்து மணி சுமாருக்கு இந்த ஸ்வேதா உங்க புது ஆஃபீஸ் கட்டடத்துக்கு வந்திருக்கா...''

''அ...அ... அப்படின்னு யார் சொ... சொன்னது?''

''ஒரு கால் டாக்ஸி டிரைவர். இன்னைக்கு பேப்பரில் வந்த செய்தியையும் ஸ்வேதாவோட ஃபோட்டோவையும் பார்த்துட்டு, தன்னை யார்ன்னு சொல்லிக்காமே ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து எனக்கு ஃபோன் பண்ணினார். 'மேடம்! அந்த ஸ்வேதா பலான தொழில் பண்ற பெண். அடிக்கடி அவ கஸ்டமர்களோட போறதைப் பார்த்திருக்கேன். நேத்திக்கு அவ என்னோட கால் டாக்ஸியில் ஏறினாள். பெசன்ட்நகர்ல ருக்மிணி அவென்யூவின் இரண்டாவது க்ராஸ் ஸ்ட்ரீட்ல இருக்கிற 'ஜெகதீஷ் காஸ்மெடிக்ஸ்' ஆஃபீஸ் வாசலில் இறங்கிட்டா. நான் வந்துட்டேன். பட் அவ அந்த ஆஃபீஸுக்குள்ளே போனாளா இல்லையான்னு எனக்குத் தெரியாது. நீங்க விசாரணை பண்ணி உண்மையைத் தெரிஞ்சுக்கங்க'ன்னு சொல்லிட்டு லைனை கட் பண்ணிட்டார்.''

ஜெகதீஷ் பதற்றத்தை வெளிக்காட்டாமல் புன்னகைத்தான்.

''டாக்ஸி டிரைவரே அந்தப் பெண் ஆஃபீஸுக்குள்ளே போனாளா இல்லையான்னு தெரியாதுன்னு சொல்லியிருக்கும்போது என்கிட்டே எதுக்காக விசாரணை?''

''அந்த டிரைவருக்குச் சந்தேகம் இருந்திருக்கலாம். ஆனா எனக்கு அந்தச் சந்தேகம் இல்லை. ஸ்வேதா உங்க புது ஆஃபீஸ் தான் வந்திருக்கா. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் ஸ்வேதா கொலை செய்யப்பட்ட நேரம் ராத்திரி மணி பத்து.''

''நான் ராத்திரி பத்து மணி வரைக்கும் புது ஆஃபீஸில் இருந்தது உண்மை. பட் நீங்க சொல்ற மாதிரி அந்த ஸ்வேதா உள்ளே வரலை.''

''ஸாரி மிஸ்டர் ஜெகதீஷ். ஸ்வேதா உங்க புது ஆஃபீஸுக்குள்ள வெச்சுத்தான் கொலை செய்யப்பட்டிருக்கா. அதுக்கான ஒரு தடயம் இருக்கு...!''

ஜெகதீஷ் துணுக்குற்றான். 'நான்தான் ஸ்வேதா செத்து விழுந்த இடத்தை சுத்தப்படுத்தி, அவளுடைய செல்ஃபோனையும் நெருப்பில் போட்டு எரித்துவிட்டேனே!?'

சாதுர்யா, ஜெகதீஷை ஏறிட்டாள்.

''என்ன... அந்தத் தடயத்தைக் காட்டட்டுமா..?''

ஜெகதீஷ் எந்திரத்தனமாய்த் தலையாட்ட சாதுர்யா ஒரு பாலிதீன் கவருக்குள் இருந்த தடயத்தைக் காட்டினாள்.

தடயத்தை உற்றுப் பார்த்த ஜெகதீஷின் இருதயம் தடம்புரண்டு தாளம் தப்பி, தாறுமாறாய்த் துடிக்க ஆரம்பித்தது.

துப்பறியும் போட்டி-4

சாதுர்யா எடுத்து வைத்த அந்தத் தடயம் என்ன?

வாசகர்களே...!

நீங்க கண்டுபிடிக்க இரண்டு க்ளூக்கள்

1. கறுப்புத் தங்கம்
2. இந்த வாசனை சிலருக்கு அலர்ஜி.

போஸ்ட் கார்டு எடுங்க. விடையை எழுதுங்க. 'துப்பறியும் போட்டி - 4' என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்க. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி: 29.7.09



வாசிப்பு அனுபவம்

தெய்வங்களைக் கோபிக்கும் தாபம்!

கவிஞனின் ஆதர்ச உலகத்துக்கும் வாழ்க்கையின் யதார்த்தத்துக்கும் இடையேயான நிரந்தர இடைவெளி முகத்தில் அறையும் சோகம். 'விக்ரமாதித்யன் கவிதைகள்' இந்தச் சோகத்தின் இழைகளைக் கொண்டு பின்னிய 688 பக்கத் தொகுப்பு. தேர்வும் தொகுப்பும் வித்யா சங்கர். (நூல் நெடுக தொகுப்பாசிரியரின் பெயரும் இடம் பெற வேண்டுமா?)

காற்றைப் போல் பல் வேறு தளங்களில் நுழைந்து, நுகர்ந்து வெளியேறி மணத்தைச் சுமந்து வீசுகின்றன விக்ரமாதித்யன் கவிதைகள். புரியாத சொற்களே இல்லாத இப்புதையலில், புரியும் வரிகளைப் போலவே புரியாத வரிகளுக்கும் வீரியம் அதிகம். அவை நம்மை சிந்தனைக் கிணற்றுக்குள் அமுக்கி அமுக்கித் திணறடிக்கின்றன.

வார்த்தைகளைத் தேடி அலங்கரிக்காமல் அப்போதைக்கப்போது பூக்கும் சொல்மலர்களைக் கொண்டு இசைத்துக் கட்டிய சின்னச் சின்ன வரிச் செண்டுகள், (நூலில், அச்சாகாத வெள்ளைத்தான் பகுதியே அதிகம்!) செண்டுகளால் வளரும் கவிதை மாலைக்குள் புதைந்துள்ள தனிக் கவிதைக் கண்ணிகள்... என்று நின்று ரசிக்க நிறைய இருக்கிறது:

எரியும் தீநாக்கு இரைதேடி அலைந்துபோய்
இயல்பாகத் தன்னுள் தானே
எரிவது தெரியாது எரியும்

இவை 'காட்டுத் தீ' என்ற பதின்மூன்று வரிக் கவிதையின் 5, 6ஆம் வரிகள். படிம பலம் இதற்கு தனிக் கவிதை அந்தஸ்து தருகிறது.

'வர்ணங்களைச் சொல்லித் தந்தது' என்ற கவிதையின் ஆறாவது பத்தி:

அருவியிலிருந்து
எப்படி வடியும்
அதன் வண்ணம்

சிந்தனை ஆழம் இந்தப் பத்தியையே ஒரு குறுங் கவிதையாக்குகிறது.



சமூகத்தின் பேரில் கோபமும் எள்ளலும் தெறிக்கும் கவிதைகளிலும் வெறுப்போ ஆங்காரமோ இல்லாதது பெரிய விஷயம். உணர்ச்சிகளின் தீவிரம் போலித்தனமின்றி வெளிப்படுகிறபோதும் ஆபாசமோ அருவருப்போ தோற்றுவிக்காமல் அதிர்ச்சியூட்டுகிறது. கவிஞன் கலைஞனாகிறபோதே இது சாத்தியம் என்று எண்ண வைக்கிறது.

விக்கிரமாதித்யனின் பார்வைக் கூர்மை ஸ்டிக்கர் பொட்டையும் கவிதையாக்குகிறது; அவரது தாபம் தெய்வங்களைக் கோபிக்கிறது; அவரது இயலாமை சோர்வில் சுருள்கிறது; எதற்கும் கட்டுப்படாத அவரது முரட்டு உள்ளம் கவிதையில் மீண்டெழுகிறது.

- விக்ரமாதித்யன் கவிதைகள் (தேர்ந்தெடுக்கப்பெற்ற தொகுப்பு) தொகுப்பாசிரியர் : கவிஞர் வித்யாஷங்கர், வெளியீடு : அம்ருதா பதிப்பகம், 5, 5வது தெரு, எஸ்.எஸ். அவென்யூ, சக்தி நகர், போரூர், சென்னை-600 116. விலை ரூ.350/-

சீதா ரவி

"அடி அக்கா, எனக்கு உன்னைத் தவிர வேறு யாரிருக்கிறார்கள்? என் கவலைகளை யாரிடம் சொல்லி ஆறுவேன்? இத்தனை நாளாக எட்டிப் பாராமல் இருந்து விட்டாயே!" என்று சொல்லி, சாரதையின் மடியில் முகத்தை வைத்துக் கொண்டு கண்ணீருகுத்தாள் லக்ஷ்மி.

"அசடே, நீ என்ன இன்னமும் பச்சைக் குழந்தையா? பதினெட்டு வயதாகிறது. ஒரு குழந்தை பெற்றெடுத்து விட்டாய். வெட்கமில்லாமல் அழுகிறாயே. சங்கதி என்ன? சொல்" என்று சொல்லி, சாரதை அருமையுடன் லக்ஷ்மியின் கண்ணீரைத் துடைத்தாள்.

இப்பெண்மணிகள் மயிலாப்பூரில் மாட வீதி ஒன்றிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு தெருவில் ஓர் அழகிய புதுவீட்டின் மாடிமீதிருந்த ஹாலில் அமர்ந்திருந்தனர். அவர்களில், சாரதை பத்தரை மாற்றுப் பொன்னொத்த மேனியினாள். விசாலமான நெற்றியும், அறிவு ஊறித் ததும்பும் கண்களும் படைத்தவள். அவள் கண்களினுள்ளே இருந்த கருவிழிகளோ, அங்கு மிங்கும் குறுகுறுவென்று அலைந்து கொண்டிருந்தன. தம் கடைக்கண் வீச்சாகிய ஒரே ஆயுதத்தின் துணைகொண்டு ஆடவரையும் பெண்டிரையும் அடக்கியாளும் திறனுடையவள் அவள் என்பது, அவ்விழிகளை ஒருமுறை பார்த்த அளவினாலே விளங்கும். அப்போதலர்ந்த ரோஜா மலரின் இதழையொத்த தன் அதரங்களில் புன்னகையிருக்க, வேறு பொன், கல் நகைகள் எதற்கு என்று கருதியே போலும், அவள் அதிக ஆபரணங்கள் அணிந்து

அமரர் கல்கி



கொள்ளவில்லை. தலைப்பில் சரிகைக் கரை போட்ட நீலநிறக் கதர்ப்புடைவை அவள் மேனி அழகைப் பதின்மடங்கு மிகுதிப்படுத்திக் காட்டிற்று.

இப் பொன்னொத்த வண்ணமுடை யாளினின்றும் பல வகையிலும் மாறு பட்டிருந்தாள் லக்ஷ்மி. அவள் மாநிற மேனியினாள். திருத்தமாக அமைந்திருந்த அவள் திருமுக மண்டலம், இதுகாலை சோகத்தினால் வாட்டமுற்றிருந்ததாயினும், அழகும் அமைதியுமே அதன் இயற்கை அணிகள் என்பது நன்கு விளங்கிற்று. அவள் கண்ணில் அளவிடப்படாத தூய உண்மைக் காதல் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. எல்லோரையும் மகிழ்விக்கும் இனிய குணமும் அளவற்ற அன்பும் அவள் தோற்றத்திலே திகழ்ந்தன. சோகத்திலும் மலர்ந்திருந்தன அவளது செவ்விதழ்கள். அவள் தரித்திருந்தது, விலையுயர்ந்த சிவப்பு வர்ணப் பட்டுப் புடைவை. பொன் வைர நகைகளும் அவள் அணிந்திருந்தாள்.


- 'சாரதையின் தந்திரம்'
நெடுங்கதையிலிருந்து...

'நகைச்சுவை சிறப்பிதழ்ல இப்படி சோகமான பகுதியைப் போட்டிருக்கீங்களே? கல்கி கதையில நகைச்சுவைக்கா பஞ்சம்?' என்று கேட்கத் தோன்றுகிறதா? தீகட்டத் தீகட்ட சிரிப்புக்கு நடுவுல ஒரு சோக ரஸம் இருக்கட்டுமே!'

- எப்படி எல்லாம் சமாளிக்கறாங்கப்பா!

"அசடே நீ இன்னும் பச்சைக் குழந்தையா?"

வண்ணத் தூரிகை



பீகார் பக்கம்



பீகாரைச் சேர்ந்த ஹஸ்க் பவர் சிஸ்டம் என்ற நிறுவனம் வைக்கோலிலிருந்து மின்சாரம் தயாரித்து, கிராமங்களுக்கு வழங்குகிறது. அண்மையில் அந்த நிறுவனத்துக்கு விருது கிடைத்துள்ளது. உலகத்தின் பல்வேறு நாடுகளிலுமிருந்து ஆயிரத்துச் சொச்சம் நிறுவனங்கள் இந்த விருதுக்குப் போட்டி இருட்டன. ஆனால், பீகாருக்கு அடிச்சது லக்!

(மாட்டுத் தீவன ஊழல் நடந்த ஊர்ல, இன்னிக்கு வைக்கோலிலிருந்து மின்சாரம் உற்பத்தி செஞ்சு அவார்டு வாங்கறாங்க! வாவ்! கிரேட்!)

வீர்குர் சிங் பல்கலைக் கழகம், பீகாரின் அரா என்ற ஊரில் உள்ளது. அண்மையில் அந்தப் பல்கலைக்கழகத் துணை வேந்தரை கோர்ட் ஒரு நாள் சிறை தண்டனை அளித்து கம்பி எண்ண வைத்தது. பல்கலைக்கழகத்திலிருந்து ரிடையர் ஆனவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை செட்டில் செய்யும்படி பலமுறை கோர்ட் அறிவுறுத்தியும், பல்கலைக்கழகம் செட்டில் செய்யாததால், இந்தத் தண்டனை!

(லட்சுமி, சரஸ்வதிக்குள்ள சிக்கல் ஏற்படுத்திடுவாங்க போல...)



காங்கிரஸை உதாசினப்படுத்தியதன் பலனாக, கடந்த முறை இருபத்துநான்கு எம்.பி.க்களுடன் செல்வாக்காக இருந்த லாலு, இப்போது வெறும் நான்கு எம்.பி.க்களுடன், லோக் சபாவில் பின்புற வரிசைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். முன் வரிசையில் தனக்கு ஸீட் ஒதுக்கும்படி சபாநாயகரைக் கேட்டுப் பார்த்தும், பலனில்லாது போகவே, ''பின் வரிசையாக இருந்தால் என்ன? பரவாயில்லை!'' என்று சமாதானம் சொல்லிக்கொண்டு, பின் வரிசைக்குப் போய்விட்டார்.

(ரயில்ல கடைசி பெட்டியில் ஏறினாலும், ஊர் போய்ச் சேரலாம்னு விளக்கம் சொல்வீங்களா லாலுஜி?)

''கிச்சனுக்குள்ள எதுக்குடி உன் ஃபோட்டோவை மாட்டி வச்சிருக்கற?''
''அதைப் பார்த்தாதான் என் புருஷனுக்கு சீக்கிரம் சமையல் பண்ணணுமேங்கற பயம் வரும். அதுக்குத்தான்!''

லாலு பின்னணி!



பிஜய் மாடோவுக்கு இரட்டை ரோல். பகலில் காய்கறி வியாபாரி. இரவில் வழிப்பறிக்காரன். இரவு இரண்டாம் காட்சி சினிமா பார்த்துவிட்டுத் தனியாக வருகிறவர்களை, கத்தி முனையில் மிரட்டி வழிப்பறி செய்வது இவனது ஸ்டைல். தன் வேலை முடிந்ததும், தப்பிச் செல்ல இவன் பயன்படுத்துவது சைக்கிள்தான்.

(சே! திருடனாக இருந்தாலும் என்னே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு!)

பீகாரில் காங்கிரஸ் கட்சி தெம்பாகவே இருக்கிறது. அண்மையில் பீகார் காங். தலைவரான அனில்குமார் ஷர்மா, ''இனி பீகாரில் காங்கிரஸ் எல்லா தேர்தல்களிலும் தனித்தே போட்டியிடும். நாங்கள் லாலுக்களையும் பாஸ்வான்களையும் நம்பி கட்சி நடத்தவில்லை!'' என்று அதிரடியாக அறிக்கை விட, பெரும் பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. விரைவில் ராகுல், பீகாரில் ஒரு மெகா சுற்றுப் பயணம் மேற்கொள்வார் என்றும் சொல்கிறார்கள்.

(எலெக்ஷனில் ஜெயிப்பது எப்படின்னு எங்க ஊருக்கு வந்து டிரெயினிங் எடுத்துக்கங்க லாலு!)


பாராளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போனவர்கள், தாங்கள் ஏன் தோற்றோம் என்று சுயவிமர்சனம் செய்து கொள்வதற்குப் பதிலாக, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின் மீது சந்தேகம் கிளப்புவதும், பழிபோடுவதும் ஒரு ஸ்டைலாகிவிட்டது. அந்த லிஸ்டில் லேட்டஸ்ட்டாகச் சேர்ந்திருப்பவர் ராம் விலாஸ் பாஸ்வான்.

(எங்க ஊரு கம்யூனிஸ்ட் ஸ்டைலில், கூட்டணிக் கட்சியைக் குறை சொல்லி அறிக்கை விடுங்க பாஸ்(வான்)!)

- பரத் ராம்

''என் மனைவி 'தெய்வம்' மாதிரி!'' ''எப்படிச் சொல்ற?''
''பேசாமல் இருந்தே பழி வாங்குவா!'' - ராஜபாளையம் எஸ்.சக்தி

ஒரு பேண்டில் பத்து பேர்!



''எங்க அப்பா அம்மாவுக்கு நாங்க பத்து குழந்தைகள். ஒரு பேண்ட் எடுத்தா எங்க பெரியண்ணன்ல இருந்து கடைசி தம்பி வரைக்கும் அந்த பேண்ட்டைப் போட்டு, கிழியற வரைக்கும் விடமாட்டோம். அந்த அளவுக்கு ஒற்றுமையா இருந்தோம். இப்ப காலம் மாறிடுச்சு. இன்னும் சில வருஷங்களுக்கு அப்புறம், அப்பாவின் தம்பியை சித்தப்பா என்றும், அம்மாவின் தம்பியை மாமா என்றும் அந்தக் கால தமிழ் மக்கள் அழைத்தார்கள்ன்னு ஸ்கூல் பாடப் புத்தகத்தில் வருங்கால சந்ததியினர் படிச்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை'' என்று சீரியஸாகப் பேச ஆரம்பித்தார் திண்டுக்கல் லியோனி.

''ஸார்... ஸார்... இது நகைச்சுவை ஸ்பெஷல். வழக்கமான உங்க குசும்புகளை எடுத்து விடுங்க'' என்றோம்.

''நான் திண்டுக்கல் ஸ்கூல்ல படிச்சப்ப எல்லா வாத்தியார்கள் மாதிரியும், மிமிக்ரி செய்வேன். எங்க சமூக அறிவியல் வாத்தியார் அடிக்கடி மூக்குப் பொடி போடுவாரு. அதனால மூக்கை உறிஞ்சி வித்தியாசமான குரல்ல பேசுவாரு. ஒருநாள் க்ளாஸ் ரூம்ல வாத்தியார் இல்லாதப்ப அவரை மாதிரியே, மூக்கை உறிஞ்சி, பொடி போடற மாதிரி சைகை பண்ணி, நடிச்சுக் காட்டினேன். ரொம்ப நேரமா என்னோட நடிப்பைக் கைதட்டி ரசிச்சுக்கிட்டிருந்த பசங்க திடீர்னு சைலன்ட் ஆகிட்டாங்க. பின்னாடியிருந்து 'வெரிகுட்'னு ஒரு குரல். திரும்பிப் பார்த்தா அதே சமூக அறிவியல் வாத்தியார்! பக்கத்துல வந்து, 'ரொம்ப நல்லாயிருக்கு. இன்னும் முயற்சி பண்ணினா பெரிய ஆளா வருவே'ன்னு வாழ்த்திட்டுப் போனார். அடிக்கப் போறார்னு நினைச்சேன். அவரே வாழ்த்ினதும் உற்சாகமாயிடுச்சு. இன்னைக்கு பலர் மாதிரி மிமிக்ரி பண்றதுக்கு இந்தச் சம்பவம்தான்

"சாம்பாரை தங்கம் ஆக்குவேன் நான்!"
"எப்படி?"
"24 காரட்டைப் போட்டுத்தான்..."

உந்துசக்தி'' என்றவர் பள்ளியிலிருந்து கல்லூரிக்குத் தாவினார்.

''திண்டுக்கல் GDN காலேஜ்ல படிச்சப்ப ஒருநாள் புதுசா ஜாயின் பண்ணியிருந்த இங்கிலீஷ் லெக்சரர் எங்களுக்கு க்ளாஸ் எடுக்க வந்தார். வந்த முதல் நாளே 'கேன் யு டெல் இன்ட்ராகேடிவ் சென்டன்ஸ் (கேள்வி வாக்கியம்)?' என்று கேள்வி கேட்டார். வில்லங்கம் பிடிச்ச எங்க க்ளாஸ் மேட்ல ஒருத்தன், 'ஆர் யு மேன்?' என்றான். 'என்னடா முதல் கேள்வியே இப்படியிருக்கே... இது சரிப்படாது' என்று நினைத்தவர், கடைசி பெஞ்ச் மாணவர்களிடம் உதாரணம் கேட்டார். அவர்களில்



ஒருவன் எழுந்து, 'கான்'ட் யு மச் ப்ராப்பர்லி?' என்றான்.

பக்கத்திலிருப்பவன் உடனே, 'கேன் யு கெட் அவுட் ஃப்ரம் திஸ் க்ளாஸ்?' என்றான்.

'இவனுகளைத் திட்டவும் முடியாது. திட்டினா இதுவும் இன்ட்ராகேடிவ் சென்டன்ஸ்தான்னு சொல்லுவாங்க' என்று நொந்தபடி வகுப்பை விட்டு வெளியேறினார். இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட சீனியர் லெக்சரர்ஸ், புதிதாக வந்த வாத்தியார்களிடம் இப்படி நடந்துகொள்ளக்கூடாது. இது தேவையில்லாத தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்று அட்வைஸ் செய்தார்கள். அதன் பிறகுதான் எங்களுக்குப் புத்தி வந்தது'' என்றவர்,



''என் சொந்தத்திலும் இந்த மாதிரி இருக்காங்க'' என்று ஆரம்பித்தார்.

''என்னுடைய சித்தப்பா ஆரோக்கிய சாமி கடுமையான கறுப்பா இருப்பார். தலைமுடி மட்டும் வெள்ளை. செல்லையான்ற மாமாவுக்குத் தலைவழுக்கையா இருக்கும். சித்தப்பா, மாமா வழுக்கையைக் கிண்டல் பண்ணிக்கிட்டே இருப்பாரு. பொறுத்துப் பார்த்த மாமா, சித்தப்பாகிட்ட உங்களை நேர்ல பார்க்கறதுக்குத்தான் கறுப்பா பயமுறுத்தற மாதிரி இருக்கீங்க. ஆனா ஃபோட்டோ நெகடிவ்ல பார்த்தா வெள்ளை வெளேர்ன்னு அழகா இருப்பீங்கன்னார். (நெகடிவ்வில் கருப்பாக இருப்பதெல்லாம் வெள்ளையாகத் தெரியும்.) இந்த டயலாக்கைக் கேட்ட சித்தப்பா, அதுக்கப்புறம் மாமாவைக் கிண்டல் அடிக்க வாயே திறக்கறதில்லை. சொந்தக்காரங்க, வெளியாட்கன்னு பேதமே பார்க்க மாட்டோம். புதுசா வர்றவங்களையும் சொந்தமாவே நினைச்சு கிண்டிக் கிளறுவோம்'' என்றார்.

''போதும் சார். லொள்ளு தாங்கலை. உருப்படியா நகைச்சுவை ஸ்பெஷல் செய்யணும். விட்டுடுங்க!'' என்று உருவிக்கொண்டு வந்துவிட்டோம்.

- ராகவ்குமார்

''ஸார், நான் 'யூரின் பாஸ்' பண்ணிட்டு வர்றேன்...''

''அதையாவது 'பாஸ்' பண்ணித் தொலைடா...''

- ச. ராஜசேகர், செய்யாறு.



வாங்கய்யா... பழகுவோமா..?



இந்த ஆண்டு சுற்றுலா வந்த நானும் எங்கள் கல்லூரி மாணவ மாணவியரும் அந்த மிருகக்காட்சி சாலையில் நுழைந்தோம்.

வகுப்பில் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாத மாணவர்கள் பலர் ஓடி ஓடி, உடன் வந்த பேராசிரியர்களிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர்.

''அய்யா, நீர் யானையா?'' என்று சற்று குண்டான ஆசிரியரிடம் ஒரு மாணவன் கேள்வி கேட்க, அவர் கோபத்தோடு பார்க்க, ''அது நீர்யானையான்னு கேட்டேன்,'' என்று தூரத்தில் குளித்துக் கொண்டிருந்த யானையைக் காட்டித் தப்பித்தான்.

''இங்கே இருக்கும் மிருகங்களை, பறவைகளைப் பார்த்ததோடு வராமல், அவற்றின் குணங்களையும், அம்மிருகங்களிடத்திலிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்களையும் தவறாமல் கற்க வேண்டும்'' என்று நான் சொன்னபோது,

''போச்சுடா... இங்க வந்தும் பாடமா?'' கிண்டலாய்க் கேட்டான் ஒரு மாணவன்.

''ஒரு காட்டிலாகா அதிகாரி வேலையில் இருந்து ஓய்வு பெற்றபோது, பலரும் அவரைப் பார்த்து, 'இத்தனை நாட்களாகக் காட்டில் மிருகங்களோடு இருந்தீங்க. இனிமே பயமே வேண்டாம். நாட்டில் மனிதர்களோடு இருக்கப் போறீங்க' என்று சொன்னார்களாம்.

அதற்கு அவர், 'இல்லை இல்லை நான் இனிமேல்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புலி இப்படித்தான் இருக்கும், நாம் கவனமாக இருக்க வேண்டும். குரங்கு சாதுவானது; இதனால் நமக்கு ஆபத்து இல்லை என அறியலாம். ஆனால் நாட்டில் மனிதர்களை உருவங்களை வைத்து அளக்கவோ, உணரவோ முடியாது. மனுஷன் மாதிரி இருப்பான்; குரங்கு வேலை செய்வான். மனுஷன் மாதிரி இருப்பான்; நரி வேலை செய்வான்' என்றாராம். அதனால் குணம் மாறாத மிருகங்ககிட்டே இருந்தே நாம் எதையும் பழகலாம்... தப்பில்லை'' என்று முடித்தேன்.

''அது மட்டுமில்லைடா, டியூஷன் ஃபீஸ், பயிற்சிக் கட்டணம் எல்லாம் மிச்சம் பாரு'' என்று ஒரு மாணவன் சொல்ல, ''அப்ப நீ போய் அந்த யானைகிட்டே 'மேத்ஸ்' படி'' என்றான் மற்றவன்.

அப்போது அங்கிருந்த குரங்குக் கூண்டைச் சுற்றி மாணவர்கள், பல்வேறு முகபாவங்களைக் காட்டிக் குரங்குச் சேட்டை செய்ய, அந்தக் கூண்டில் இருந்த குரங்கோ படித்த அறிவாளியைப் போல அமைதியாக இருந்தது.

''சே நமக்கு நாலு கால் இருந்தா... எந்த வண்டியும், ஏணியும் தேவையில்லை. ஒரே தாண்டு எல்லா இடத்துக்கும் போயிடலாம்'' என்று ஒரு மாணவன் ஏக்கத்தோடு சொன்னான்.



சிரிப்போம் ஜெயிப்போம்!

''அப்படி நினைக்காதே, மனிதனுக்கு இரண்டு கால்கள்தான். விலங்குகளுக்கு நான்கு கால்கள். வண்டினத்துக்கு ஆறு, சிலந்திக்கு எட்டு, ரயில் வண்டிப்பூச்சி (மரவட்டை)க்கு எத்தனையோ எண்ண முடியாத கால்கள், அதிகக் கால்களை உடைய உயிரினம் உலகை ஆள்வதில்லை. அறிவால் வளர்ந்த மனிதனே உலகை ஆள்கிறான்'' என நான் சொன்னேன்.

அங்கிருந்த அழகான ஆலமரத்தடியில் அனைவரும் உட்கார்ந்தோம். கடலை, முறுக்கு, பாப்கார்ன் என அந்த இடமே தூள் பறந்தது.

''மாணவ நண்பர்களே! எல்லோரும் வந்தாச்சா?'' என நான் கேட்க, 'ராகுல் காந்தி வரலை அய்யா'' என்று ஒரு மாணவன் கத்தினான்.

''சரி, கேளுங்கள், ஆதி மனிதன் வீடு கட்டப் பழக முதலில் கூடுகட்டும் குருவியிடம்தான் கற்றான். விலங்கை வேட்டையாடி, அதன் தோலை ஆடையாக அணிந்தவன் 'தையல்குருவி' என்ற குருவியைப் பார்த்துத்தான் கற்றுக் கொண்டானாம். தையல்குருவிகள் இரண்டு இலைகளைச் சேர்க்க, அல்லது கோக்க, சில குச்சிகளைப் பயன்படுத்துவதைப் பார்த்துத் தான் ஆடையை வடிவமைத்ததாக மானுடவியல் அறிஞர்கள் சொல்கிறார்கள்.''




கு.ஞானசம்பந்தன்

''அப்படிப் பார்த்தால் மிருகங்கள் பறவைகள் இவற்றுக்கு மனிதனுக்குத் தெரிந்த எல்லாம் தெரியுமா?'' என்று ஒரு மாணவர் வேகமாகக் கேட்டார்.

''நிச்சயம் தெரியாது. பொறாமை, சூழ்ச்சி, துரோகம் இவையெல்லாம் அவற்றுக்குத் தெரியாதவை. தெரிந்திருந்தாலும் அவை மனிதர்கள் கற்றுத் தந்ததாகத்தான் இருக்கும். ஒரு சம்பவம் சொல்கிறேன் கேளுங்கள்...

செண்பகராமன் என்பவரைப் பற்றி



பொறாமை, சூழ்ச்சி, வஞ்சகம் இவையெல்லாம் மிருகங்களுக்குத் தெரியாது

நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? தமிழகத்திலே திருவிதாங்கோட்டில் பிறந்து ஜெர்மனியில் வாழ்ந்து, ஹிட்லரை நேரில் சந்தித்துப் பேசியவர். இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் 'எம்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பலில் உதவி கேப்டனாக வந்தவர்தான் ஜெய்ஹிந்த் செண்பகராமன்.

அவரிடத்தில் விலையுயர்ந்த வேட்டை நாய் ஒன்று இருந்தது. அது அவருக்கு மெய்க்காப்பாளன் போல எப்போதும் உடன் இருக்கும். ஒருநாள், ஒரு நிருபர் அவரைப் பேட்டி எடுத்தபோது கிண்டலாக, 'இந்த நாய் உங்களின் மெய்க்காப்பாளனா?' என்று கேட்டாராம்.

'ஆம் யாராவது என்னைக் கொல்ல நினைத்துத் துப்பாக்கியை எடுத்தால், அடுத்த வினாடி அவர்களின் குரல் வளையை இது கவ்விவிடும்' என்றார் செண்பகராமன்.

உடனே அந்த நிருபர் சட்டென்று ஒரு கைத்துப்பாக்கியை எடுத்து அவர் முன் நீட்ட, அந்த நாயோ பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டு படுத்திருந்தது. நிருபர் சிரித்தபடி, 'இதுதான் உங்களைப் பாதுகாக்கிற நாயோட லட்சணமா?' என்றார்.

செண்பகராமன், 'நண்பரே நீங்கள் என்னை நோக்கி நீட்டிய துப்பாக்கியில் குண்டு இல்லை என்பது உண்மைதானே?' எனக்கேட்டார்.

'ஆம் உண்மைதான்' என்று சங்கடத்துடன் நிருபர் சொல்ல, 'அதனால்தான் நீர் பிழைத்தீர். இந்த நாயின் மோப்பத்திறன் வியக்கத்தக்கது. துப்பாக்கித் தோட்டாவின் வாசனையை இது நன்கு அறியும்' என்று செண்பகராமன் சொல்லவும், நிருபர் வாயடைத்து நின்றாராம். அதனால்தான் சொல்கிறேன். செடி கொடிகள், மரங்கள், மலர்கள், விலங்குகள், பறவைகளை நம் முன்னோர்களின் வழித்தோன்றல்களாகக் கருதி நட்பு கொள்ளவும், வெற்றி கொள்ளவும் வழிசெய்து கொள்ளுங்கள்'' என்றேன்.

உடனே ஒரு மாணவன், ''வாங்கையா! வாங்க, வந்து பழகுங்கையா! நம்ம வீட்ல ரெண்டு கிளியிருக்கு... வாங்கையா'' என்று 'சிவாஜி' பட வசனம் போல மிமிக்ரியில் பேச, எல்லோரும் சிரித்தபடி அங்கிருந்த மிருகங்களைப் பார்க்கக் கிளம்பினார்கள். இப்போது அவர்கள் பார்வையில் வெற்றியின் வெளிச்சம் இருந்தது.

(வெற்றி தொடரும்)



உலகை பாதித்த தமிழ்ப் படம்!

''அமெரிக்காவில் இருக்கும்போது ஒரு சில ஹிந்திப் படங்கள் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த முதல் தமிழ்ப் படம், மிக சிறப்பான ஒரு படம் இதுதான்'' என்றார் சென்னை அமெரிக்க தூதரகத்தின் தலைமை அதிகாரி ஆண்ட்ரு டி.சிம்கின். அவர் பாராட்டிய படம் 'அச்சமுண்டு... அச்சமுண்டு!' அமெரிக்காவில் வசிக்கும் ஒரு தமிழ்க் குடும்பத்தை மையமாக வைத்து அங்கேயே வசிக்கும் ஒரு தமிழரால் எடுக்கப்பட்ட படம் இது.

ஆண்ட்ருவுக்குத் தமிழ் தெரியாது. எனவே, ஆங்கில சப்-டைட்டிலுடன் 'அச்சமுண்டு... அச்சமுண்டு!' படம் அவருக்குப் போட்டுக் காட்டப்பட்டது.

சிறுவர், சிறுமியருக்கு எதிரான பாலியல் வன்முறை உலகமெங்கும் நிகழ்கிறது. இத்தகைய கொடூரச் செயல்கள் செய்பவர்களைத் தண்டிக்க அமெரிக்காவில் கடுமையான சட்டங்கள் உள்ளன. அங்கே இத்தகைய குற்றம் செய்கிறவர்களைப் பற்றி மீடியா மூலமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இது பற்றிய விழிப்புணர்ச்சி மக்கள் மத்தியில் வெகு குறைவாகவே இருப்பது கவலைக்குரிய விஷயம்.

''உனக்கெல்லாம் அமெரிக்கா வர எவன்டா விசா கொடுத்தது?''

படத்தில் ஒரு காட்சியில் ஆஃபீஸ் வேலையில் சொதப்பும் சகாவை, ''உனக்கெல்லாம் அமெரிக்கா வர எவன்டா விசா கொடுத்தது?'' என்று கேட்பதாக ஒரு வசனம் வரும். இந்த வசனத்தை தாம் மிகவும் ரசித்ததாக, சென்னையில் அமெரிக்கா செல்ல வேண்டி விண்ணப்பிப்பவர்களுக்கு விசா அளிக்கும் பொறுப்பில் இருக்கும் அவர் சொன்னபோது, அனைவரும் சிரித்துவிட்டனர்.

''படத்தில் செந்தில்குமார் கேரக்டருக்காக மீசையை எடுக்க வேண்டும் என்று இயக்குநர் சொன்னபோது, 'முடியவே முடியாது' என்று மறுத்தேன். அவர் என்னை அமெரிக்காவில் ஏழெட்டு அலுவலகங்களுக்கு அழைத்துச் சென்றார். எல்லோருக்கும் மீசை மிஸ்ஸிங். அப்புறம்தான் மீசையை எடுத்தேன்'' என்று தாம் 'ஹீரோ மைனஸ் மீசை' ஆன சோகக் கதையைச் சொன்னார் ஹீரோ பிரசன்னா.

– எஸ்.சந்திரமௌலி

''இன்ஸ்பெக்டர் நேத்துலேர்ந்து என் மனைவியைக் காணோம்...''
''உண்மையைச் சொல்லுங்க... நாங்க கண்டுபிடிக்கனுமா... கண்டுபிடிக்கற மாதிரி நடிக்கனுமா..'' - பிரியதர்ஷன்



• 'சிரிப்புத் திருவிழா'... சிதறிய மத்தாப்பூ



• சிவகுருநாதன்

''வளரும் பருவத்தில் இள உள்ளங்களில் நகைச்சுவை உணர்வுகளை விதைத்துவிட்டால், அவர்களின் எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் உணர்வு வெகுவாகக் குறைந்து போயிடும்!'' என்கிறார் திருச்சி நகைச்சுவை மன்றச் செயலாளர் சிவகுருநாதன்.

பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நகைச்சுவை மன்றத்தைத் துவக்கி வைத்தவர், பேராசிரியர் கு.ஞானசம்பந்தன்.

'சிரிப்புத் திருவிழா' ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை, மாலை நேரம், திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் அருகே ஹோட்டல் செவனா அரங்கில் நடைபெறுகிறது.

இந்த மாதம் நடந்த நிகழ்ச்சிகளில் சிந்திய சிரிப்புகளைக் கூடை நிறைய அள்ளி வந்தோம். அவற்றில் சில...

''ரெண்டாவது பானிபட் போர் ஏன் நடந்திச்சு தெரியுமா?''

பள்ளிச் சிறுமி கேட்கிறாள். சில வினாடிகள் அமைதி.

''முதல் பானிபட் போர் சரியா நடக்கல. அதான் ரெண்டாவது பானிபட் போர் நடந்திச்சு!''னு டக்குனு டபாய்த்தாள்.

சரண்குமார்: சாலிகிரா

''அவர் போலி டாக்டர்னு எப்படி சொல்றீங்க...?''

''எக்ஸ்ரே எடுக்க காசில்லைன்னு சொன்னேன். ஜெராக்ஸ் எடுத்துட்டு வாங்க போதும்னு சொல்றாரே...''

- பிரியதர்ஷன்

மத்துல ஒரு தெருவுல ரெண்டு பிச்சைக்காரங்க பேசிக்கறாங்க. 'அந்த இசையமைப்பாளர் வீட்ல பிச்சை கேட்டது ரொம்ப தப்பாப் போச்சுடா?' 'ஏன்டா?' 'அவரு வீட்ல பழைய இட்லிய ரீமிக்ஸ் பண்ணி உப்புமாவா கிண்டிப் போட்டுட்டாங்க!'

சுலோசனா சந்தானம்: எலச்சிட்டுக் கம்பெனிக்காரர் புதுசா ஒரு ஊர்ல ஜனங்கள்கிட்ட தர்றதுக்காக, நோட்டீஸுக்கு ஆர்டர் தந்தார். அந்த நோட்டீஸ் மேல் பகுதியில பெரிய எழுத்துல 'உங்கள் சந்தோஷமே எங்கள்



கூடை நிறைய சிரிப்பு!



திருப்தி!'னு இருக்கணும்னு எழுதித் தந்துட்டு வந்தார். நோட்டீஸ் அடிச்சாச்சு. இவரும் நோட்டீஸ் பண்டலை எடுத்துக்கிட்டு அந்த ஊருக்குப் போனார். பொதுமக்கள்கிட்ட நோட்டீஸ் தர்றதுக்கு முன்னாடி, அதை ஒரு தடவை படிச்சுப் பார்த்தவர் அதிர்ச்சி ஆகிட்டார். நோட்டீஸ் தராமலே பஸ் ஏறி வந்துட்டாரு. நோட்டீஸ் தலைப்புல இருந்த வாசகம் இதுதான்: 'எங்கள் சந்தோஷமே உங்கள் திருப்தி!'

"ஒரு தடவை எட்டு வயதுப் பையன் மைக் பிடிச்சு 'சனி பெயர்ச்சிக்கும் குரு பெயர்ச்சிக்கும் என்ன வித்தியாசம்?'னு கேட்டான். கூட்டம் திகைச்சு உட்கார்ந்திருந்தது. அப்புறம் அவனே பதில் சொன்னான். 'மனைவி வீட்டை விட்டுப் போனா சனிப்பெயர்ச்சி. அப்படி போன மனைவி தன்னோட தங்கச்சியோட திரும்பி வந்தா குரு பெயர்ச்சி!'னு. எல்லாரும் கைதட்டி சிரிச்சாங்க. நான் ஷாக் ஆகிட்டேன். நம்ம மன்றத்துல இதுபோன்ற காமெடியை அனுமதிக்கிறது இல்ல. அப்புறம் விசாரிச்சேன். அது அந்தப் பையன் சொன்ன ஜோக் இல்ல. அவங்க அப்பா சொல்லி, பையன் வந்து மைக்ல சொல்லியிருக்கான். தனியா அந்தப் பையனோட அப்பாவை அழைச்சுப் போயி கண்டிச்சோம்" என மெஸேஜோடு முடித்தார் மன்றச் செயலாளர் சிவகுருநாதன்.

நகைச்சுவை ஸ்பெஷல்-னாலும் மெஸேஜ் சொல்ல இப்படி அடம் பிடிக்கறாங்களே...

- இந்திராமணாளன்

"டாக்டர், 'வர, வர, கண்பார்வை மங்கலாத் தெரியுது!"
"போய், போய்ப் பாருங்களேன்!"

- மதுரை முருகேசன்



பாதி பணம்

ரமேஷும், சுரேஷும் தெருவில் நடந்து கொண்டிருக்கும்போது, கீழே கிடந்த ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு பையில் போட்டுக் கொண்டான் சுரேஷ். இதைப் பார்த்த ரமேஷ், "இப்பொழுதுதானே வழியில் உள்ள விநாயகரிடம் கீழே ஏதாவது பணம் கிடந்தால் அதில் பாதியை எடுத்துக்கொண்டு மீதியை சாமிக்குப் போடுகிறேன் என்று வேண்டிக் கொண்டாய். இப்போ எல்லாப் பணத்தையும் நீயே எடுத்துக் கொண்டாயே'' என்று கேட்டான். சுரேஷ் சிரித்துக் கொண்டே, ''நான் கொடுக்க மாட்டேன் என்று சாமிக்குத் தெரிந்துதான் அவரே தனக்கு வேண்டிய பாதிப் பணத்தை எடுத்துக் கொண்டு மீதியைப் போட்டிருக்கிறார்'' என்றான்.

- எஸ்.முரளி,
ஸ்ரீரங்கம்

விளையாட்டு மைதானத்தில் பெண்கள் பேண்ட்-சர்ட் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்த ஒரு கிழவர், ''என்ன இது பெண்கள் பந்தயத்தில் ஆண்கள் விளையாடுகின்றனர்'' என்று பக்கத்திலிருந்தவரிடம் கேட்க, ''அது பெண்கள்தான். விளையாட்டுக்குத் தகுந்த உடை அது. என்னுடைய பெண்ணும் கூட விளையாடுகிறாள்'' என்றார் பக்கத்திலிருந்தவர். உடனே கிழவர், ''மன்னிக்கணும். அவங்க அப்பா என்று தெரியாமல் சொல்லிவிட்டேன்'' என்றார். அதற்கு அவர், ''நான் அவளோட அப்பா இல்லை... அம்மா'' என்றார்.

- மலைஅரசன்,
அருகந்தம்பூண்டி



அப்பா இல்லை அம்மா

தமாஷ் ஓட்டம்

கோழியைத் திருடிக் கொண்டு ஓடும்போது கையும் களவுமாகப் பிடிபட்ட ஆசாமியை நீதிபதி, ''ஏன் அப்படிச் செய்தாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''சும்மா தமாஷுக்காகத் தூக்கிக் கொண்டு ஓடினேன்'' என்றான்.

''எவ்வளவு தூரம் ஓடினாய்?''

''அடுத்த ஊர்



ரீல் சினிமா

குடும்பத்தோடு படத்துக்குப் போனோம். கதைப்படி காதலியைக் கைப்பிடிக்க முடியாத சோகத்தில் ஹீரோ தற்கொலை செய்து கொள்கிறான். நான் எனது மகனிடம், ''டேய்... படத்துல வர்றதெல்லாம் சும்மா கற்பனை. இதையெல்லாம் நம்பாதே'' என்றேன்; காதல், கீதல் என்று அவன் தடம் மாறிவிடக் கூடாது என்பதற்காக. அதற்கு அவன், ''தெரியும்ப்பா... அதான் படம் போடறதுக்கு முன்னாலேயே சென்சார் சர்ட்டிஃபிகேட்ல '14 ரீல்'னு போடறானே? ரீலை ரியல்னு நம்ப நான் என்ன லூஸா?'' என்றான்.

- சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்

வரைக்கும்.''

''தமாஷை அவ்வளவு தூரம் தூக்கிக் கொண்டு ஓடக்கூடாது. அதற்காக ஆறு மாதம் சிறைத்தண்டனை விதிக்கிறேன்'' என்றார் நீதிபதி.

- மலை அரசன், அருகந்தம்பூண்டி





அதுபோல வேணும்

ஒரு கிராமவாசி சென்னையில் ஒரு ஹோட்டலில் நுழைந்து இடம்பார்த்து ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அவர் எதிரே அமர்ந்திருந்தவர் பில்லுக்காக நூறு ரூபாய் சர்வரிடம் கொடுத்திருந்தார். பில் பணம் போக மீதிப் பணத்தை ஒரு தட்டில் வைத்து அவரின் முன் சர்வர் வைத்தார். பின் கிராமவாசியைப் பார்த்து, ''என்ன வேணும்?'' என்று கேட்க, அதற்கு அந்த கிராமவாசி, ''எனக்கும் ஒரு தட்டு நிறைய 'அது' மாதிரி வைச்சுக் கொண்டு வா'' என்றார்.

- மலைஅரசன், அருகந்தம்பூண்டி

''ஸா.. பா... ஸா... நீ பாடு!'' - கனிந்த முகத்துடன், அந்தக் கைக்குழந்தையைப் பார்த்துச் சொன்னார் டி.கே.பட்டம்மாள். குழந்தையும் வாயைக் கூட்டி 'ஆ' என்று சுருதி சேர்ந்து ஒலி எழுப்பியது. விந்தையோ, தற்செயலோ... ஆறேழு மாதத்துக் குழந்தை அவர் கற்றுக் கொடுத்ததைப் பாடுவதுபோலவே தொனித்தது. அப்போது டி.கே.பி.யின் முகத்தில் தோன்றிய பரவசப் புன்னகை அவரை எண்பத்தாறு வயதுக் குழந்தையாக்கியது!

அன்புச் சுடர் ஒன்று எப்போதும் டி.கே.பியினுள் ஒளிர்ந்து கொண்டேயிருந்தது. அது பிரகாசமாக வெளிப்பட்ட பல அழகான தருணங்கள் எனக்கு அனுபவிக்கக் கிடைத்தன:

டெல்லியில் பத்மவிருது பெற்ற பிறகு சச்சின் டெண்டுல்கர் அவரைச் சந்தித்துத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். ''அப்படியா! செஞ்சுரி மேல் செஞ்சுரி அடிக்கணும்னு அவரை வாழ்த்தினேன்மா!'' என்று அந்தச் சந்திப்பை நினைவுகூர்ந்தபோதுகூட, இன்னொரு விருதைப் பெற்றதுபோல் பிரகாசித்தது அவருடைய மலர்ந்த முகம்!

ஒருமுறை அவர் வகுப்புக்கு நான் புறப்பட்ட நேரத்தில் இடியுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. பட்டம்மாள் எனக்கு ஃபோன் செய்து ''இன்னிக்கு வராதே!'' என்றார். ''நீ உன் பெற்றோருக்கு முதல் குழந்தை. தலைச்சன் குழந்தை தலையில இடி விழும்னு ஒரு நம்பிக்கை இருக்கு; இன்னிக்கு கிளாஸ் வேண்டாம்'' என்றார். ''இடி விழுந்தாலும் தாங்கிப்பேன்... நான் வரேன்...'' என்றேன். ''ஆனா நான் தாங்க மாட்டேனே!'' என்று சிரித்தபடி வகுப்பை ரத்து செய்துவிட்டார்!

அவர் வகுப்புகள் எப்போதும் கலகலப்பாக இருக்கும். வைஜயந்திமாலா, ''பாலாவைப் போல அபிநயம் பண்ணுங்கோ'' என்று கேட்க, பாலசரஸ்வதி போலவே 'தெருவில் வாரானோ' பாடலுக்கு அபிநயம் செய்து காட்டுவார். நாட்டியத்தில் நல்ல ஞானமும் ருசியும் உண்டு பட்டம்மாளுக்கு.





டி.கே.பி.யின் மென்மையான உள்ளத்தில் வஜ்ரம் பாய்ந்த வைராக்கியம் உண்டு!

என்.விஜய் சிவா

தலைமுறைகளின் கலைஞர்!

ஒருமுறை, நான் பாடிக் கொண்டேயிருந்தபோது, அவர் தனக்குத்தானே புன்னகை செய்து கொண்டதைப் பார்த்து விட்டு, காரணம் கேட்டேன். ''நீ பாடறபோது ஜெயராமன் மாதிரியே முகத்தை வைச்சுக் கறே, அதே மாதிரி தலையைத் தூக்கிப் பாடறே...''* என்று எங்கள் இருவரையும் போலிப்புச் செய்து காட்டி அவர் மகிழ, அன்று வகுப்பில் இருந்த மாணவர்களிடையே சிரிப்பு அலை பரவியது.

தாமல் கிருஷ்ணசாமி அய்யர் பட்டம்மாளின் இந்த மென்மையான உள்ளத்தில் வஜ்ரம் பாய்ந்த வைராக்கியமும் உண்டு. அந்த வைராக்கியத்தை எதனுடனாவது ஒப்பிட வேண்டுமானால் அவருடைய தீர்மானமான ஸ்வர ஸ்தான சுத்தத்துடன்தான் ஒப்பிட முடியும். இரண்டுமே அசைக்க முடியாதவை!

இன்று பெண்களுக்காக நாடாளுமன்றம் வரையில் குரல் ஒலிக்கிறது. 33 சதவிகிதம் இடஒதுக்கீடு என்று மகளிர் அமைப்புகள் போராட, அரசியல்வாதிகள் விவாதிக்கிறார்கள். ஆனால் விவாதம் இருக்கும் அளவுக்கு முன்னேற்றத்தைக் காணோம்.

எழுபத்தைந்து வருடங்களுக்கு முன், கச்சேரி சபா மேடைகளில் ஒரு சதவிகிதத்துக்கும் குறைவான இடமே பெற்றிருந்த பெண்களோ, இன்று ஐம்பது சதவிகிதத்தைக் கடந்து வந்துவிட்டார்கள்! இதற்குக் காரணம் ஆர்ப்பாட்டமோ, ஒதுக்கீடோ இல்லை; டி.கே.பட்டம்மாள் என்ற ஒற்றைப் பெண் மணியின் வைராக்கியம்தான்!

குடும்பப் பெண்கள் பாடக்கூடாது என்கிற சமூகத் தடை ஒருபக்கம், கூட்டுக் குடும்பத்தின் பொறுப்புகள் இன்னொரு



* கட்டுரை ஆசிரியர், டி.கே.ஜெயராமனின் முன்னணி சிஷ்யர். தமது குரு காலமான பிறகு, அவரது மூத்த சகோதரி டி.கே.பட்டம்மாளிடம் பயின்றவர்.

பக்கம். இவற்றுக்கிடையே சாதகம் செய்வது, புது கீர்த்தனைகள் பயில்வது, சிஷ்யர்களுக்குக் கற்றுத் தந்து அவர்களை உருவாக்குவது, நாடு முழுவதும் பயணம் செய்து கச்சேரிகள் செய்து கர்நாடக இசையின் பெருமையை நிலைநாட்டுவது, தேசிய உணர்வு பெருக்கும் பாடல்களைப் பிரபலப்படுத்துவது, பெண்குலத்துக்கும் தேசியத்துக்கும் எழுச்சியூட்டுவது என்று டி.கே.பி. பல தளங்களில் தடம்பதித்துள்ளார். அனைத்துக்கும் காரணம் பொறுமை, அன்பு, உழைப்பு, தியாகம்!

எத்தனையோ பட்டங்கள் வந்து குவிந்தாலும், அவர் பெயரே அவருக்குப் பட்டமாயிற்று - (இசைக்காக) ''பாடு பட்ட அம்மாள், பட்டம்மாள்'' என்று குறிப்பிட்டார் அரியக்குடி.

டி.கே.பி.யின் பரவசப் புன்னகை அவரை 86 வயது குழந்தையாக்கியது!



பொதுவாக ஒரு கலைஞரின் இசையை எல்லா தலைமுறையினரும் அங்கீகரித்து ஏற்கமாட்டார்கள். ஜி.என்.பி., அரியக்குடி போன்றோரது இசை அவர்களது சீனியர்களால் ரொம்ப நாட்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சுப்பராம தீக்ஷிதர், தமது சமகால வித்வானான வைத்தியநாத சிவனின் சங்கீதத்தை ஏற்கவில்லை! அடுத்த தலைமுறையினரால் ஏற்றுக் கொள்ளப்படாத இசைக் கலைஞர்களின் பட்டியலோ ஏராளம்! இதற்கு விதிவிலக்காக விளங்கியவர் டி.கே.பி! அவரது இசையின் சக்தியை உணர ஒரு சிறிய சோதனை செய்தால் போதும். பாரதியார் தினத்தன்று நடக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கான பாடல் போட்டிகளில் பளிச்சென்று பாடக்கூடிய குழந்தைகளைக் கேட்டுப் பாருங்கள், ''இந்தப் பாடலை யாரிடம் கற்றாய்?'' என்று. ''டி.கே.பி. ரெகார்டிங்'' என்றுதான் பதில் வரும்! இந்தப் பதிலுக்கு வயது எழுபது!

கற்றுக் கொடுப்பதில் டி.கே.பி.க்கு நிகர் கிடையாது. அதென்னவோ அவரது ஒலிப்பதிவுகளுக்குக் கூட அவ்வளவு வலிமை. இசை மாணவர்களுக்கு ஒரு ஆலாபனை கற்றுக்கொடுத்துவிட்டு, அரியக்குடி, டி.கே. ஜெயராமன், செம்மங்குடி போன்றோர் பாடிய அதே ஆலாபனை ஒலிப்பதிவைக் கேட்கச் சொல்வதுண்டு. அப்படிக் கேட்ட பிறகு அவர்கள் அடையும் முன்னேற்றம் எழுபது சதவிகிதம். டி.கே.பி.யின் ஒலிப்பதிவைக் கேட்கச் செய்தாலோ, அதே மாணவர் 90 சதவிகித முன்னேற்றம் காண்பது காரண்டி! அனுபவம் இல்லாத இளம் பாடகர்களின் அறிவை மட்டுமின்றி அடிமனத்தையும் சென்று தொட்டுத் தங்கிவிடும் ஆற்றல் டி.கே.பி.யிடம் மிக அதிகம்.

இசை ஆசிரியர்கள் வேண்டுமானால் மேற்படி பரிசோதனையைச் செய்து

உறுதிப் படுத்திக்கொள்ளட்டும்; ஆனால் செம்மங்குடி முப்பது வருடங்களுக்கு முன்பே சான்றிதழ் கொடுத்து விட்டார்! வானொலியில் பட்டம்மாள் 'மாயூரநாதம்' என்ற தீக்ஷிதர் கீர்த்தனையைக் கற்றுத் தரும் (இசை வகுப்பு) நிகழ்ச்சி. அதைக் கேட்டுவிட்டு உடனே ஃபோன் செய்து டி.கே.பி.யைப் பாராட்டினார் செம்மங்குடி. அதன் பிறகு தாம் பேசிய மேடைகளில் எல்லாம் இதைச் சொன்னதுடன், தம்மிடம் வந்த மாணவிகள் பலரையும், ''தயவு செய்து டி.கே.பட்டம்மாளிடம் போய்ப் பயிலுங்கள்'' என்று அனுப்பியும் வைத்தார்!



"செஞ்சுரி மேல் செஞ்சுரி அடிக்கணும்!"

ஆசிரிய ஸ்தானத்தை கம்பீரமாக வகித்த கான சரஸ்வதி, தமது இறுதிக் காலம் வரை மாணவ மனோநிலையில் இருந்தார். ஹே ராம் திரைப் படத்துக்காக 'வைஷ்ணவ ஜனதோ' பாடல் ஒலிப்பதிவு பிரஸாத் ஸ்டுடியோவில் நடந்து கொண்டிருந்தது. தமக்குத் திருப்தி ஏற்படும் வரை எண்ணற்ற முறைகள் அதைத் திரும்பப் பாடினார் டி.கே.பி. ஒருவழியாக ஒலிப்பதிவு முடிந்து இறுதிப் பதிவை ஒலிபரப்பினார்கள். டி.கே.பி. வாயே திறக்கவில்லை! இசையமைப்பாளர் எல்.சுப்ரமண்யமும், கமல்ஹாசனும் ''சரியாக இருக்கிறதா?'' என்று கேட்க, ''இன்னும் பலமுறை பாடினாலும் இன்னும் நன்னா பாடியிருக்கலாமேன்னுதான் எனக்குத் தோணும்'' எனப் பதில் சொன்னார் பட்டம்மாள்!

''கச்சேரி வாய்ப்புகளைத் தேடிப் போகாதே. உன் குறைகளைச் சரிசெய்து கொள்ள முதலில் முயற்சி செய்... அழைப்புகள் உன்னைத் தானாகத் தேடி வரும்'' என்பார். ''பட்டங்களுக்கு ஆசைப்படாதே... அவை வரும்போது வரட்டும். பட்டங்களை அடைவதால் நம் சங்கீதம் உயர்ந்துவிடுமா? உழைத்தால்தானே உயர்வு?'' என்று சொல்லுவார். ''ஒரு சிஷ்யன், குரு கற்றுத் தந்ததுக்கு விரோதமா பாடினா அதனால் அவனுக்குத்தான் பொல்லாப்பேயொழிய குருவுக்கு அல்ல,'' என்பார்.


''பாடிக்கொண்டே உயிர் விட வேண்டும்'' என்று ஆசைப்பட்ட பட்டம்மாளுக்கு, ஒரு ஆண்டுக்கு முன் மௌனமே சங்கீதத்தைக் காட்டிலும் உயர்ந்தது என்று தோன்றிப்போயிருக்க வேண்டும்! அன்பு நிர்ப்பந்தத்துக்காக சில வார்த்தைகள் அளவோடு பேசினார். பின்னர் முழு மௌனம். கைக்குழந்தையாக அவர் இருந்த போது, ரமண மஹரிஷி அவர் நாவில் தடவிய தேன் அவரை ரக்ஷித்தது போலும்! ரமண மஹரிஷியைப் போலவே உடல் உபாதைகளினூடே புன்னகையும் மௌனமும் மாறாமல் நீடித்தன. மௌன குருவான தக்ஷிணாமூர்த்திக்கு உகந்த வியாழக்கிழமை அன்று (16.07.09) அவர் அடி சேர்ந்தார்.


நாதோபாசனையின் உச்சகட்டம் ஆனந்தமயமான மௌனம்தான் என்பதற்கு சாட்சியாக அமைந்து விட்டது டி.கே.பட்டம்மாளின் சங்கீதமும் வாழ்க்கையும்.

படங்கள்: ஸ்ரீஹரி

பார்ப்பதற்கு வேற்றுக்கிரகவாசிகள் போல் தோன்றும். வெள்ளை மாவில் உருட்டியெடுத்தது போல் குச்சி குச்சி கை கால்கள், தலையணையை வைத்துக் கட்டியது போல் வயிறு. முட்டை போன்ற தலையில் கடுகு போல கண்கள், வாய், மூக்கு...

ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்ளும்; அறைக்கு அறை ஓடிச் செல்லும்; அழும்; சிரிக்கும்; சண்டை விட்டுக் கொள்ளும். எல்லாமே யாருக்கும் புரியாத புதிர் மொழியில்தான். என்றாலும் குடும்பமே தொலைக்காட்சிப் பெட்டி முன் உட்கார்ந்து குதூகலித்துக் குலுங்கிச் சிரிக்கும்.







மாஸ் ஹீரோக்களுக்குக் கூடக் கிடைக்காத இந்த அளவு வரவேற்பைப் பெற்றிருப்பவை வோடஃபோன் ஜூஜூஸ்தான்.

இந்த விளம்பரப் படம் மட்டுமல்ல; ஜூஜூஸ் எப்படி உருவாக்கம் பெற்றன என்ற வீடியோ படம் கூட நெட் ஸர்ச்சில் டாப் லிஸ்டில் உள்ளது!

ஜூஜூஸ் இடம்பெறும் வோடஃபோன் விளம்பரத்தைத் தயாரித்த நிர்வாணா ஃபிலிம்ஸின் எக்ஸிக்யூட்டிவ் ப்ரொட்யூஸர் ஸ்நேகா வர்மாவைச் சந்தித்தோம். ஜூஜூஸின் காமெடி மேளாவைக் காட்சியாக்கிய அவர்களின் அனுபவங்கள் இங்கே!

''ஓ அண்ட் எம் (ஆகில்வி அண்ட் மாத்தர் விளம்பர நிறுவனம்)மின் தென் ஆசியப் பிரிவின் க்ரியேட்டிவ் டைரக்டர் ராஜீவ்ராவின் ஐடியாதான் இது. அவருடைய ஐடியாவைக் கப்பென்று பிடிச்சு மக்கள் மனசுல நச்சென்று இடம் பிடிக்கச் செய்தவர் நிர்வாணா ஃபிலிம்ஸின் இயக்குநர் பிரகாஷ் வர்மா.


எங்களுக்கு இது ஒரு மிகப் பெரிய சவால். மிகக் குறைந்த அவகாசத்தில் அதாவது பத்து நாட்களில் முப்பது ஃபிலிம் எடுத்தாக வேண்டிய கட்டாயம். வோடாஃபோன் ஜூஜூஸ் விளம்பரம் ஷூட் செய்யப்பட்ட இடம் தென் ஆப்பிரிக்

காலின் கேப் டவுன்! மிக மிக ரகசியமாக நடத்தினோம்'' என்கிறார் ஸ்நேகா!

''புரொடக்‌ஷன் வேலைக்குப் போறதுக்கு முன்னாடி மூன்று வாரம் பயங்கரமா யோசிச்சோம். இரவுபகலா டிஸ்கஷன் நடந்தது. ஜூஜூஸ் அனிமேஷன் கிடையாது. இதில் நடித்திருப்பவர்கள் உண்மையான மனிதர்கள். பொதுவா அனிமேஷனை ரியலா காண்பிப்பாங்க. நாங்க ரிவர்ஸில் போனோம். ரியலான மனிதர்களை அனிமேட்டடா காண்பிச்சோம். சினிமா டோகிராஃபி, ஆர்ட் டைரக்டர், காஸ்ட்யூம் டிஸைனர், ஸ்டோரி போர்ட் குழு... என மிகப்பெரிய டீம்வொர்க் இது. தலைப் பகுதியை மாட்டி விடுவதற்கு முன்னால் ஸீன் என்ன என்று விளக்கி விடுவோம்...'' என்கிறார் பிரகாஷ் வர்மா.

''ஜூஜூஸின் உலகம் விசித்திரமானது. நார்மலாகப் போடப்படும் செட்டைவிட பன்மடங்கு லார்ஜ் செட் உபயோகப்படுத்தப்பட்டது. பலவிதமான புன்னகைகள், பல தினுசில் புருவங்கள், கோபம், அதிர்ச்சி, விஷமம், நக்கல் என ஒவ்வொரு உணர்ச்சிகளுக்கும் பிரத்யேக உடை, பாடி லாங்வேஜ் மூலமாக எமோட் செய்ய வேண்டும். ஜூஜூஸின் உலகம், அதன் செயல்பாடுகளைப் பதிவு செய்யப் பாடுபட்டோம். இன்று அதன் பிரமாண்ட வெற்றியால் வீ ஆர் வெரி ஹாப்பி...''

ச்சோ ச்வீட் ஜூஜூஸ்!





முதலில் குழந்தைகள் நடிப்பதாக இருந்தது. டைட்டான ட்ரெஸ்ஸில் அவர்கள் சிரமப்படுவார்கள் என்பதால், லோக்கல் ஆப்பிரிக்க நாடக நடிகர்களை வைத்து ஷூட் செய்தோம். இதில் பெண்களே அதிகம்(!).

இங்கு ட்ரெஸ்ஸைப் பற்றி கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். தலைப் பகுதிக்குத் தனி, உடல் பகுதிக்குத் தனி என வெவ்வேறு உடைகள். இறுக்கிப் பிடிக்கும் ஃபோம் மற்றும் ஃபைபரால் ஆன ஆடை. மூச்சு விடுவதற்கு மட்டும் தலைப் பகுதியில் ஒரு சிறிய துளை. என்கிறார் பிரகாஷ் வர்மாவின் மனைவி ஸ்நேகா வர்மா!

இந்த விளம்பரத்துக்கு முப்பது கோடி செலவழிந்ததாம்! இப்போது 'பைசா வசூல்! பைசா வசூல்!' என்று குதிக்கின்றன ஜூஜூஸ்!

- லதா சேகர்



நாடக ரசிகர்களைக் கலாய்க்கும் எஸ்.வி.சேகரிடம் சில குண்டக்க மண்டக்க கேள்விகள்.

உங்களைக் கடத்திக் கொண்டுபோய் ஜெ. முன்னால் நிறுத்தினால் அவரிடம் என்ன கேட்பீர்கள்?

''இதுக்கு யம்மா இவ்வளவு ஆர்ப்பாட்டம்? சாதாரணமாகச் சொல்லியிருந்தாலே வீட்ல சொல்லிட்டு வந்திருப்பேனேம்மா' என்பேன்.'' *(அதுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறீர்களா?)*

யார் முகத்தில் முழிக்கக்கூடாது?

'' 'என் முகத்தில் முழிப்பதைத் தவிர்க்க வேண்டும்' என்பவர் முகத்தில். அப்படிப்பட்டவரைப் பார்த்தால் முகத்தையே

அ.தி.மு.க.

கிராஃபிக்ஸில் திருப்பிக் கொள்ள வேண்டியதுதான்.''

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னம் காட்டுவீர்களா?

''ஆசை... தோசை... சரியான போங்கா இருக்கே. என் கன்னத்தில் அடிபட்டவுடன், தேடுவேன் அடித்தவனின் கன்னத்தை. நான் சட்டமன்ற வாஞ்சிநாதன்.'' *(கலைஞரே சொல்லிட்டார்... ஆமாம்!)*

சசிகலா, ''ஸாரி சேகர்... நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்'' என்றால்...

''சே... இப்படியொரு கெட்ட கனவா?''

ஒரு அரசியல் ஜோக் ப்ளீஸ்?

''வெளிமாநில சட்டமன்றம் (கவனிக்க) எதிர்க்கட்சி உறுப்பினர் அமைச்சரைப் பார்த்து 'முட்டாள்' என்று கத்திவிட்டார். 'உனக்கு இரண்டு வருடம்

தண்டனை' என்றார் சபாநாயகர். ஒரு வருடம் சபையில் கத்தியதற்காக; அடுத்த வருடம் 'அரசு ரகசியத்தை' வெளியே சொன்னதற்காக என்றார் சபாநாயகர்.''

ஆயிரம் உதை வாங்கிய அபூர்வ சிகாமணி யார் (அரசியலில்தான்)?

''தி.நகரில் உள்ள முக்கிய அ.தி.மு.க. பிரமுகரிடம் கேட்கவேண்டிய கேள்வி'' ('கலை'க்கறீங்களே சேகர்!)

நாளை முதல் நாடகம் போடக் கூடாது என்று கடவுள் ஆணையிட்டால்!

''சுவாமி! நீங்க நடத்தற நாடகத்தை விடவா என்று எதிர்க்கேள்வி



வின் வால்பையன்!

கேட்பேன். நாடகமே போடக் கூடாது என்று 50,000 ரூபாய் கொடுத்தால் உடனே நிறுத்திவிடுவேன் என்பேன். இப்படியெல்லாம் ஆபத்து வரும் என்றுதானே 1974 முதல் நாடகங்களை ஆடியோவிலும், வீடியோவிலும் உலவவிடுகிறேன் என்று சொல்லிச் சிரிப்பேன்.''

கோபம் வந்தால் எங்கே போய் முட்டிக் கொள்வீர்கள்?

''என்னைக் கோபப்படுத்தியவரின் தலையில்தான். மற்றவரைக் கோபப் படுத்தினால் ரியாக்ஷன் என்னவென்று அவருக்குப் புரியவேண்டுமே!''

அரசியல்வாதிகளுக்கு ஏற்ற சின்னம்?

''பாய்தான். தினசரி காலை 'சுருட்ட' வேண்டும் என்று ஞாபகப்படுத்துமே!''

அ.தி.மு.க.வில் நீங்க வால் பையனா?

''அ.தி.மு.க.வில் சிலர் எனக்கு 'அல்வா' கொடுக்கப் பார்த்தார்கள். விருப்ப மனு போடாமலேயே எம்.எல்.ஏ. சீட் கிடைக்கப்பெற்ற அதிர்ஷ்டக்காரன் நான். 'யாமிருக்க பயமேன்' என்று என்னை அரவணைத்துக் கொண்டவர்கள் மயிலாப்பூர் வாக்காளர்கள். ஜெயித்த பிறகு 'காட்டுல மழை'. இதைப் பொறுக்க முடியாமல் நமக்கே மறுபடியும் 'அல்வா' கொடுக்கப் பார்க்கிறார்கள். நான் எத்தனை பேருக்கு 'காதுல பூ' சுத்தியிருக்கேன்!''


– ஸ்ரீநி

மலையாள நடிகர் மோகன்லாலுக்கு ஆர்மியில் 'கௌரவ லெப்டினன்ட் கர்னல்' பதவி. நம்ம ஊரு நடிகர்களுக்கு யாரெல்லாம் கௌரவ பதவி கொடுப்பார்கள்? ரூம் போடாமலே யோசிச்சோம்...
• முரளி - முன்னாள் கல்லூரி மாணவர் சங்கம் • மோகன் - ஆர்கெஸ்ட்ரா சங்கம் • டி.ஆர் - அடுக்குமொழி, செம்மொழி சங்கம் • அஜித் - கார் ரேஸ் சங்கம் • சிம்பு - அக்குபிரஷர் சங்கம் • தனுஷ் - வீட்டோட மாப்பிள்ளை சங்கம் • விஜய் - டயட் சங்கம் • விஷால் - தோல்வியுற்றோர் சங்கம் • ஜெயம் ரவி - டப்பிங் ரீமேக் சங்கம் • ஜெய் - தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை சங்கம்

- டி.எம்.விஸ்வநா



கே.வி.ஆனந்த்





ஸ்டார்ட்... கேமரா... ஆனந்த்!

எங்கள் சொந்தக்காரர் வீட்டுக் கல்யாணம். அங்கே, 'கோபி! என்னை ஒரு ஃபோட்டோ எடு!' 'இரு... இரு... நானும் வந்து நின்னுக்கறேன்!' 'கோபி அண்ணா... கோபி அண்ணா... என்னையும் ஃபோட்டோ எடேன்... ப்ளீஸ்!' என்று வயது வித்தியாசமில்லாமல் அவனைச் சுற்றி வந்தார்கள். இத்தனைக்கும் காரணம் டாக்டரான அவனுடைய அப்பா வாங்கிக் கொடுத்திருந்த கேமராதான். கோபி என் மாமா பையன். அவனும் என்னைப் போலவே பிளஸ் ஒன்தான் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் கையிலிருக்கும் கேமரா, அவனுக்கு ஒரு ஹீரோ அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்தது. கோபி மீதும், அவன் கையில் இருந்த கேமரா மீதும் உள்ளூரப் பொறாமை ஏற்பட்டது. 'நாமும் எப்படியாவது அப்பாவிடம் சொல்லி ஒரு கேமரா வாங்கிடணும்; எல்லோரையும் கோபி மாதிரியே ஃபோட்டோ எடுக்கணும்' என்ற வெறியே ஏற்பட்டு விட்டது.

அந்தச் சமயம் என் அப்பா ஸ்ரீலங்காவுக்குச் சென்றார். ''வரும்போது என்ன வேண்டும்?'' என்று வீட்டில் ஒவ்வொருவரிடமும் கேட்டார். ''எனக்கு கேமரா வாங்கிட்டு வாப்பா'' என்றேன். அப்படி தைரியமாகக் கேட்டேனே தவிர, நம்பிக்கையில்லாமல்தான் இருந்தேன். ஆச்சர்யம்! அப்பா திரும்பி வந்ததும் புது கேமராவை என்னிடம் கொடுத்து, ''பத்திரம்! நல்லா எடு'' என்று தட்டிக் கொடுத்தார். அந்த அளவுக்கு என் திறமை மீது நம்பிக்கை வைத்து உற்சாகப்படுத்தியவர்.

என் அம்மா வழி தாத்தா-பாட்டி பழவேற்காட்டில் வசித்தார்கள். அங்கே போவது என்றால் எனக்கு ஏகக் குஷி. காரணம் அங்கே



சர்வாதிகாரி ஹிட்லர், ஒரு சோதிடரிடம், ''நான் எப்போது இறப்பேன்?'' என்று கேட்டாராம். அதற்கு ஜோதிடர், ''யூதர்களின் விடுமுறை நாளன்று நீங்கள் இறந்து போவீர்கள்'' என்றாராம். ''யூதர்களுக்கு என்றைக்கு விடுமுறை?'' என்று ஹிட்லர் கேட்க, ''நீங்கள் இறக்கும் நாள்தான் யூதர்களுக்கு விடுமுறை''

ஸ்ரீஹரி என்று ஒரு சினிமா தியேட்டர். இரண்டு நாட்களுக்கு ஒரு படம் போடு வார்கள். அங்கே நான் பார்த்தவை முத்து ராமன் - கே.ஆர். விஜயா நடித்த குடும்பப் பட ரகங்களாக இருக்கும்; அல்லது ஜெய் சங்கர் நடித்த 'எங்க பாட்டன் சொத்து' மாதிரி யான ஆக்ஷன் படங்களாக இருக்கும். நான் எந்தப் படமானாலும் விடமாட்டேன்.

பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரியிலும், அமெரிக்கன் லைப்ரரியிலும் மெம்பர் ஆன தும், கல்லூரி விட்டால் நேரே லைப்ரரிக்குப் போய்விடுவேன். அங்கே ஏராளமான ஃபோட்டோகிராஃபி சம்பந்தமான புத்தகங் கள் இருக்கும். அவற்றில் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு அதிலேயே மூழ்கி விடுவேன். ஃபோட்டோகிராஃபி பற்றி தியரிடிகலாக ஏராளமாகப் படித்துத் தெரிந்து கொண்டேன். உறவுக்காரர்கள் வீட்டில் ஏதாவது விசேஷம் எனக் காதில் விழுந்தால் அங்கே ஆஜராகி, ''எனக்கு நாலு ரோல் ஃபிலிம் வாங்கிக் கொடுங்க! என் கேமராவில் ஃபோட்டோ எடுத்துக் கொடுக்கிறேன். உங்களுக்கு ஃபோட்டோகிராஃபர் செலவு மிச்சம்'' என்று சொல்லி, ஃபிலிம் ரோலுக்கு ஏற்பாடு செய்துவிடுவேன். அதில் கொஞ்சம் மிச்சம் பிடித்து, கிணற்றடியில் மாடு, தேய்க் கப் போட்ட சமையல் பாத்திரத்தில் வந்து உட்காரும் காகம், குப்பைத் தொட்டி நாய், பூம்பூம் மாடு என்று இஷ்டத்துக்கு எடுத்துத் தள்ளுவேன்.

நான் இவரிடம்தான் ஃபோட்டோ கலையைக் கற்றுக் கொண்டேன் என்று எந்த ஃபோட்டோகிராஃபரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான் படித்த புத்தகங் களை எழுதிய ஒவ்வொரு புகைப்பட நிபுண ரையும் என் மானசீக குருவாகவே இன்றைக் கும் நினைக்கிறேன். குறிப்பாக ஆன்சல் ஆடம்ஸ் என்று ஒரு லேண்ட்ஸ்கேப் ஃபோட்டோகிராஃபர். அவர் எடுத்த புகைப் படங்களுக்கு நான் பரம ரசிகன்.

லேண்ட்ஸ்கேப் புகைப்படங்களில் ஈடுபாடு வந்ததற்கு முக்கியமான காரணம் என்னுடைய கூச்ச சுபாவம்தான். பெண்களி டம் பேசுவதற்கு எனக்கு எப்போதுமே ஒரு விதத் தயக்கம் உண்டு. ஃபோட்டோ கிராஃபர் ஆனவுடன், ஒரு பெண்ணை நிற்க வைத்து, 'இப்படி போஸ் கொடு, கையை இப்படி வைத்துக்கொள், முகத்தை அப்படித் திருப்பு, இங்கே பார்' என்றெல்லாம் சொல் லத் தயக்கமாக இருந்தது. ஒருசில சந்தர்ப்பங் களில் அப்படி ஃபோட்டோ எடுத்து முடிப் பதற்குள் வியர்த்து விறுவிறுத்துவிடும். இந்தக் கூச்ச சுபாவ பலவீனத்தை நாளடை வில் என் பலமாக மாற்றிக் கொண்டு விட்டேன்.

கல்கி பத்திரிகை மாதம் ஒரு மாவட்டம் என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்துக்குச் சென்று மக்கள் பிரச்னைகள் பற்றி விரிவாக எழுதிக்

• கி.ராஜேந்திரன்

"ஒரு மணி நேரத்துல கிளம்புங்க!"



என்று பதிலளித்தாராம் அந்தக் குறும்புக்கார ஜோதிடர்.

- வே.த.கதிர்வேல், வேலூர்-6.



கொண்டிருந்த சமயம். வைஷ்ணவா கல்லூரியில் பி.எஸ்ஸி., முடித்துவிட்டு, லயோலா கல்லூரியில் மாலை நேரத்தில் விஷுவல் கம்யூனிகேஷன் படித்துக் கொண்டிருந்தேன். என் அப்பாவின் நண்பர் மூலமாக பத்திரிகையாளர் சாருகேசியின் அறிமுகம் கிடைத்தது. அவர் ஒருநாள் கல்கி ராஜேந்திரனுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

சில மாதங்கள் கழித்து, ஒருநாள் காலை கல்கி ராஜேந்திரனிடமிருந்து ஃபோன் அழைப்பு. ''இன்று கல்கி குழு தென்னாற்காடு மாவட்டத்துக்கு ஒரு வாரப் பயணமாகப் புறப்படுகிறார்கள். அவர்களுடன் செல்ல வேண்டிய ஃபோட்டோகிராஃபர், குடும்பத்தில் நிகழ்ந்துவிட்ட சோகம் காரணமாக வரமுடியவில்லை.

ஒரு பெண்ணை நிற்க வைத்து, 'இப்படி போஸ் கொடு அப்படி போஸ் கொடு' என்று சொல்லத் தயக்கமாக இருந்தது



உங்களால் அவர்களுடன் இன்னும் ஒரு மணி நேரத்தில் புறப்பட்டுச் செல்ல முடியுமா?'' என்று கேட்டார். ஒரு விநாடி கூட யோசிக்காமல் ''ஓ! யெஸ்!'' என்று சொல்லிவிட்டேன்.

என்னிடம் கேமரா இருந்தது. ஃபிலிம் ரோல் கைவசமில்லை. அன்றைக்கு ஆகஸ்ட் 15. விடுமுறை நாள். ஸ்டுடியோவுக்குச் சென்று ஃபிலிம் ரோல் வாங்குவதும் முடியாது. ''இப்போ ஃபிலிம் ரோலுக்கு என்ன செய்வது? அவசரப்பட்டு, ஒப்புக் கொண்டு விட்டோமோ?'' என்று தோன்றியது. தயக்கத்துடன் விஷயத்தை ஆசிரியரிடம் சொல்ல, ''ஃபிலிம் ரோலுக்கு எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்னார். நான் புறப்படத் தயாரானேன்.

''அட்டைப் படத்துக்கான டிரான்ஸ்பரன்சி எடுக்கவும், உள்ளே கட்டுரைகளுக்காக புகைப்படங்கள் எடுக்கவும் வசதியாக இரண்டு கேமராவுடன் வாருங்கள்'' என்று சொன்னதால், அவசரம் அவசரமாக எதிர் வீட்டுக்காரரிடம் அவர் புதிதாக வாங்கி இருந்த கேமராவை கடன் வாங்கிக் கொண்டேன்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், கல்கி குழுவுடன் பயணமானேன். ஃபோட்டோகிராஃபர் யோகா மூலம் ஃபிலிம் ரோல்கள் கிடைத்தன. ஒரு வார காலம் தென்னாற்காடு மாவட்டத்தின் மூலைமுடுக்கெல்லாம் பயணம் செய்தோம். சென்னை திரும்பியதும், டிரான்ஸ்பரன்சிகளையும், புகைப்படங்களின் பிரின்ட்டையும் கொடுத்துவிட்டு, கல்கி எப்போ வெளியாகும் என்று ஆர்வமாகக் காத்திருந்தேன். இதழ் வெளியான நாளில், கல்கி வாங்கி, பரபரப்புடன் பார்த்த போது...

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்து வடிவம் :
எஸ்.சந்திரமௌலி

''பைக்ல அவசரமா போயிட்டு இருந்த நீ எதுக்கு இங்கே பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினே?''
''டூ வீலர்ஸ் பார்க்கிங்னு போர்டு இருந்தது.''
– ஈரோடு எஸ்.அபிராமி ஸ்ரீ


இவ்ளோ அவசரமா எங்கப்பா போயிட்டு வர்றே?
என் பெஸ்ட் ஃப்ரெண்ட் ஒருத்தன் மார்ச்சுவரில அட்மிட் ஆயிருக்கான். அவனைப் பார்த்துட்டு வர்றேன்!
இடி சிப்ஸ்
க.சத்தியநாராயணன்



''ஜாலி எலெக்ஷன் - ஆட்டம், பாட்டமா? எங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் பாடம், படிப்பு, லேப், எக்ஸாம்ஸ்'' என சிவாஜி கணேசன் ரேஞ்சில் பேசி விட்டு, ''ஏன்னா... எங்க காலேஜ் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு... ஸ்ட்ரிக்ட்டு... ஸ்ட்ரிக்ட்டு'' என்று சிவாஜி பட டயலாக்கை எடுத்து விட்டார் (11 அரியர்ஸ் வாங்கி அரியணை ஏறியிருக்கும்) கோபிநாத்.

'அப்போ திறமைக்கு இங்கே இடமில்லையா?' என்று நாம் உணர்ச்சிவசப்பட பொங்கியெழுந்தனர் லியோனி மேடமும், ரோஸலின் மேடமும்.

''எங்க காலேஜ்ல பாடும் குயில்கள் இருக்காக, ஆடும் மயில்கள் இருக்காக, பாட்டு எழுதும் சரோஜினிக்கள் இருக்காக, ஏன் கஜினி ஸ்டைல்ல (மொட்டை போட்ட அல்ல) உடம்ப கும்முனு வளர்த்த பாடி பில்டர் ஷண்முகநாதன் இருக்காக''என தங்கள் கல்லூரிக் கண்மணிகளின் புகழ் பாடி பாட்டுக்குப் பாட்டு பாட ஒவ்வொரு மாணாக்கர்களாய் அழைத்தனர்.

'பரவாயில்லையே ஃபார்முக்கு வந்துட்டாங்க' என்று நினைப்பதற்குள்,

''யம்மா! யப்பா... சும்மா போஸ் கொடுக்க மட்டும் ஒரு பாரா பாடுங்கம்மா...




கமலநாதன்

நீ மட்டும் பேசினா... லூசு

Boy : டாக்டர் எனக்கு இருபது வயது ஆச்சு, இன்னும் மீசை வரல!

டாக்டர்: லவ் பண்ணிப்பாரு... மீசை என்ன தாடியும் சேர்ந்து வரும்!

- டி.விஜய், பி.காம். மூன்றாம் ஆண்டு.

பாடுங்கப்பா போதும்'' என நம் கற்பனையில் கல்லைப் போட்டனர். மேடம் கட்டளை ஏற்று மேடை ஏறிய பாடும் வானம்பாடிகள், சட் சட்டென மைக்கைத் தொட்டேன் பேர்வழி, மைக்கேல் போல பாடினேன் நேர்வழி என ஃபோட்டோவுக்காகப் பாடி ஆடிவிட்டு வந்த னர்.


''மேடம், மேடம் இவங்களை ஃபோட்டோ புடிங்க... அதோ அவங்களை விட்டு டாதீங்க... அவங்களையும் ஜோரா போட்டோ எடுங்க'' என ஃபோட் டோவுக்கு போட்டா போட்டி.

''இதோ பாருங்க... என் ஃபோட்டோவுக்குப் பின்னாடி ஒரு பெரிய காதல் சரித்திரமே காத்தி ருக்கு. என் அத்தை பொண்ணு கிட்ட சவால் விட்டுருக்கேன்.

காதல் என்பது
Balance மாதிரி
நட்பு என்பது Charge மாதிரி
எவ்வளவுதான் Balance
இருந்தாலும்
Charge இல்லனா
Switched Offதான்!
- வினோத்



* வியோனி * ரோஸ்லின்



* காலேஜ் ஆணழகன்



டண் டனா டன்

Student 1 : அரியர்ஸ் எக்ஸாமா?
Student 2 : ஆமாம்.
Student 1 : நான் ரெண்டு அரியர்ஸ்
Student 2: அட! என்னோடது அதிகம் 11 அரியர்
Student 1: devics, m3 அரியர் இருக்கா?
Student 2: அதவிட அதிகம் m1, m2, m3 அரியர் இருக்கு. சரி எவ்வளவு நேரம் எக்ஸாம் எழுதுவே?
Student 1: ஒன்றரை மணி நேரம்!
Student 2: அட இது உன்னோடது அதிகம். நான் ஒன்லி 45 மினிட்ஸ்.
டண் டனா டன்

- குருப்பா கலாய்ச்சது

ராமு: என்னங்க அவரோட முகத்தைப் பார்த்ததும் எலிகள் மிரண்டு ஓடுது?''
சோமு: அவருக்கு 'பூனை'க் கண்ணாச்சே!
- எஸ்.மைத்ரேயி, பி.காம் இரண்டாம் ஆண்டு

என்னை 'கல்கி' புண்ணியத்துல இந்த உலகத்துல உள்ள எல்லா தமிழர்களும் பார்க்கப் போறாங்க. அவ்ளோ பெரிய ஆளு உன் ஆளுன்னு. அதனால மறக்காம, மறுக்காம என் போட்டோவைப் போட்டுருங்க. ப்ளீஸ்'' எனக் கோரிக்கை விடுத்தார் கமலநாதன்.


''கல்கி 'யூத் ஏரியா'வை என்ன உங்க காதல் மெசஞ்சர்னு நினைச்சீங்களா..? நாங்களும் கூடத்தான் உங்க காலேஜ் மாதிரி ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு'' என்று அதே பல்லவியைத் திரும்பப் பாடிவிட்டு அவரிடமிருந்து எஸ்கேப்!

குரல் வாக்கெடுப்பு... இல்ல... இல்ல எட்டுப்பட்டி நாட்டாமை கணக்கா நீங்களே ஒரு Ms.அண்ட் Mr.பிரபலத்தை சமமாக செலக்ட் பண்ணிக் கொடுங்கன்னு சொன்னோம். குசுகுசுன்னு கசகசாவைப் பெல்றாப் போல சப்தம். பிறகு காலேஜ் பிரபலங்களாக டி.யுவகணேஷ் அண்ட் ஹேமப்ரியாவை நம்ம முன்னால நிறுத்த, பரிசுகளைக் கொடுத்தோம்.

கவிதை வாசித்து கைதட்டல் வாங்கி, ஜோக்ஸ் சொல்லி ஜோன்னு சிரிக்க வெச்சு, அம்புட்டு அழகா டிரஸ் பண்ணி மேடையில் ஆடி மொத்தத்தில் ஜாலி எலெக்ஷன் ஒரு கலக்கலான கலை எக்ஸிபிஷனாக நடந்து முடிந்தது. கூடவே இருந்து எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சு தந்த முதல்வருக்கு தேங்க்ஸ் சொல்லிட்டு பொன்னேரியை விட்டு ஜூட்!

கண்கள் பேசினால் காதல்
கண்ணீர் பேசினால் நட்பு
பாசம் பேசினால் சொந்தம்
எல்லாரும் பேசினால் உலகம்
நீ மட்டும் பேசினால் லூசு

- எம்.அர்ச்சனா



நாம என்னதான் Aircel card, Airtel card போட்டாலும் தும்மல் வரும்போது Hutchன்னுதான் தும்முவோம்.

- கோபிநாத்







''நாங்கதான் Ms. & Mr.பிரபலங்கள்.



● ஹேமப்ரியா



● யுவகணேஷ்

வடிவேலு ரீமிக்ஸ்

லெக்சர் - முடியல...

க்ளாஸ் டெஸ்ட் - சொல்லவே இல்ல!

எக்ஸாம் - உக்கார்ந்து யோசிப்பாங்களோ?

பிட் - நாதாரித்தனம் செஞ்சாலும் நாகுக்காக செய்யணும்.

அரியர்ஸ் - ரிஸ்க் எடுக்கறதெல்லாம் எங்களுக்கு ரஸ்க் சாப்பிடற மாதிரி

ரிசல்ட் - இப்பவே கண்ணைக் கட்டுதே...

- எம்.சையத்

(ஐயோ... ஐயோ... காலேஜ் வந்த பிறகும் விளையாட்டுப் பிள்ளையாவே இருக்கீங்க... நாங்களும் சொல்வோம்ல...)

ஸ்ரீ தேவி கல்லூரி நிர்வாகியின் பேட்டி:

''எங்கள் கல்லூரி, சென்னையின் மையப்பகுதியிலிருந்து தொலைவில் இருப்பதால், சென்னை நகரத்தின் பேரிரைச்சல் இங்கே சத்தமாக இருக்காது. இங்கு படிக்கும் மாணாக்கர்கள் அமைதியான சூழலில் பயில்கின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மாணக்கர்கள் கூட இந்த கல்லூரியில் BBA, BCA போன்ற படிப்புக்களை குறைந்த கட்டணம் செலுத்தி படிக்க வழி செய்து வருகிறோம்.

குறிப்பாக மாணவிகள் அதிகம் விரும்பி வந்து சேர்ந்து படிக்கும் ஒரு கல்லூரியாக இது திகழ்கிறது.

கிட்டதட்ட 1200 மாணாக்கர்கள் தற்சமயம் இக்கல்லூரியில் பயின்று வருகிறார்கள். இக்கல்லூரியை மிகச்சிறந்த ஒரு பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்பதே எங்களது கனவு'' என்கிறார் இக்கல்லூரியின் செயலாளர் (Managing Trustee, Secretary) ரமேஷ்.

- நளினி சம்பத்குமார்



● ரமேஷ்

பதற வைக்கும் பருப்பு



திகைத்து நிற்கிறார்கள் மக்கள். துவரம் பருப்பின் விலை இப்போது 96 ரூபாயாக உயர்ந்து சதம் அடிக்க விரைகிறது! வெஜிடேரியன் உணவுக்காரர்களுக்கு புரோட்டீன் கிடைப்பது பருப்பின் மூலம்தான். இந்நிலையில் பருப்பு விலை உயர்வுக்குக் காரணம் என்ன என்பதைப் பட்டியலிட்டு நம்மைக் கலவரப் படுத்தியிருக்கிறார் மூவேந்தர் முன்னணி கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன்.

''நமது நாட்டின் பருப்புத் தேவையில் 25 சதவிகிதம் நாம் இறக்குமதி செய்து வருகிறோம். இவ்வருடம் வறட்சி காரணமாக பருப்பு உற்பத்தி குறைந்திருக்கிறது. எனவே, கூடுதல் இறக்குமதி செய்ய இருக்கிறோம். ஆனால், வேதனை என்னவென்றால் வெளிநாட்டிலிருந்து நமக்கு பருப்பு விற்கும் நிறுவனங்களும் நமது நாட்டில் அதை இறக்குமதி செய்யும் நிறுவனங்களும் ஒரே நிர்வாகத்தைச் சார்ந்தவையாக இருக்கின்றன. இவர்கள், மத்திய அரசில் ஆளும் அரசியல்வாதிகளுடன், கூட்டுச் சேர்ந்து கொண்டு கூட்டுக் கொள்ளை அடிக்கிறார்கள். அடுத்த தேர்தல் செலவுக்கு முதல் கொள்ளையை பருப்பு இறக்குமதியில் துவக்கியுள்ளார்கள்! போதாததற்கு தூத்துக்குடி துறைமுகத்தில் வந்திறங்கிய பருப்பு கன்டெய்னர்கள்,


• தி.வெற்றிச் செல்வன்

இன்னும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ரிலீஸ் செய்யப்படவில்லை. காரணம், அவற்றிலுள்ள பருப்பைச் சோதனை செய்து, தரச் சான்றிதழ் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், துறைமுகச் சோதனைச் சாலை வேலை செய்யவில்லை. விலைவாசி உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம்'' என்கிறார் சேதுராமன்.

தூத்துக்குடி துறைமுக அதிகாரிகள், பருப்பு வியாபாரிகளிடம் பேசினோம்...

''கன்டெய்னர்களில், கனடா, அமெரிக்கா நாடுகளிலிருந்து பட்டாணி, கொண்டைக் கடலை, மசூர் (துவரம் பருப்பு ரகம், சத்துணவுக்குப் போடப்படுவது) ஆகியவை வந்திருக்கின்றன. கஸ்டம்ஸ் நடைமுறைகள் முடிந்த பிறகு, மாதிரி எடுத்து பாளையங்கோட்டை பொதுச் சுகாதார ஆய்வகத்துக்கு அனுப்பி விடுகிறார்கள். அங்கிருந்து ஏழு நாட்களில், தர அறிக்கை வந்துவிடும். பருப்பு கன்டெய்னர்கள் க்ளியர் ஆகாமல் இருக்க கஸ்டம்ஸ் அதிகாரிகள் செய்யும் தாமதம்தான் காரணம்'' என்றார்கள் துறைமுக அதிகாரிகள்!

''எங்கள் ஊழியர்களின் எண்ணிக்கை



குறைவாக இருந்தாலும் மாதிரிகள் வந்த உடனேயே தரஅறிக்கை அனுப்பி விடு கிறோம்'' என்கிறார், பாளையங்கோட்டை பொதுச் சுகாதார ஆய்வக அதிகாரி. இச் சோதனைச் சாலை தமிழக அரசுக்குச் சொந்த மானது. ஆனால், விவகாரம் என்னவெனில் சமீபகாலம் வரை மாதிரியை எடுத்து அனுப்பிவிட்டு சம்பந்தப்பட்டவர்களை உரிய விதத்தில் 'கவனித்தால்' கன்டெய்னர் கள் க்ளியர் செய்யப்பட்டு வந்தன என்று சொல்கிறார்கள். 'இப்போது, விஜிலன்ஸ் கண்காணிப்பு அதிகமாக இருப்பதாலும், பன்றிக் காய்ச்சல் எச் சரிக்கை காரணமாகவும் தான் தாமதம்' என்கின்ற னர். இதற்கும் மத்திய அரசின் கப்பல் துறைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை யாம். ஆகவே, மூவேந்தர் முன்னணியின் தலைவர், கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசனை நோக்கி எழுப்பியுள்ள கேள்வியில் அர்த்தமில்லை என்கிறார் கள்!

● சேதுராமன்



விலை!



"வெளிநாட்டிலிருந்து பருப்பு ஏற்றுமதி செய்யும் நிறுவனமும், நம் நாட்டில் அதை இறக்குமதி செய்யும் நிறுவனமும் ஒரே நிர்வாகத்தைச் சேர்ந்தவை!"

"நமது நாட்டில் கர்நாடகா, குஜராத், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களில் பருப்பு உற்பத்தி ஆகிறது. சமீபத்தில் 7 மாநிலங்கள், பொது விநியோகத்துக்காக பருப்பு கொள் முதல் செய்ததால் தாறுமாறாக விலையை ஏற்றிவிட்டார்கள் வியாபாரிகள். தூத்துக்குடி கன்டெய்னர்களில் உள்ள சரக்குகளில் மசூர் பருப்பு வகை வடமாநிலங்களுக்குச் செல் பவை. மற்றவை தமிழகத்துக்கு. வெளிநாட்டு ஏற்றுமதியாளரும், நம் நாட்டு இறக்குமதி யாளரும் ஒருவராக இருப்பதால், அரசு கொடுக்கும் 15% மானியப் பயன் மக்களைச் சென்றடைவதில்லை. மற்றபடி பருப்பு வியா பாரத்தில் ஆன்லைன் மற் றும் யூக அடிப்படையில் செய்யும் வியாபாரத்துக்கு அனுமதி கிடையாது'' என் கிறார் மதுரை பருப்பு வியாபாரிகள் சங்கச் செய லாளர் வெற்றிச் செல்வன்.

இதற்கிடையில் டிசம் பரிலிருந்துதான் விலை குறையும் என்றும், எனவே, பருப்பு இறக்கு மதிக்குத் திட்டமிட்டுள்ள தாகவும், தமிழக உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு கூறியிருக்கிறார். இந்நிலையில் துவரம் பருப்பின் விலை 5 முதல் 10 ரூபாய் வரை குறைந் தால் கூட, அது தற்காலி கமே என்கின்றனர். ஏனெ னில் வியாபாரிகள், பதுக்க வாய்ப்பிருக்கிறது. ரேஷ னும் கிடைப்பதில்லை. 1960களில், 'பக்தவத்சலம் அண்ணாச்சி பருப்பு விலை என்னாச்சு?' என்று கோஷமிட்டது தி.மு.க.! இப்போது யாரை நோக்கி நாம் கோஷம் போட!

- ப்ரியன்

நாட்டு நடப்புக்கு ஒரு பட்டி - தொட்டி வீராங்கனையின் டபுள் ஸ்ட்ராங் கமெண்ட்...

என் தொண்டர்கள் ரீடா பஹுகுணாவுக்கு எதிரா வீதியில இறங்கித் தங்கள் கோபத்தை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தா, உ.பி. என்ன, இந்தியாவே கிடுகிடுந்துப் போயிருக்கும். மத்திய அரசுக்கு, அவசர நிலைப் பிரகடனம் செய்வது தவிர வேற வழியில்லாம போயிருக்கும். இது தவிர்க்கப்பட்டதற்காக காங்கிரஸ் என்னிடம் நன்றி பாராட்ட வேண்டும்.

- மாயாவதி.

அதுக்காண்டி இன்னுமொரு நூறு சிலை செஞ்சு திறந்து வைச்சுக் கொண்டாடப் போறியா தாயி?

தெரியாமத்தான் கேட்கறேன்...



கலைஞர் விரும்பினால் இடைத் தேர்தலில் நிற்பேன்.

- மு.கண்ணப்பன்

இங்கே கொடிகட்டிப் பறக்கற கழகங்க திராவிட முன்னேற்றத்துக்கா தனிநபர் முன்னேத்தத்துக்கா...? த.மு.கக்கன்னு பேர் மாத்திட்டா இன்னா கண்ணப்பரே?

அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா வீட்டில் (ஆலங்குளம்) 4,53,000 ரூபாய் பணத்தைக் களவாடிய குற்றச்சாட்டின் பேரில், சாந்தி, லக்ஷ்மி என்ற வீட்டுப் பணிப் பெண்கள் இருவர் கைது.

அரிசி - பருப்பு விலை ஏறித்தான் போச்சே; அதுக்காட்டி அம்மாந் துட்டைக் கொண்டாந்து வூட்லியா வைச்சுக்கிறது?

செவிப்புலன் குறைபாடு உள்ளோருக்கான அரசு சிறப்புப் பள்ளியில் (சேலம்), கடந்த பத்து ஆண்டுகளாக

மாணவர் தேர்ச்சி ஜீரோ சதவிகிதம். 1998லிருந்து இங்கே 10 - 11 வகுப்புகளுக்கு கணக்கு வாத்தியாரே இல்லை. பத்து வருடங்களாக நான்கு ஆசிரியர் பதவிகள் நிரப்பப்படாமலே உள்ளன.



- கவர்மென்டுல புகார் சொன்னா, செவிடங் காதுல சங்கு ஊதுற மாதிரி தானே?

கோலூர் (ஆந்திரா) எம்.எல்.ஏ. டி.வி. ராமாராவ் பாலியல் பலாத்கார குற்றத்துக்காகக் கைதானார். ஆறு பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்துள்ளது உளவுத்துறை இந்த 'ராமரை'.

- விசாரிச்சு தீர்ப்புச் சொல்ல பதினாறு வருஷம் போதுமா தெரிலியே?

''ராமாயணத்தைத் தொடர்ந்து விமர்சிப்பேன்.'' - கருணாநிதி

- இடிக்கறது ராமாயணம், படிக்கறது குரான் - பைபிளாங்காட்டியும்...?

குன்னூரில் அ.தி.மு.க. செயற்குழு அவசரக் கூட்டம். புரட்சித் தலைவிக்கு யானைகள் - குதிரைகள் அணிவகுக்க, சீர்மிகு வரவேற்பு.

- அவசரக் கூட்டத்துக்கே யானை, குதிரைன்னா... நிதானக் கூட்டத்துக்கு ஒட்டகச்சிவிங்கி காண்டாமிருகமா...

கலைஞர் எழுதிய 'உதய சூரியன்' என்ற பிரசார நாடகத்திலிருந்து ஒரு தாலாட்டுப் பாடலை மு.க.ஸ்டாலின் சட்டசபையில் பாடினார்.

- தூங்கறவங்களை எழுப்புறதுக்கா? தூங்காதவங்களைத் தூங்கவைக்கறதுக்கா...? தெரிலியே கண்ணு!

சுருளிப்பட்டி தைலா

ரத்னா சித்த மருத்துவமனை
மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையம்

பரவும்படை - சோரியாசிஸ்

சோரியாஸிஸ்! தோலில் பரவி வரும் இந்தப் படையானது நகரங்களில் நாகரிக வாழ்வு வாழும் மக்களிடம்தான் அதிகமாகப் பரவி வருகிறது என்று தமது மருத்துவமனைக்கு வரும் விசிட்டர்களைக் கணக்கிட்டுக் கருத்துச் சொல்கிறார் டாக்டர் கே. திருத்தணிகாசலம். இவர் ரத்னா சித்தா மருத்துவமனை மற்றும் மூலிகை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர்.

சோரியாஸிஸ் எனப்படும் இந்தப்படை தமிழகத்தில் இருப்பதைந்து ஆண்டுகளாகத்தான் வியாபித்துள்ளது. அதற்கு முன்பு ஏற்பட்ட பசுமைப் புரட்சித் திட்டத்தின் போது, வயல்களிலும் தோப்புகளிலும் இடப்பட்ட இரசாயன உரத்தால் இது தோன்றியிருக்கக்கூடும். அது சமீப காலமாக அதிகமாகி வருகிறது. இது முதலில் தலையில் 0.2 தடிமனில் வட்ட வடிவில் தோன்றும். பிறகு கை, கால்களில் தோன்றி, இறுதியில் முகத்தில் தோன்றும் என்றார் டாக்டர் திருத்தணிகாசலம்.

சோரியாஸிஸ் பரம்பரை வழியே பரவுமா, தொற்று நோயா?

இது பரம்பரையாக வராது; பரவக் கூடியதுமல்ல. உடலில் இரசாயனப் பொருட்கள் கூடுதலாகிப் போனதன் வெளிப்பாடுதான் சோரியாஸிஸ். இது தோலுடன் நிற்பதில்லை. சிலருக்கு நகம் அரித்துக் கொண்டே போய் சிதைந்துவிடும். எலும்பையும் தாக்கிவிடும். அப்படிப் பாதிக்கப்பட்டவருக்கு, எலும்புகள் சந்திக்கும் இடங்களில் தோள் இணைப்பு, கை, கால் மூட்டுகளின் புறத்தோலில் வட்டமாகப் படை தெரியும். இது சோரியாடிக் ஆர்த்ரைடிஸ் எனப்படும் இத்தகைய பிரச்னையை எந்த வயதினருக்கும் வரலாம்.

சோரியாஸிஸ், சோரியாடிக் ஆர்த்ரைடிஸ் இரண்டு கோளாறுகளுக்கும் எங்கள் மருத்துவ மனையில் வெள்ளருகு, அருகம் புல், ஆவாரம்பூ, வில்வம் கலந்த மூலிகை உள்ளுக்குக் கொடுத்து, முதலில் இரத்தத்தைச் சுத்தம் செய்வோம். பிறகு ஆடுதீண்டா பாளை, கார்போகி கலந்து தயாரிக்கப்பட்ட தைலத்தை மேல் பூச்சுக்குக் கொடுக்கிறோம். சோரியாஸிஸ் முற்றிய நிலையில் இருந்தால், எங்கள் மருத்துவமனையில் அட்மிட் செய்து பத்திய முறையில் சிகிச்சை கொடுத்து இரண்டு, மூன்று வாரங்களில் முற்றிலும் குணப்படுத்துகிறோம். உடலுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் சில மூலிகை மருந்துகளை உள்ளுக்குச் சாப்பிட்டால், சோரியாஸிஸ் வராதது மட்டுமல்ல; நோய் எதிர்ப்புச் சக்தியும் பெருகும். அப்படிப் பெருகும் போது, தோல் சம்பந்தப்பட்ட எந்த நோயும் உங்களை அணுகாது. என்கிறார் சித்தா மற்றும் மூலிகை மருத்துவரான கே. திருத்தணிகாசலம்.



விபரங்களுக்கு
டாக்டர் க. திருத்தணிகாசலம்

ரத்னா சித்த மருத்துவமனை மற்றும்
மூலிகை ஆராய்ச்சி மையம்
750, பெரியார் நெடுஞ்சாலை, என்எஸ்கே நகர்,
அரும்பாக்கம், சென்னை - 106.

போன்: 044-2622 3828 / 2622 4688
• 94433 74341

www.rathnasiddha.com | e-mail: thiruthani12@yahoo.co.in

பெங்களூரு, சேலம், ஓசூர், ஈரோடு, கோவை, மதுரை, திருச்சி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகை, புதுவை, தருமபுரியில் டாக்டரை 9443374341 என்ற தொலைபேசியில் முன் அனுமதி பெற்று நேரில் சந்தித்து மருத்துவ ஆலோசனை பெறலாம்.



'யானைப்பசி'ன்னு புரியுது. இருந்தாலும் இது கொஞ்சம் ஓவர்தான்!

'நெட்' குசும்பு!



"ஐய..., உன் கை 'கப்' அடிக்குது கீழே இறக்கி விடு"



காய்ச்சலைப் பத்தியே பேசறீங்களே... இந்த மேக்கப் பத்தியும் பேசுங்க...


68வது ஆண்டு மலர்
எதிர்ல இருக்கறாரே
அவர் அளவுக்கு வெய்ட
ஏறினா போதும்!


எங்க ஊரு பிக்பாக்கெட்
பெரியசாமியைக் கூட ஓவர்டேக் பண்ணிட்டே நீ!



பொண்டாட்டியோட நச்சரிப்பு சூட்டைவிட
இது பரவாயில்லை!



வெய்ட் குறைய நீச்சல்
அடிக்கனும்னு டாக்டர்
சொன்னார். சாப்பிடறதுக்கு
முன்னாடியா...
பின்னாடியா?



கடவுளே...
இந்த இடைத் தேர்தல்ல வோட்டுக்கு
5000 தரணும்...

ரவுசு ராமையா


இடி சிரிப்ஸ்
கோவை. நாகி. பிரசாத்
இப்போதெல்லாம் மன்னர் ஏன் அந்தப்புரம் செல்வதே இல்லை?
புறமுதுகில் உள்ள காயங்களில் பல்லாங்குழி விளையாடுகிறார்களாம்!



நீலகிரி ஸ்பெஷல் நிறைவாய் இருந்தது. கூடலூர், சிம்ஸ் பூங்கா, தோடர் இன வீடு என அனைத்தையும் வெளியிட்டு இன்பச் சுற்றுலாவுக்கே அழைத்துச் சென்றுவிட்டீர்.

- கோவை நா.கி.பிரசாத்

'துப்பறியும் போட்டி' 'க்ரேஸி ட்ர்ட்' என்று உங்க அப்ரோச் ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு!

- பி.ஜெயபிரகாஷ், சர்கார்பதி

அடேங்ங்கப்ப்ப்ஆஆஆ!!! நீலகிரி மாவட்டத்தில் இவ்வளவு அற்புதமான விஷயங்களா? நம்ம ஊருக்குப் பக்கம்தான். இனிமே போய்ப் பாப்பம்ல...

- க.தமிழரசன், கோவை

நீலகிரி மாவட்ட ஸ்பெஷல், நீலகிரி எக்ஸ்பிரஸ் போன்று உத்வேகமும், அரியத் தகவல்களும் உள்ளடங்கி மிளிர்ந்தது.

- பகவதிபிரவீன், சென்னை - 53

உங்க அப்ரோச்

சங்கராபுரத்தைக் காண, பக்தியோடும் ஆவலோடும் காத்திருக்கிறோம்!

- ரெவின், சென்னை

மதுவினால் ஏற்படும் தீமைகளையும், அதன் பாதிப்புகளையும் கல்கி தலையங்கம் தெளிவாக விளக்கியது

- ஜே.துரைராஜ், சென்னை

'வலையோடு விளையாடு' சூப்பர் பகுதி ஸார். ஐம்பூதங்களின் பெயர்களை, செய்திகளுக்குத் தலைப் பாகக் கொடுத்திருக்கும் பாங்கை ரசித்தோம்.

- அ.முரளிதரன், மதுரை - 3

நம்ம ரயில்களின், அந்தக்கால வேகம் குறித்த

"டாக்டர் பலீஸ் ஆபரேஷன் இல்லாமல் என்னைக் காப்பாத்த முடியாதா?"

"முடியும்! அப்புறம் என் குடும்பத்தை யார் காப்பாத்தறது?"

வட்டமேஜை

கு.ஞானசம்பந்தனின் அனுபவ நகைச்சுவை, ரசித்துச் சிரிக்க வைத்தது!

- எம்.சம்பத், கரூர்

'ஒரு டீயின் கதை', 'ஊட்டி, உலகின் முதல் டீ எஸ்டேட்' என நீலகிரி மாவட்ட ஸ்பெஷல் உற்சாகத்தை 'ஊட்டி'யது; கூட்டியது.

- சி.என்.ரமாதேவி, சென்னை - 83

'தீராத விளையாட்டு விட்டலன்' பக்தித் தொடருக்கு வண்ணம் தீட்டுகிற வேதா, சாட்சாத் விட்டல பகவான் பாண்டுரங்கனை, கண்முன்னே நிறுத்தி விடுகிறார்.

- மயில்வீரன், திருவண்ணாமலை

பிடிச்சிருக்கு!

'70 முதல் 7 வரை' அதற்குள் முடித்து விட்டீர்களே! விரைவில் பாகம்-3 தொடங்குங்க.

-ச.ஸ்ரீதர வித்யாசங்கர், சென்னை - 28

மலரின் வாசனைக்கு விளம்பரம் எதற்கு? வழக்கம் போல கமகமவென டீ சாப்பிட்ட நறுமண சுவையுடன், கல்கியின் நீலகிரி மாவட்டச் சிறப்பிதழ் சுவஜோர்...

- ரேவதிப்ரியன், ஈரோடு-1

துப்பறியும் போட்டி இவ்வளவு சுலபமாக இருக்கிறதே! இன்னும் கொஞ்சம் கஷ்டமாகத் தரலாமே?

- எஸ்.வி.பார்த்தசாரதி, திருச்சி-5



இரவிமோகன், வாராவாரம் வழங்கும் பதில்களே எங்களுக்கு செம ட்ரீட் தான். இதில் அவருடன் மெகா சர்ப்ரைஸ் ட்ரீட்டா... கலக்கல்தான்!

- வே.ந.கதிர்வேல், வேலூர் -6

நீலகிரி மாவட்ட ஸ்பெஷல்- மலைகளின் அரசிக்கு கல்கி சூட்டிய மாணிக்க மகுடம்!

- பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு

ராஜேஷ்குமாரின் க்ரைம்.காம் பகுதிக்கு அசத்தலாகப் பொருந்துகின்றன சிநேகாவின் ஸ்டில்கள்... புன்னகை அரசியா... புயலா...!

- எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

துப்பறிய வாங்க போட்டி - 8 முடிவு

சரியான விடை எழுதியவர்களில் குலுக்கல் மூலம் ரூ.200/- பரிசு பெறும் ஐந்து பேர்...

1. என்.கோமதி - திருநெல்வேலி
2. கே.நாராயணசாமி - திருப்பத்தூர்
3. ஜி.டி.ராகவன் - பெரிய காஞ்சிபுரம்
4. எம்.ஹரிணி - வலங்கைமான்
5. ஆர்.பிரசன்னா - மதுரை

"அப்பா... காக்கா கத்தினா விருந்தாளிங்க வருவாங்களாம்... அவங்க திரும்பிப் போகணும்னா?"
"உங்க அம்மா கத்தணும்"

- ப.நவநீத கிருஷ்ணன்



சைலன்ட்டா சிரிங்க!...

காதல் மயக்கம்!





கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...


கோகுலம்


Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

புற்றுநோய்க்கு ஒரே இடத்தில் தீர்வு!

ONE STOP SOLUTION FOR CANCER

Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL





- PET CT SCAN
- All Endoscopies
- Linear Accelerator & Brachy Therapy
- Radiation • IGRT
- Surgical Oncology
- Medical Oncology





- பெட் சீடி ஸ்கேன்
- அனைத்து என்டோ ஸ்கோபி கதிர்வீச்சு
- லீனியர் ஆக்ஸிலரேடர் & உட்கதிர்வீச்சு
- IGRT
- புற்றுநோய் அறுவை சிகிச்சை
- புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு: (044) 22469200 / 66300300

PET CT CENTRE AT CANCER INSTITUTE (WIA) CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR, CH-20
24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI GROUP OF HOSPITALS

Lakshmi Nursing Home, Pallavaram
PET - CT Centre, Adyar
Dr. Kamakshi Memorial Multi Speciality Centre

1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Ph: 2246 9200, 66300300 Fax : 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org.
Website: drkamakshimemorialhospital.org.